# காவிய நாயகன்



வெளியீடு:
அகில இலங்கை எம். எச். எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றம்,
59, பிரதான வீதி, அக்கரைப்பற்று,
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009 - 07 - 28 - 70000.00
" 08.08 - 60000.00

# சமர்ப்பணம்

அல்லாஹ்வைப்
புகழ்ந்து அவன் தூதர்
றஹூலே கரீம் (ஸல்) அவர்கள்
மீது ஸலவாத்தும் கூறியவனாய்,
என்னைப் பெற்று, வளர்த்து ஆளாக்கிய
என் தந்தை மர்ஹூம் மீராசாஹிப்,
தாய் அவ்வாக்குட்டி ஆகியோரது
ஆசிகளை வேண்டியவனாய்
என் எழுத்துலக ஆசான்
மர்ஹூம் எச்.எம்.பீ. முகையதீன்
அவர்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிய நாயகன்

(நினைவு மலர்)


| | | |
|---|---|---|
| அட்டை வடிவமைப்பும் நினைவு மலர் ஏற்பாடும் | : | மீரா எஸ். இஸ்ஸதீன் |
| அட்டை அச்சு கலர் வேலைகள் | : | பிரேமதாச புளக் மேக்கர்ஸ் & பிரின்டர்ஸ், கொழும்பு. |
| டைப் செற்றிங் | : | கொம்ப்ரோ, அக்கரைப்பற்று. |
| அச்சகம் | : | செலக்ஸன் ஓப் செற் பிரின்டர்ஸ், அக்கரைப்பற்று. |
| வெளியீடு | : | அகில இலங்கை எம்.எச்.எம். அஷ்ர.்.ப் ஞாபகார்த்த மன்றம், 59, பிரதான வீதி, அக்கரைப்பற்று - 02, இலங்கை. தொ.இல./ பெக்ஸ் : 067 - 77986 |
| வெளியீட்ட திகதி | : | 2001.09.15 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை...

بسم الله الرحمن الرحيم

மறைந்த நமது தலைவரின் ஓராண்டு நினைவையொட்டி நினைவு மலர் ஒன்றை வெளியிட வேண்டும் என்ற சிந்தனை கடைசி ஒரு சில வாரங்களுக்கு முன்னர் தான் என் மனதில் கருக்கட்டியது.

கருவைச் சுகப்பிரசவமாக்க வேண்டும் என்ற எனது எண்ணத்திற்கு உதவி புரிய எனது ஊடகவியல் துறை சார்ந்த நண்பர்களின் உதவியை நான் நாடிய போது அவர்கள் முழு மனதாக பூரண ஒத்துழைப்பை எனக்கு நல்கினர்.

நூறல்ல ஆயிரம் பக்கங்களைக் கொண்ட தனி நூலொன்றை வெளியிடுவது என்னளவில் ஒரு சிரமமான காரியமாகத் தெரியவில்லை. ஆனாலும் சுமார் 120 பக்கங்களைக் கொண்ட இந்நினைவு மலரை வெளியிடுவதற்கு மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பேனா? என்பதை உறுதிப்படுத்துவதற்கு அல்லது நீங்கள் தீர்மானிப்பதற்கு உங்கள் கண் முன்னே மலரும் காவிய **நாயகன்** தான் பதில் கூற வேண்டும்.

தனியொருவனாகிய என்னால் தலைவரைப் பற்றிய நினைவு மலரொன்றை வெளியிடுவதற்கு நிதியியல் ரீதியில் நாதியற்றவன் என்பதனை நம் காவிய நாயகனும் அறிவான். ஆதலினால் நிதிவளம் கொண்ட நம் தலைவரின் கடாட்சங்களை வென்ற எத்தனையோ தனவந்தர்கள் என் கண் முன்னே தென்பட்டும். சில கடாட்சங்கள் மண் கூஜாக்கள் என்பதை மனதளவில் இப்போதுதான் நான் புரிந்து கொண்டேன்.

கடிதத்தலைப்பில் காவிய நாயகனின் முகத்தை நிழலாய்ப் போட்டால் அவருடன் நகமும் சதையுமாய் ஒட்டியிருந்தவர்கள் உதவி புரிவார்கள் என்று உள்ளம் பூரித்துப்போயிருந்தேன். ஆனால் உதவுவேன் என்றவர்களெல்லாம் என் குரலைத் தொலைபேசியில் கேட்டால் தொலைபேசியை அமுக்கி வைப்பதையும், கையடக்கத் தொலைபேசியில் (செல்போன்) என் தொலைபேசி இலக்கத்தைக் கண்டால் சில மணிநேரங்கள் செல்போனுக்கு ஓய்வு கொடுத்து பெட்டிக்குள் பூட்டி வைத்ததையும் செல்போன் மங்கை என்னை ஆறுதல் படுத்தியதையும் நான் ஒருபோதும் மறவேன்.

இவைகள் இப்படி இருந்த போதிலும் நல் இதயங்கள் படைத்த பலரும், தலைவரின் பித்துக்குழிகள் பலரும் அள்ளி அள்ளித் தந்தார்கள் அளவில்லாமல் தந்தார்கள். பெயர் சொல்ல வேண்டாம் என்று சொல்லியும் தந்தார்கள். **'அல்ஹம்துலில்லாஹ்'** நான் நினைத்ததை விடவும் மிகச் சிறப்பாக இந்நினைவு மலர் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

இந்த நினைவு மலர் வேலைகளில் நான் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான அனுமதி அட்டை எனக்குக் கிடைத்தது. அதனை இதயம் படபடக்க பிரிக்கின்ற போது என் மனம் நினைக்கின்றது இப்பரீட்சை நினைவு மலர் வெளியிடப்படும் 15ம் திகதிக்கு முன்னர் நடக்கக் கூடாது என இறைவனை வேண்டிய வண்ணம் பிரித்துப் படித்த போது பரீட்சை நினைவு மலர் வெளியீட்டுத் தினத்திற்கு மறுநாளாகிய 16ம் திகதி என இருந்தது.

நினைவு மலர் வேலைகளில் மூழ்கி இருந்ததனால் பரீட்சைக்குக் கூட படிக்க முடியவில்லை. சட்டக் கல்லூரி புகுமுகப் பரீட்சையைக் கூட எம் தலைவருக்காக தியாகம் செய்தவனாக இந்நினைவு மலர் வேலைகளில் ஈடுபட வேண்டி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இம்மலருக்கு நிதியுதவி சேர்த்தது மட்டும் தான் என் வேலை. மற்றவைகளெல்லாம் என் நண்பர்களின் வேலையேயாகும். குறிப்பாக இரவு பகல் என்று பாராமல் மனைவி, மக்கள் தனை மறந்து காவிய நாயகன் பால் கட்டுண்டு கண் துஞ்சாது கணனி, அச்சக அறைகளுக்குள் அடைந்து கிடந்து சிரத்தையுடன் செயற்பட்ட மூவர் என் இதயத்திலிருந்து உதற முடியாதவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில், ''என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்நன்றி கொன்ற மகர்க்கு'' படி இளைஞர் சேவை அதிகாரி ஜனாப். ஏ. ஜி. ஏ. கபூர் ஜே.பி. அவர்களுக்கும், ஆங்கில ஆசிரியரும் பத்திரிகையாளருமான ஜனாப். பி. ரி. இக்பால், ஆங்கில ஆசிரியரும் பத்திரிகையாளருமான ஜனாப. எம். பி. ஏ. ஹாறூன் ஆகியோருக்கும் எனது இதயத்தின் அடித்தளத்தில் இருந்து வரும் ஆழ்ந்த நன்றியினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மருதமுனை அமைப்பாளர் அல்ஹாஜ். ஏ. ஆர். ஏ. சத்தார். (வங்கி உத்தியோகத்தர்) அவர்களும் மர்ஹூம் எம். எச். எம் அஷ்ர.்.ப் அவர்களின் அன்புக்குரியவரான ஜனாப். எம். ஐ. எம். மசூட் அவர்களும் எனது விசேட நன்றிக்குரியவர்களாவார்கள்.


மேலும் இம்மலருக்கு ஆசிச் செய்தியினை மனமுவர்ந்து வழங்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி கௌரவ அல்ஹாஜ். றவூப் ஹக்கீம் அவர்களுக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினமாகிய கௌரவ ஜனாப். ஏ. எல். எம். அதாஉல்லாஹ் அவர்களுக்கும் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ அல்ஹாஜ். நூர்டீன் மசூர் அவர்களுக்கும் கௌரவ பசீர் சேகு தாவூத் அவர்களுக்கும் கௌரவ எம். எஸ். தௌபீக் ஆகியோகளும் எனது நன்றிக்குரியவராவார்கள்.

மேலும் இம்மலரில் தங்களது நினைவுகளை மீட்டிய கல்வியியலாளர்கள், சமயப் பெரியார்கள், அரச, தனியார் நிறுவனங்களின் தலைவர்கள், சகோதர ஊடகவியலாளர்கள், தனவந்தர்கள், நலன்விரும்பிகள், விளம்பர அனுசரணையாளர்கள் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நினைவு மலரின் கணனி வேலைகளை குறுகிய காலத்தினுள் அழகாகவும் நேர்த்தியாகவும் செய்து வழங்கிய அக்கரைப்பற்று கொம்ப்றோ நிறுவனத்தின் உரிமையாளர் ஜனாப். ஏ. கே. பௌசூல் அமீன் மற்றும் கணனிப் பக்க வடிவமைப்பாளரான ஜனாப். என். ரீ. அக்ரம், கணனி டைப்செற்றிங் செய்த எம். எச். இப்திகார், ஏ. கே. மிர்சாத் அவர்களுக்கும் குறுகிய காலத்திற்குள் அழகுற அச்சிட்டுத் தந்த செலக்ஷன் அச்சக உரிமையாளர் ஜனாப். சலீம் அவர்களுக்கும் இயந்திர இயக்குனர்களான ஜனாப். நசீர், ஜனாப். சிறாஜ் அவர்களுக்கும் இம்மலர் வேலையில் உதவிய எனது சிரேஷ்ட புதல்வன் அஹமட் அலி றஜாய் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மலர் அகில இலங்கை எம். எச். எம். அஷ்ர.்.ப் ஞாபகார்த்த மன்றம் வெளியிடும் முதலாவது நினைவு மலராகும். இதில் அனேக குறைபாடுகள், தவறுகள் காணப்படலாம் பெருமனங் கொண்டு பொறுத்தருள்வீர்கள் என நம்புகின்றேன்.

**எனது வீடியோப் படப்பிடிப்புச் செய்திச் சேவைக்காக தலைவரால் வழங்கப்பட்டது**



மீரா. எஸ். இஸ்ஸடீன்
தலைவர்,
அகில இலங்கை,
எம். எச். எம். அஷ்ர.்.ப்,
ஞாபகார்த்த மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய அரசியலை வழி நடாத்தும் முறையைத் தலைவர் கற்றுத்தந்துள்ளார்

**தேசியத் தலைவர்**

நமது ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ர.ஃ.ப் அவர்கள் வபாத்தாகி ஒரு வருடம் பூர்த்தியடைகிறது. நெஞ்சில் நிறைந்த அவரது நினைவுகளுடனும், விம்மிப்புடைக்கும் எனது தோள் நிறைந்த கடமைச்சுமைகளுடனும் வருடம் ஒன்று ஓடி மறைந்திருக்கிறது. அன்னாருக்கு வல்ல அல்லாஹ் ஜென்த்துல் பிர்தௌஸை பரிசளிக்க வேண்டுமென்று இறைஞ்சுகின்றேன்.

மறைந்த தலைவர் அவர்கள் சரியான சித்தாந்த தெளிவுடனும், நடைமுறை யதார்த்தத்துடனும், சேதமில்லாத விட்டுக்கொடுப்புடனும், முஸ்லிம்களின் தேசிய அரசியலை வழிநடத்தும் முறையை நமக்கெல்லாம் கற்றுத் தந்து விட்டு மறைந்திருக்கின்றார்கள். முக்கியமாக நயவஞ்சகத் தனத்தையும், குழிபறிப்புகளையும், அழித்தொழிப்பு முயற்சிகளையும் நேர்மையான கோபத்தோடு எதிர்த்து நின்று வெற்றிக்கொள்ளும் தைரியத்தை ஊட்டும் வகையில் வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார்கள்.

அவர் அரசியல் பாதையில் பயணம் போனபோது சென்ற இடமெல்லாம் அவரோடு தோலுரச துணைபோயிருக்கிறேன். இதன் மூலம் அனுபவம் கண்டிருக்கிறேன். அறிவு பெற்று இருக்கின்றேன். பாடம் கற்று இருக்கின்றேன். ஆனால் அன்று அவர் சுமந்த சுமைகளில் ஒரு சிறிய அளவையே பகிர்ந்து கொண்டிருந்தேன். துன்பங்களையும், சவால்களையும் தானே பாரமெடுத்து மற்றவர்களுக்குச் சேவைபுரியும் தனித்துவமான மனோபலம் கொண்டவராக தலைவர் விளங்கினார். அவர் பயணித்த பாதை கற்களும், முட்களும் நிறைந்து கரடுமுரடானதாக காணப்பட்டது ஒன்றும் இரகசியமானதல்ல.

நமது வாழ்விலும், அரசியல் நிகழ்விலும் அவரில்லாது கழிந்துபோன ஒருவருட காலம் அதிர்வுகளும், அதிர்ச்சிகளும், அரங்க நாடகங்களும் நிறைந்திருந்தாகக் காணப்பட்டது. ஆயினும் அவரிருந்து வழிநடத்துவது போலவே நமது அரசியல் வாழ்வு இன்றும் நகர்கிறது. அந்த மாமனிதர் பதித்துச் சென்ற இறுதிப்பாதச் சுவட்டில் எனது காலை சரியாகவும், ஆழமாகவும் வைத்தேனென்று உறுதியுற நம்புகின்றேன். மிகத் திடகாத்திரமாக பயணத்தை முன்னெடுத்திருகிறேனா என்பதை மக்கள் தான் சொல்ல வேண்டும்.

நம் தலைவர் அவர்கள் உயிரோடிருந்த போது வலிதாகச் செல்லுபடியான "அஷ்ர.ஃ.பின் அரசியல்" இன்றும் தள்ளுபடியாகாதபடி தொடர்ந்து அவரது அத்திவாரம் மிக உறுதியான தன்மையானது என்பதற்குச் சாட்சியாகும். அவரது மரணத்தில் கூட நாம் பாடம் கற்றுக்கொண்டோம். கடமையைச் சரியாகச் செய்தால் மரணத்தைக்கண்டு அஞ்ச வேண்டியதில்லை என்பதே அந்தப்பாடமாகும்.

மறைந்த தலைவருடைய தலைமைத்துவ அந்தஸ்தை எட்டிப்பிடிக்க எனக்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை சொல்ல முடியாவிட்டாலும், மிக விரைவில் அவருடைய இடத்தை நிரப்பும் பயிற்சிகளில் என்னை மிகவும் வேகமாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றேன் என்பதை என்னால் தெளிவுறக் கூற முடியும். பிரார்த்தனை மூலம் மூலவிசைகளெல்லாம் தட்டியெழுப்பி வெற்றி கண்ட நமது தாய்மார்களையும், சகோதரர்களையும் இதற்காக பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர் அஷ்ர.ஃ.ப் அவர்களின் ஆன்ம உலக ஈடேற்றத்திற்காகவும், அவர் உருவாக்கித்தந்த அரசியலின் ஈடேற்றத்திற்காகவும் பிரார்த்திக்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

உயிரோடிருந்த அஷ்ர.ஃ.ப் எனும் அரசியல் வழிகாட்டியைக் காட்டிலும் மரணித்த அஷ்ர.ஃ.ப் எனும் அரசியல் வழிகாட்டி சற்று உயர்வானவராக இருக்கிறார் என்பதில் எனக்க சந்தேகமில்லை.
அல்ஹம்துலில்லாஹ்.

ரவூப் ஹக்கீம் எம்.பி.
தேசியத் தலைவர்
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நம் தலைவர் மறைந்தாலும் அவர் ஏற்படுத்திய அன்புத் தடயங்கள் ஒரு போதும் மாறாது.**

**தவிசாளர்**

வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத பெரும் தடையங்களை ஏற்படுத்திவிட்டு நம்மை விட்டும் பிரிந்த பெருந்தலைவர் அஷ்ர.ஃப் அவர்களின் முதலாம் வருட நினைவு தினத்தையொட்டி அவர் அமைத்த ஸ்தாபனத்தின் தவிசாளராக இருந்து கொண்டு சில வரிகள் எழுதக் கிடைத்தமையையிட்டு திருப்தி கொள்கின்றேன்.

எனது தனிப்பட்ட அரசியல் வாழ்வும் அவர் பாசறையிலே அமைந்து, அவரை அடியொட்டியதாய் தொடர்ந்து செல்வதனை கூறுவதில் பெருமையடைகின்றேன். உயிரோட்டமுள்ள பாவலனாய், மக்கள் மனதை இலகுவில் கொள்ளை கொள்ளக் கூடிய நாவலனாகிய, உண்மையையே பேசி வெற்றி கண்ட நல்ல சட்டத்தரணியாய் பொலிவு கொண்ட ஆண்மகனாய், எல்லா வர்க்கத்தினருடனும் உறவாடக்கூடிய நல்ல மானிடனாய், நல்லிதயம் படைத்த நண்பனாய், எல்லோரும் போற்றுவதற்கு இவை இறைவன் அவருக்குக் கொடுத்த வரங்களாகும். மேலும் தலைமைத்துவத்திற்கு வரைவிலக்கணம் கொடுத்து, வாழ்ந்தது நமக்கெல்லாம் பெருமையைத் தேடித்தந்த ஓர் அம்சமாகும். ஆனால், ஒரு நல்ல சகோதரனை, உற்ற நண்பனை இழந்த சோகத்திலிருந்து நாங்கள் இன்னும் மீளவில்லை.

அதிகாரப்பரவலாக்கலுக்காய் பல சமூகங்களும் ஒன்று கூடிய மேசையில், தன் சமூகத்திற்கென்று ஒருவனும் இல்லையே என்ற குறையினால் வாடி, வெட்கித்து, அதனால் உந்தப்பட்டு, பல விமர்ச னங்களுக்கு மத்தியிலும் அவ்விமர்சனங்களை தனக்கு உரமாக்கிக் கொண்டு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்த பெருமகன் அவர். இதன் பிறகுதான் இந்நாட்டு முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக அடையாளப்படுத்தப்பட்டு மற்றவர்களால் கணக்கில் எடுக்கப்பட்ட சமுதாயமாக மாறியிருக்கின்றனர்.

அவருடைய அரசியல் வரலாற்றில் பேரினவாதிகளின் முஸ்லிம் தரகர்களும், பதவி மோகம் பிடித்தவர்களும், அவரை வீழ்த்துவதற்கு எடுத்த முயற்சிகள் இறைவனின் உதவியோடு ஒரு போதும் கை கூடியிருக்கவில்லை. முஸ்லிம் சமுதாயம் தொடர்பான அவருடைய இதய சுத்தியான போக்கும், ஆளுமையுடைய வைரமும்தான் இதற்கு காரணமாக அமைந்தது.

தன் மரணத்திற்குப் பின்பும் அவர் ஸ்தாபித்த ஸ்தாபனம் பெருமையோடும் செல்வாக்கோடும் பிரகாசித்திருப்பது மேலும் உறுதிசெய் கின்றது. பதவி மோகம், பண ஆசைகளையே இலக்காகக் கொண்டு அவரோடு வாழ்ந்து வந்த சிலருடைய போக்குகள்தான் இக்காலகட்டத்தில் பெரும் வேதனையைத் தருகின்றது. இவர்களு டைய நடவடிக்கைகளை மக்கள் நிராகரித்துள்ள போதிலும் இவர்களைப்பற்றி தனிப்பட்ட முறையில் கவலைகொள்ள வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் பெருந்தலைவர் உயிரோடு வாழ்ந்த காலத்தில் அவரை அழிப்பதற்கும் அவர் கொள்கைகளை முடக்குவதற்கும் அவர் உருவாக்கிய மரத்தினை வெட்டி வீழ்த்துவதற்கும் கோடாரிகளுடனும் புறப்பட்ட நம் தலைவரின் தனிப்பட்டதும், அரசியல் எதிரிகளாகவும் இருந்தவர்களை இவர்கள் தமக்குள் உள்வாங்கி இன்று ஆடுகின்ற நாடகம் இவர்களுக்கு நம் சமுதாயத்தில் பெரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளது.


இருப்பினும் அக்காலத்தில் தலைவரை வீழ்த்த முடியாது தோல்வியுற்று அவரின் போஸ்டர்களுக்கு சாணியும், சேறும் மாத்திரம் பூசி மகிழ்ந்து கிடந்தவர்கள் இன்று தம் தலைவரின் அழகிய போஸ்டர்களை தம் தோளில் சுமந்து மதில்களிலும், மரங்களிலும் ஒட்டித்திரிவது நமக்கெல்லாம் பெருமையைத் தருகிறது. ஆனால், இச்செயற்பாட்டின் மூலம் இவர்கள் மக்களின் செல்வாக்கைப் பெற நினைக்கும் நற்பாசை வெறும் பகற்கனவாகும். முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவில் அம்மக்களின் வாக்குப்பலத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் நம்தலைவர் தனிப்பட்டதும், அரசியல் எதிரியுமானவர்களைத் தங்களுள் இசைவாக்கிக் கொண்டு . முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளை வஞ்சித்து விடும் கொடூரச்செயல்களை இறைவன் அறியாததல்ல. தற்காலிகமான இந்த அதர்மச் செயல்கள் விரைவில் நீங்கி நீதிபிறக்கும். போராளிகளே! பொறுமையாக இருங்கள்.

நம் தலைவர் தன் சொந்த உறவுகளை விடவும் கட்சி உறவுகளில் அதிக அக்கறை கொண்டதனால் தொண்டர்கள் அவரை இழந்த சோகத்தில் சொந்த உறவுகளை விடவும் ஆழமாகவே அமிழ்ந்து கிடக்கின்றனர். அவரை நினைவு கூரும் இத்தருணத்தில் கட்சி உறவினர்கள் எல்லோருமே சொந்த உறவுக்காரர்களின் சொற்ப ஆசைகளை முறியடித்து, தலைவரின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல திடசங்கற்பம் பூணவேண்டும்.

ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் எம்.பி.
தவிசாளர்.
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முஸ்லிம் சமுதாயத்திற்கு அரசியல் உரிமையைப் பெற்றுத் தந்தவர்

**- அல்-ஹாஜ். நூர்டீன் மசூர் பா.உ.**

بسم الله الرحمن الرحيم

1948ம் ஆண்டிலிருந்து 1988ம் ஆண்டு வரையிலான 40 வருட கால அரசியல் வரலாற்றில் முஸ்லிம்களுடைய அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் முஸ்லிம்களுக்கென்று ஓர் அரசியல் தனித்துவம் இருக்கவில்லை. மட்டுமன்றி முஸ்லிம்களுக்கென்று ஓர் அரசியல் முகவரியும் இருக்கவில்லை. முஸ்லிம் சமுதாயத்தில் அரசியல் தலைவர்கள் அமைச்சர்கள் என்று எல்லோரும் இருந்தபோதிலும் கூட பாராளுமன்றத்திலே சுதந்திரமாக பேசக்கூடிய ஒரு குரலாக முஸ்லிம் குரல் இருக்கவில்லை.

1976ஆம் ஆண்டு புத்தளம் பள்ளிவாசலுக்குள் முஸ்லிம்கள் பொலிசாரினால் சுட்டுத் கொல்லப்பட்டதைக் கூறலாம். அப்போது அந்த முஸ்லிம்களுக்காக குரல்கொடுக்க எந்தவொரு முஸ்லிம் தலைவரும் இல்லை. தந்தை செல்வ நாயகம் மாத்திரமே முஸ்லிம்களின் படுகொலையைக் கண்டித்து குரல் கொடுத்தவராவார். முஸ்லிம்களுடைய பிரச்சினைகளும் நீறுபூத்த நெருப்பாக இருந்துவந்தது முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்தின் வாயில் ஓர் இரும்புப் பூட்டுப் போடப்பட்டிருந்தது. மட்டுமன்றி, கைகளிலும் கால்களிலும் இரும்புச் சங்கிலிகள் போடப்பட்டிருந்தன.

இவற்றையெல்லாம் உடைத்தெறிந்து முஸ்லிம் சமுதாயத்திற்கு அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பது பாராளுமன்றத்திலே சுதந்திரமாக பேசவைப்பது அன்றையக் காலகட்டத்தில் உடனடியாக தேவைப்பட்ட அரசியல் இலட்சியங்களாகும். அந்த இலட்சியங்களை நாங்கள் அடைந்து கொள்வதற்கு நமது தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் பட்ட துண்பங்களும் சிந்திய வியர்வைகளும் கொஞ்ச நஞ்சமல்ல.

இன்று இலங்கையின் தேசிய சமூகங்களைப் பற்றிப்பேசுகின்றபோது முஸ்லிம்களை ஒதுக்கிவிட்டு யாரும் பேசமுடியாது அரசியல் அதிகாரங்களைப் பற்றிப் பேசுகின்றபோதும் அதிகாரப் பங்கீடுகளைப் பற்றிப் பேசுகின்றபோதும் முஸ்லிம் சமூகத்தை ஒதுக்கிவிட்டு யாரும் பேசமுடியாது.


இலங்கை என்ற முழுமையைப் பற்றிப்பேசுகின்றபோது அந்த முழுமையில் பிரிக்க முடியாத ஒரு பங்குதான் முஸ்லிம் சமுதாயம் என்பதை ஏற்படுத்திய ஒரேயொரு அரசியல் சக்தி 'முஸ்லிம் காங்கிரஸ்' அதை நாங்கள் இன்று அடைந்திருக்கிறோம் என்றால் அதற்கு வித்திட்டவர் எமது தலைவர் அஷ்ரப் என்பதை இந்த உலகம் இருக்கும்வரை யாரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது.

எனவே அன்னார் விட்டுச்சென்ற பணிகளை நாம் சிரமேற்கொண்டு முழு முஸ்லிம் சமுதாயத்தையும் ஒரே மரத்தின் கீழ் ஒன்று திரட்டி அணிவகுத்து எமது உரிமைகளை வென்றெடுப்பதுதான் இன்று நமது முன்னுள்ள பாரிய குறிக்கோளாகும்.

கௌரவ அல்-ஹாஜ் நூர்டீன் மசூர்,
வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு - 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் தலைவர் எம்.எச்.எம் அஷ்ர∴ப்

- கௌரவ பஷீர் சேகுதாவூத் எம்.பி.

இந்த நாட்டிலே தேசிய அரசியல் என்று ஒன்று இருந்திருக்குமானால் அது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரேயாகும். இலங்கை அரசியலில் ஐம்பதுகளின் ஆரம்பம் சிங்களவர்களின் அரசியல், தமிழர்களின் அரசியல் என்ற இரண்டு கூறுகளை உற்பத்தி செய்தது. காலத்தின் தேவைக்கும் இலங்கை அரசியலின் போக்குக்கும் ஏற்ப முஸ்லிம்களுக்கென்று ஒரு தனித்துவமான அரசியல் இருக்கவில்லை. முஸ்லிம்கள் குயில் குஞ்சு பொரிப்பது போல் சிங்களவர்களின் அரசியலுக்குள்ளும், தமிழர்களின் அரசியலுக்குள்ளும், இரண்டாய்ப் பிரிந்தும் இரண்டாய்க் கலந்தும் தங்கள் தனித்துவத்தை மறந்தும், இழந்தும் இருந்தனர். நாற்பது ஆண்டுகளாக இந்நிலைமை தொடர்ந்தது. எண்பதுகளின் இறுதியில் முஸ்லிம்களின் அரசியல் அறிமுகம் செய்யப்பட்டது. மாகணசபைகளிலும், பிரதேச சபைகளிலும் அக்கட்சி சார்பான உறுப்பினர்கள் அங்கம் பெற்றனர். ஆம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற நமது கட்சிதான் இலங்கை அரசியலில் முஸ்லிம்களின் அரசியலைப் பிறப்பித்தது. இது செய்தற்கரிய, கிடைத்தற்கரிய பிரசவமாகும். இந்த நிகழ்வின் பிதா மகன்தான் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் என்ற இமயமாகும்.


முஸ்லிம்களின் அரசியல் பிறப்பதற்கு முன்பு பல முஸ்லிம் அரசியல்வாதிகள் தலைவர் என்ற பதம் கொண்டு அழைக்கப்பட்டனர். அவர்களெல்லாம் ஓர் ஊருக்கு அல்லது ஒரு தேர்தல் தொகுதிக்கு மட்டுமே தலைவராக இருந்துள்ளனர். இன்னும் ஒரு சிலர் சிங்களவர்களின் அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்த அரசியல் கட்சிகளால் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டோ அல்லது அமைச்சராக அந்தஸ்தளிக்கப்பட்டோ முஸ்லிம்களின் தலைவராக செயற்கையாகச் சமைத்துக் காட்டப்பட்டனர் . முஸ்லிம் காங்கிரஸ் பிறக்கும் வரை இலங்கை முஸ்லிம்களின் உண்மையான தேசியத் தலைவராக எவருமே இருந்ததில்லை. முஸ்லிம் காங்கிரஸின் பிறப்போடு எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் உண்மையான தேசியத் தலைவராக மக்களுக்குள் இருந்து இயற்கையாகவே பிறந்து வந்தார்.

எங்கள் தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் முஸ்லிம்களுக்கான அரசியல் கட்சியை ஈன்றெடுத்தார். ஒரு மனைவியைப் பெற்றிருந்தார். ஒரு மகனைப் பெற்றிருந்தார். அவருக்கு பின் சமூகத்துக்காக இன்னொரு தேசிய தலைவரையும் பெற்றுத்தந்தார். இதில் அவதானிப்புக்குரியது என்னவென்றால் மறைந்த எங்கள் தேசிய தலைவரை மக்கள் பெற்றெடுத்தார்கள். தற்போதைய தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களை, முதல் தேசிய தலைவர் அஷ்ர.்.ப் அவர்களே பெற்றுத் தந்தார் என்பதே ஆகும்.

**கௌரவ பஷீர் சேகுதாவூத் எம்.பி**
**தேசிய கொள்கை பரப்புச் செயலாளர்,**
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காட்டாற்று வெள்ளத்தில் அடிபட்டு சென்ற சமூகம் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்தினால் காலூன்றி தலை நிமிர்ந்து நிற்கின்றது.

**-கௌரவ எம். எஸ். தௌபீக்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த நாட்டில் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் நமது சமூகம் அரசியலில் பெரும்பான்மை இனத்தவரின் கால்களில் மண்டியிட்டு காட்டாற்று வெள்ளத்தில் அடிபட்டுச் சென்று எங்கோ ஒரு மூலையிலுள்ள கரையில் ஒதுங்கும் ஈசல்களாகவே காணப்பட்டது. முஸ்லிம்களின் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டவர்களும் பேரினவாத சக்திகள் வீசுகின்ற எச்சசொச்சங்களை உரிமைகள் என்று நினைத்து திருப்திப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில்தான் நமது தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் முஸ்லிம் சமுதாயத்தில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தலானார்.

முஸ்லிம் தலைவர்களின் இயலாமை என்பது முஸ்லிம் சமுதாயத்தின் அடிமைத் தளமாகும். இந்த அடிமைச் சங்கிலியை உடைத்து வீசிய ஒரு புரட்சிகரமான வீர வரலாறுதான் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸினுடைய வரலாறாகும். இந்த வரலாற்றின் அடிப்படையில்தான் நமது சமுதாயம் ஆட்சியை நிர்ணயிக்கக்கூடிய வல்லமை பொருந்திய ஒரு சமுதாயமாக மாறியிருக்கிறது.

இந்த நாட்டில் எத்தனையோ அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உருவாகி இருந்தபோதிலும் தான் சார்ந்திருந்த சமூகத்தையும் ஏனைய சமூகங்களையும் ஒற்றுமைப் படுத்தக்கூடிய தகுதியை நமது தலைவர் மட்டுமே கொண்டிருந்தார் என்பது அவர் உயிரோடு இருந்தபோதே நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் போக்கினை ஸ்தாபன ரீதியில் ஒழுங்கமைத்து வழிநடாத்திச் சென்ற நமது தலைவர் இலங்கை அரசியலில் தங்க மனம் படைத்த வைரமாகத் திகழ்ந்தார். அவர் இப்போது நம் மத்தியில் இல்லாவிடினும் அவர் பதித்த அரசியல் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாம் அனைவரும் ஒன்றுபட்ட சமூகமாக வாழ்வதற்கு அருள் புரியவல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக. அல்லாஹுதஆலா அவரை ஜென்னத்துல் பிர்தௌசில் சேர்த்து வைப்பானாக ஆமீன்!

வஸ்ஸலாம்.

**கௌரவ எம். எஸ். தௌபீக்**
பாராளுமன்ற உறுப்பினர்
(திருகோணமலை மாவட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் அரசியலுக்க முகவரி கொடுத்தவர் எம்.எச்.எம். அஷ்ரஃப்

**- எம்.எல்.ஏ. காதர், உப-வேந்தர்.**

இலங்கை அரசியலில் ஒளிச்சுடராய் விளங்கிய தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் மறைந்து இன்று ஒரு வருடம் பூர்த்தியாகி உள்ளது. அவரின் சேவைகளையும், சாதனைகளையும் மெச்சிப் புகழாதார் இல்லை என்றே கூறலாம். அவரது அயராத உழைப்பும் துல்லியமான சிந்தனையும் அவர் அரசியலில் கொண்டு வந்த கருத்துக்களும் இன்றும் பலரினால் பாராட்டப்பட்டு நினைவு கூறப்படுகின்றன. இந்த அளவு ஏற்றத்தையும் சிறப்பையும் மிக குறுகிய தனது அரசியல் வாழ்வில் அஷ்ர∴ப் அவர்கள் சம்பாதித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

''இலங்கை அரசியலில் முஸ்லிம்கள்'' என்று அடைமொழிக்குள் மாத்திரம் வைத்து பேசப்பட்ட முஸ்லிம் அரசியல் ஈடுபாட்டை கட்டமைத்து ''முஸ்லிம் அரசியல்'' என்று பேசத்தக்கவாறு அத்திவாரமிட்ட பெருமை அவரைச் சாருகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி ஒன்றை இரவு பகல் என்று பாராமல் மிகக் கடுமையாக உழைத்து ஸ்தாபித்தார். இக்கட்சியின் மூலம் முஸ்லிம் அரசியலுக்கு அழுத்தமும், அர்த்தமும் கொடுத்தார். முஸ்லிம்களின் பிரச்சினைகளை முறையாக இனம் கண்டு விமர்சித்தார். முஸ்லிம் மக்களை உயிர்ப்பித்து உணர்வூட்டினார். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளின் தீர்வுக்கு அவர்களை ஒன்று திரட்டி சக்திப்படுத்தினார். முஸ்லிம் அரசியல் நவீனத்துவப் பண்புகளை பெறுவதற்கு வழிவகுத்தார். எளிய சிறிய பிளவுகளிலிருந்து முஸ்லிம்களை விடுவித்து தேசிய நோக்குக் கொள்ளத்தக்கவாறு அவர்களின் எண்ணங்களையும் பெறுமானங்களையும் விரிவு படுத்தி புதுப்பித்தார்.

''அஷ்ர∴ப் என்பான் ஒரு சாதனையாளன்; சிந்தனையாளன்; கரும வீரன்'' என்றெல்லாம் பேசப்பட்டு இலங்கை தேசிய அரசியலில் முக்கிய பங்குதாரியாக அஷ்ர∴பின் தலைமைத்துவம் எழுச்சியுற்றபோது முஸ்லிம் அரசியலும் திசைமாற்றம் அடைந்தது. இதன்பின் முஸ்லிம் அரசியல் முழு நேர செயற்பாடு கொண்ட அரசியலாக பரிணமிக்க முடிந்தது. நோக்கமற்றுக் கிடந்த முஸ்லிம் அரசியலுக்கு முஸ்லிம் நலன் பற்றிய சிந்தனைகள் அரசியற் தத்துவங்களாயின. அரசியலில் தத்தளித்து நின்ற முஸ்லிம் மக்களுக்கு அஷ்ர∴பின் உதயம் புதிய வெளிச்சமாகியது.

இலங்கை அரசியல் வரலாற்றில் தனியானதோர் அத்தியாயத்தினை குறித்து பேசத்தக்க கைங்கரியங்களை, முஸ்லிம் அரசியல் அபிவிருத்திக்கு அவர் ஆக்கிக் கொடுத்திருக்கின்றார். இலங்கை அரசியல் ஆடுகளத்தில் அதி தீவிர ஆட்டக்காரராக அவர் திகழ்ந்ததனால் அரசியல் நெருக்கடிகள் பல எழுந்த போதெல்லாம் அவற்றை வளைத்துப் பிடித்து தன் வசமாக்கி வெற்றிபெற்றுள்ளார். அரசியல் சாணக்கியம் மிக்கவர். பேராற்றல் மிக்க பேச்சாளர். தனக்கு எதிராக எழுந்த எச்சவாலையும் விட்டுக்கொடுத்ததில்லை. அவற்றை அவர் எதிர்கொண்டு செயற்பட்டவிதம் இலங்கை மக்கள் அனைவரினதும் கரகோசத்தை பெற வைத்தது. உதாரணத்துக்கு வண. சோம தேரோ அவர்களோடு நேருக்கு நேர் நின்று தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட பாணியும், அவ்விவாதத்தை சவாலாக ஏற்று நிகழ்த்திய உரைகளும், அவரை சமகாலத்தில் ஒப்பற்ற அரசியல் தலைவர்களுள் ஒருவராக்கின.

முஸ்லிம் மக்களைப் பிரித்தெடுத்து தனித்தேசம் காணவேண்டும் என்ற ஆவல் அவரிடம் என்றும் இருந்ததில்லை. மாறாக இலங்கை அரசியலில் ஏனைய இனங்களைப்போல் சக்தியும் வலுவும் பெறுவதற்கு முஸ்லிம் சமூகம் ஒற்றுமைப்பட வேண்டும் என்றே கனவு கண்டார். இக்கனவினை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளையே அவர் தேடி உருவாக்கினார். இன்று அவர் எங்கள் மத்தியில் இல்லை. என்றாலும் அவரது அரசியல் பங்களிப்புகள் முஸ்லிம் அரசியல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை என்பதில் ஐயமில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் அத்திவாரத்துக்குள் இன்று தோன்றி வெளிப்படும் அரசியல் ஒழுங்குகள் - தேசிய ஐக்கிய முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் - என்பன முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிப்பாதையில் ஒரு இக்கட்டான காலகட்ட அரசியலே ஆகும். எனினும் இவ்வொழுங்குள் மேலும் வளர்ந்து இணைந்து விருட்சமாவதற்கேற்ற பல ஆக்கபூர்வமான சக்திகளை முஸ்லிம் சமூகம் கொண்டுள்ளது. மேலும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அதற்கான அரசியல் பற்றும், பிடிமானமும் இருக்கின்றது. இதனால் முஸ்லிம் மக்கள் இருக்கும்வரை முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற கோட்பாடு இருந்து கொண்டே இருக்கும். முஸ்லிம் அரசியல் இருக்கும் வரை மர்ஹூம் அஷ்ர∴ப் அவர்கள் எம்மோடு வாழ்ந்து கொண்டே இருப்பார்.

இத்தகைய மாமனிதனைப்பற்றி பல நூல்கள் எழுதப்படவேண்டும். அவ்வகையில் இன்று வெளியாகும் இந்நூல் காத்திரமான ஒன்றாக அமையும் என உறுதியாக நம்புகின்றேன். இப்பணி பயன்மிக்கதாய் அமைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உப வேந்தர்.
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
பல்கலைக்கழகப் பூங்கா,
ஒலுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SJ

# Sornam

## கல்முனை மாநகரிலே!

பொன்னொளிச் சுடர் பரப்பும் புதுவித நகைகளின் புகழரங்கம்

நம்பிக்கையூட்டும் நாணயமுடைய நகையரங்கம்

தரமிக்க தங்க நகைகளை தாராளமாகத்தரும் தன்னிகரில்லா அரங்கம்

கண்களைக் கவரும் கனக நகைகளின் காட்சியரங்கம்

பலரும் பாராட்டும் பாரம்பரிய அணிகலன்களின் எழில் அரங்கம்



**சொக்க வைக்கும் தங்க நகை உலகின் சொர்க்காபுரி**



**Sornam JEWELLERS** SJ **சொர்ணம் ஜுவலர்ஸ்** සොර්ණම් ජුවලර්ස්

அசல் தங்க நகைகளை 22 கரட் முத்திரை பதித்து விற்பனை செய்வதில் பன்னெடுங்காலம் அனுபவம் பெற்றவர்கள்

- KALMUNAI : 212, 214, MAIN STREET, TEL: 067-29121, 29860
- KALMUNAI : 59, BATTICALOA ROAD, TEL: 067-20191
- BATTICALOA : 33, MAIN STREET, TEL : 065-22715,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரை எண்ணும் போது நெஞ்சம் குமுறுகின்றது.

-எம்.ரீ. ஹசன் அலி-

இந்நாட்டில் வாழுகின்ற, வாழப்போகின்ற முஸ்லிம் சமூகத்தின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய நம்பிக்கையூட்டும் முஸ்லிம் காங்கிரஸ் என்னும் அத்தியாயத்தை எழுதிவிட்டு எழுதிய மை காய்வதற்குள் நம்மையெல்லாம் தவிக்க விட்டு அந்த மாமனிதர், மாபெரும் தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்கள் மறைந்து விட்டார். அவர்களை நினைவு கூறும் போதெல்லாம் நெஞ்சம் குமுறுகின்றது.

இந்த சின்னஞ் சிறிய உலகில் தன்னைச் சுற்றியிருந்த வட்டத்திற்குள் வலம் வந்து கொண்டிருந்த வித்தியாசமான பாத்திரங்களை நெறிப்படுத்தி ஒரு கச்சிதமான விடுதலை நாடகத்தை வெற்றிகரமாக இயக்கியவர் அவர்.

ஆனால் இன்று அவரால் உருவானவர்கள் தமது பாத்திரங்களை உருமாற்றிக்கொண்டு தாண்டவம் ஆடுகின்ற நிலைக்கு வந்துவிட்டனர். யார் யாரெல்லாம் இட்ட கட்டளைகளை நிறைவேற்ற தனக்கு பதவி தந்தவர்களின் ரணத்தையே உறுஞ்சும் அளவுக்கு தடுமாறிவிட்டனர்.

சொந்தம் பந்தம் ஆசாபாசம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ஓர் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட அந்த மாமனிதர் திடீரென நம் முன் தோன்றினால் எப்படியிருக்குமென நான் அடிக்கடி கற்பனை செய்வதுண்டு. அவ்வாறு ஒரு சம்பவம் நடக்குமானால் நிச்சயமாக இந்த உலகில் இனி வாழ விரும்பமாட்டார் என்பதே எனது ஊகம்.

குடும்ப ஆட்சி, பிரதேச வாதம் போன்ற கொடிய வழக்கங்களைக் கொண்டிருந்த முஸ்லிம் கிராமங்கள் இன்று அந்த வழக்கங்களைக் களைந்து ஓர் புதிய உணர்வலையில் பிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தியவர் மாமனிதர் அஷ்ர∴ப். அவரது மறைவுக்குப் பின்னர் அவரால் விரட்டியடிக்கப்பட்ட பிற்போக்கு சக்திகள் மீண்டும் மெல்ல தலை தூக்குவதாகவே படுகின்றன அதற்கான வழி வகைகளை திட்டமிட்டு பேரினவாத சக்திகள் ஏற்படுத்தி கொடுக்கின்றன.

கட்சியை ஒரு குடும்பச் சொத்தாகவும், தலைமைத்துவத்தை ஒரு பிரதேசத்துக்கு சொந்தமாக்கவும், போராளிகளால் போடப்பட்ட வாக்குப் பிச்சையால் வந்த அதிகாரங்களை கூட்டுப் பொறுப்பாக்கும் தலைவரின் சிந்தனையில் இருந்து விடுபட்டு முழு மகசூலையும் தனதாக்கும் சுயநலப் போக்கும் தனக்கு அதிகாரத்தைத் தந்த வாக்காளர்களின் முதுகில் குத்தும் வக்கிரத் தன்மையும் இன்றைய அரசியலின் புதிய சாணக்கியமாகிவிட்டன.

இந்த இழி நிலையிலிருந்து நமது உதிரத்தாலும் உணர்வுகளாலும் உரமூட்டி வளர்த்த முஸ்லிம் காங்கிரஸ் என்ற மரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

அரச பதவிக்காகவும், டாம்பீக வாழ்விற்காகவும் அற்ப சொற்ப ஆசைக்காகவும், சமூகங்களைக் காட்டிக்கொடுக்கும் சதிகாரர்களின் வலையிலிருந்து எம்மைக் காப்பாற்ற எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிய வேண்டும்.

கொந்தளிக்கும் இன்றைய அரசியல் சூழ்நிலையிலிருந்து முஸ்லிம் காங்கிரஸை மீட்டெடுத்த மர்ஹூம் அஷ்ர∴பின் பாதையில் வெற்றி நடைபோடும் தியாகச் செம்மல்கள் நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நலமாக வாழ இறைவன் அருள் புரிய வேண்டும்.

மர்ஹூம் அஷ்ர∴ப் அவர்களால் போடப்பட்ட திடமான அத்திவாரம் முஸ்லிம் காங்கிரஸ் எனும் கோட்டையை எல்லா விதமான அனர்த்தங்களிலிருந்தும் காப்பாற்றிவிட அருள் வேண்டி நிற்போம்.

**எம்.ரீ. ஹஸன் அலி**
**தேசிய பொருளாளர்,**
**ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIRAJ TRAVELS
&
# COMFORT GUEST HOUSE

For
Comfortable
Accommodation







சொகுசு பயணத்திற்கு...

## சிறாஜ் ட்ரவல்ஸ்

மன அமைதிக்கும்
நிம்மதியான உறக்கத்திற்கும்
நவீன வசதிகளுடன்


## கொம்போட் கெஸ்ட் ஹவுஸ்

இல: 100, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை,
(தெமடகொட ரோட்)
கொழும்பு - 10.

**SIRAJ TRAVELS & COMFORT GUEST HOUSE**

No: 100, Sri Vajiragnana Mawatha,
Dematagoda Road, Colombo - 10.
Tel: 01- 675608, Fax: 01 - 673054

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஷ்ரஃப் எனும் என் நண்பனின் இழப்பு என்றும் நெஞ்சை விட்டகலாதது

-டாக்டர் A. உதுமாலெப்பை

மறைந்த மாமேதை கவிஞர் திலகம் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கட்கும் எனக்குமிடையே இருந்த உறவு ஓரிரு வார்த்தைகளில் சொல்லிமுடிக்கக் கூடியதொன்றல்ல. ஓதப்பள்ளியில் ஒருமித்து ஓதிய அப்பாஸிய காலம் தொடக்கம் அவர் மறைகின்றவரை மிகவும் நெருக்கமான உறவினைப் பேணிவந்தவர்கள் நாங்கள். அரசியல் ஆத்மீகம் இலக்கியம் ஆகிய முத்துறைகளிலும் அவருக்கு மிகத்துணையாக இருந்தவன் நான். அவரது மறைவால் சிலர் நல்லதோர் அமைச்சரை இழந்தார்கள் பலர் நல்லதோர் தலைவனை இழந்தார்கள் வேறுசிலர் நல்லதோர் இலக்கியவாதியை இழந்தார்கள். நானோ நல்லதோர் நண்பனை இழந்தேன். அவனை இழந்து ஒராண்டு ஒடி மறைந்துவிட்டது. ஆனால் அவரை இழந்த துயர் மட்டும் நெஞ்சத்தே மாறாது மறையாது நிலைத்து நிற்கின்றது. அவர் வாழ்ந்த காலத்தில் இலக்கியவாதிகளையும் எழுத்தாளர்களையும் மிகவும் மதித்தார். விஷேடமாக தமிழகத்திலிருந்து இங்கு வருகை தந்த பல எழுத்தாளர்களை கௌரவித்து அவர்கட்கு விழா எடுத்து அவர்களது ஆக்கங்களை வெளியிட்டு வைத்தது மட்டும்போதாதென்று பொன்னாடைகளும் போர்த்தி பொற்கிளிகளும் கொடுத்தனுப்பினார்.

பன்னூலாசிரியர் திருச்சி-றசூல், திருப்பத்தூர் நாவலர் கௌஸ்முகைதீன், கவிஞர் மு.மேத்தா ஆகியோருக்கு எடுத்த விழாக்களுக்கு நான் தலைமை தாங்கினேன். ''கேட்டால் கொடுக்கின்ற வள்ளலுமுண்டு, கேளாமல் கொடுக்கின்ற தெய்வமுமுண்டு" மறைந்த தலைவர் தெய்வமில்லை என்றாலும் வள்ளலைவிட ஒரு படி உயர்ந்து அள்ளிக்கொடுத்தவர். திருச்சி றசூல் அவர்களது விழா கொழும்பில் எல்பின்ஸ்டன் மண்டபத்தில் சிறப்பாக நடந்து முடிந்தது. மறைந்த தலைவர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிவிட்டு வெளியே வருகிறார். மண்டபத்துக்கு வெளியே நானும் திருச்சி றசூல் அவர்களும் நின்றுகொண்டிருக்கின்றோம். எங்களிடம் சற்றுநேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டு விடைபெறுகின்றபோது தனது காற்சட்டைப் பையிலிருந்து எதையோ எடுத்து திருச்சி றசூல் அவர்களினது கையுள் புதைத்துவிட்டுச் சென்றார். எவ்வளவு கொடுத்தார் என்பது பற்றி ஒன்றுமே யாரிடமும் செல்லவில்லை. பின்னர்தான் நான் அறிந்தேன் அவர்கொடுத்தது 500 அமெரிக்க டொலர்கள் என்று. இந்த இடத்தில் எனது இனிய நண்பன் எழுத்தாளர் மானா மக்கீன் அவர்கள் எனது நினைவுக்கு வருகிறார். ஏனென்றால் திருச்சி றசூல் அவர்களுக்கு எடுத்த விழா றசூலைப் பற்றி மானா மக்கீன் எழுதிய புத்தகத்தை வெளியிட்டு வைத்த விழாத்தான். மானா மக்கீன் அவர்களது மகள் பங்களாதேஸ் டாக்கா சர்வகலாசாலையில் மருத்துப் பிரிவில் டாக்டராக பயில்வதற்கு தெரிவாகியிருந்தார். அவரது கல்விக்கு உதவுமாறு கேட்பதற்காக ஒருநாள் தாருஸ்ஸலாமிற்கு மக்கீன் சென்றிருந்தார். தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த காலம் தலைவருக்கு தலைநிறைந்த வேலைகள் உள்ள சமயம் அன்று தாருஸ்ஸலாம் கேட்போர் கூடத்தில் ஓர் புத்தக வெளியீட்டுக் கூட்டம் ஆரம்பமாவதற்கு சற்றுமுன் 6ம் மாடியில் மக்கீன் தலைவரைக் கண்டார். ''எனது மகள் டாக்கா பல்கலைக்கழக மாணவியாக தெரிவாகியுள்ளார். அவரை அங்கு அனுப்பி வைக்க வேண்டும்'' என்று கதையைத் தொடங்கியபோதே இந்தியா ராணுவ அதிகாரி ஒருவர் தலைவரைக் காண தலைவரின் அறைக்குள் வந்து விட்டார். மக்கீனால் கதையைத் தொடர முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள் புத்தக வெளியீட்டாளர்கள் வந்து தலைவரைக் கேட்போர் கூடத்திற்குள் அழைத்துச் சென்றார்கள். ''மக்கீன் பிறகு சந்திப்போம'' என்று சொல்லி விட்டு தலைவர் கூட்டத்திற்குச் சென்றுவிட்டார். அதன்பின்னர் தலைவர் மக்கீனைச் சந்திக்கவே இல்லை. விமான விபத்தில் தலைவர் மறைந்துவிட்டார். தனது தேவையை சொல்லிக்கொள்ளக்கூடக் கிடைக்கவில்லையே எனது துரதிஷ்டந்தான் என்று மக்கீன் துக்கப்பட்டுக்கொண்டார். தலைவர் மறைந்து ஒரு வாரத்தின் பின் மக்கீன் அவர்கட்கு எங்கோ இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. உங்கள் மகள் டாக்கா பல்கலைக்கழக மருத்துவப் பிரிவுக்கு தெரிவாகியுள்ளாரா? என வினவப்பட்டது. மக்கீன் ஆம் என்று பதில் சொன்னார் உங்கள் மகள் டாக்கா செல்வதற்கான விமான டிக்கட் செலவிற்கும். மிகுதியை மற்றைய செலவுகளுக்குமாய் கொடுக்குமாறு எங்களிடம் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் 50,000/= ரூபாய்களைத் தந்துள்ளார்கள். வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று தொலை பேசியின் மறு முனையிலிருந்து மக்கீனுக்குச் சொல்லப்பட்டது. மக்கீன் சென்று அப்பணத்தைப் பெற்றுக்கொண்டார். மக்கீனைத் தலைவருக்கு அறிமுகப்படுத்தியவன் நான் என்ற காரணத்தினால் மக்கீன் இதனை என்னிடம் சொன்னார் அவரது கண்கள் ஆறாய்ப் பெருகியது நாதழுதழுக்க ''செத்தும் கொடைகொடுத்த சீதக்காதியைப் பார்த்ததில்லை ஆனால் அந்த இடத்தில் அஷ்ர.்.ப் அவர்களைக் காண்கின்றேன்'' என்று சொல்லி அழுதார். இப்படி எத்தனையோ சொல்லலாம் அள்ளிக்கொடுத்த அந்த வள்ளலின் ஆத்மா சாந்தியடைவதாக அவரது கபுர் சுவர்க்கத்து பூஞ்சோலையாக செழிப்பதாக அல்லாஹுதஆலா அவரை ஜென்னதுல் பிர்தௌசில் சேர்த்து வைப்பானாக ஆமீன், வஸ்ஸலாம்.

**டாக்டர் - A. உதுமாலெப்பை**
சிரேஷ்ட துணைத்தலைவர்.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

*With Best Compliments From*

**MINOLTAA TRAVEL**

**Air Line Ticketing Agent**

Tel: 681302, Fax: 681507 E-Mail: minoltaa@slt.lk Telex: 23495 MINTAA CE

**MINOLTAA STUDIO**




Passport Colour Photos 1Mnt. Black & White Photos 15 Mnt.
For All Your Needs in Photography
Tel: 681302, 681323 Fax: 677134

**Govt: Approved Manpower Consultants Lic. No: 1555**
**Tel: 681510, 681326, 681302 Fax: 677134**

**467, 2nd Division, Maradana, Colombo - 10,**
**Sri Lanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதகுல மாணிக்கமாகவும், மாமேதையாகவும் திகழ்ந்தவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்

- நாவலர் அல் ஹாஜ் S.Z.M மசூர் மௌலானா

ஆயிரக்கனக்கான மக்கள் நாளாந்தம் பிறக்கிறார்கள்,இறக்கிறார்கள். பிறக்கும் ஒவ்வொருவருக்கும் இறக்கும் ஒவ்வொருவருக்கும் பிறந்ததின விழாக்களோ, நினைவுகூரலோ இடம் பெறுவதில்லை. மாறாக இருக்குமட்டும் விழாக்கள் எடுப்பதும் ஞாபகப்படுத்தப்படுவதும்தான் இன்றைய உலகில் நடைபெறுகிறது. அப்படி ஞாபகப்படுத்தப்படுபவர் ஒரு தியாகியாகவோ, அறிஞராகவோ, பெரும் அரசியல் வாதியாகவோ, உத்தமனாகவோ, உதாரண புருஷராகவோ இருக்க வேண்டும். இந்த வரிசையில் அண்மையில் எம்மை விட்டு பிரிந்த மாமேதை, மனிதகுல மாணிக்கம், கவிஞர் திலகம், அரசியல் விற்பன்னர், சட்ட மேதை, மா பெருந்தலைவர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.ஃப் முதலிடம் பெறுகிறார் என்றால் அது மிகையாகாது. இதனை மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது.

மறைந்த மாமேதை அல்-ஹாஜ் அஷ்ர.ஃப் அவர்களுக்கும் எனக்கும் நிறைய நெருக்கமும் பரஸ்பர மதிப்பும் பல வருடங்களாக இருந்தது. எனினும் 1993ம் ஆண்டளவில்தான் அது மிகவும் இறுக்கமாகவும், நெருக்கமாகவும் ஆகியது. அந்தவருடத்தில்தான் நானும் அவரும் அவரது தாயாரும் புனித ஹஜ்ஜுக்காக மக்கா சென்றிருந்தோம். அந்தவேளையில்தான் எனக்கு மறக்கமுடியாத அனுபவம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் மினாவில் வெவ்வேறு கூடாரங்களில் தங்கியிருந்தோம். அன்று அறபாவில் இருந்து திரும்பி மினா வந்து சேர்ந்தபோது நான் தங்கியிருந்த கூடாரமும் வேறு சில கூடாரங்களும் எரிந்து சாம்பராகி விட்டன. எனது உடுதுணிகள், கைச்செலவுக்கென வைத்திருந்த பணம் எல்லாவற்றையும் இழந்து கண்ணீரும், கம்பலையுமாக தவித்துக்கொண்டிருந்தேன். எனது கிராமத்தை சேரந்த எனதருமை நண்பன் காலஞ்சென்ற "உயர்ந்த மனிதன்" சீப்பலஸ் முதலாளி, ஹாஜியார் ஐ.எல்.எம். இஸ்மாயில் நான் கட்டியிருந்த இ.ஃராமை மாற்றுவதற்காக சாறம் ஒன்றும் ஒரு சேட்டும் தந்து என்னை ஆறுதல் படுத்தினார். தலைவர் அஷ்ர.ஃப் அவர்களுக்கு எப்படியோ இந்த சோகச் செய்தி கிட்டி விட்டது. உடனே என்னைத் தேடிவந்தார், கட்டியணைத்தார், கலங்கிய கண்களைத் துடைத்தார், ஆறுதல் கூறினார். அவரோடு ஒரு புதிய சாறனும் புது சேட்டும் கொண்டு வந்திருந்தார். அதனை உடுப்பாட்டினார். என்னைக் கட்டியணைத்து "மவ்லானா கலங்க வேண்டாம், ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். இந்த நிமிடம் முதல் நீங்கள் ஊர்போய்ச் சேரும்வரை உங்களையும் உங்கள் சகல தேவைகளையும் நான் பொறுப்பேற்கிறேன்" என்று அன்பினால் என்னைக் கட்டிவிட்டார். அத்தோடு அவர் கையால் எனது தலைமுடியையும் இறக்கிவிட்டார். தலையைத் தண்ணீரினால் அவரது கையாலேயே கழுவிவிட்டு தலைக்கு ஒரு தொப்பியும் போட்டுவிட்டார் என்பதனை பெருமையோடும் மனமகிழ்வோடும் கூறுகின்றேன். என்று அந்த நல்ல மனிதன் எனக்கு தொப்பி அணிவித்தாரோ அன்று முதல் இன்றுவரை நான் எவ்வேளையும் எவ்விடத்திலும் தொப்பியோடு இருக்கும் அந்தப் பழக்கத்தைக் கைவிடாமலிருக்கிறேன். அதற்காக அவருக்கு என் நன்றிகள்.

இந்நிகழ்வு முடிந்ததும் என்னை அழைத்துக்கொண்டு அவரது தாயார் தங்கி இருந்த அவரது நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று அவரது தாயாருக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். தாயாரும் எனக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினார்கள். அந்த அறையில் இரண்டு கட்டில்கள்தான் போடப்பட்டிருந்தன. அந்தப் பெரிய மனிதன் என்னையும் அவரது தாயாரையும் இரு கட்டில்களிலும் படுக்கவைத்துவிட்டு அவர் தரையில் விரிக்கப்பட்டிருந்த "காபெட்டில்" படுக்க ஏற்பாடு செய்தபோது அந்தவிதமான உபசாரத்தை நான் ஏற்க மறுத்தேன். அவர்விடவில்லை நீங்கள் ஒரு சாதாத் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவ்லானா, வயதில் மூத்தவர். ''நான்செய்வதுதான் சரி'' என்று சொல்ல, அவரது தாயாரும் அதற்கு ஒப்புதல் வழங்கினார். அடுத்தநாள் காலையில் நடந்த ஒரு அற்புதமான நிகழ்ச்சிதான் என்மனதைவிட்டு என்றும் மறையாத ஒன்றாகும். நான் சுபஹு தொழுதுவிட்டு காலைக்கடன்களை முடித்துவிட்டு வந்த போது ஒப்பற்ற இந்த மாமேதை அஷ்ர.்.ப் அவர்கள் தனது வயதான தாயாரை குளியலறைக்கு அழைத்துச் சென்று அவர்கள் குளிப்பதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்துகொடுத்துவிட்டு அந்தக் குளியலறைக்கு வெளியே கதவுக்கு பக்கத்திலேயே நின்றுகொண்டார். தாயார் குளித்து முடிந்ததும் கையில் பிடித்து அழைத்துக்கொண்டு வந்து கட்டிலில் இருப்பாட்டினார். கையில் இருந்த ''டவலால் '' தாயாரின் தலையை நன்கு துடைத்து கால்கள் இரண்டையும் அதேபோல் துடைத்துவிட்டு கால்கள் இரண்டையும் தூக்கி தாயாரை கட்டிலில் படுக்கவைத்துவிட்டுத்தான் அந்த ''தாய்நேஷன்'' அஷ்ர.்.ப் தனது காலைக்கடன்களில் ஈடுபட்டார். எனது தாயாரை நான் இளமையிலேயே இழந்துவிட்டேன். அவர்களுக்கு நான் பணிவிடைகள் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. நடந்த இந்த நிகழ்வுகளைக் கண்ணாறக் கண்ட நான் கண்ணீர் விட்டேன். தன்னைப் பெற்ற தாய்க்கு இப்படிப் பணிவன்போடு பணிவிடை செய்யும் ஒருவர் தன்னை நம்பியிருக்கும் தமது சமூகத்திற்கு எவ்வண்ணம் பணிவிடை செய்வார், காப்பாற்றுவார் என்ற அசைக்க முடியாத எண்ணம் என் மனதில் பதிந்துவிட்டது.

மாமேதை அஷ்ர.்.ப் அவர்களைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம். மணித்தியாலக் கணக்கில் அவர் பற்றிப் பேசலாம். ஆனாலும், அவரது செயல்களால் எனக்கு ஏற்பட்ட தாக்கங்கள் ஒன்றிரண்டை மட்டும் நான் இங்கு கூறியதன் மூலம் எனது நன்றிக் கடனை அனைவருக்கும் செலுத்துவது பொருத்தமெனக் கண்டு, இந்நிகழ்வுகளை ஞாபகப்படுத்தினேன். எனக்கும் அவருக்கும் இடையில் நடைபெற்ற பல நிகழ்வுகள் உண்டு அவை அத்தனையையும் கூறுவதானால் எழுதுவதற்கு இடமும், நேரமும் போதாது.

**நாவலர் அல் ஹாஜ் S.Z.M மசூர் மௌலானா**
(முன்னாள் மூதவை உறுப்பினர்)


# BRILLIANT SPORTS CLUB



*ஓராண்டென்ன...*
*ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்*
*உங்களின் இழப்பு - என்றும்*
*எழுத முடியாத காவியம் !*
*நிரப்ப முடியாத வெற்றிடம் !!*

**பிரிலியன்ற் விளையாட்டுக் கழகம்**


**BRILLIANT SPORTS CLUB**

**103, KADAT KARAI PALLI ROAD,**
**KALMUNAI - 03.**

**T. PHONE : 067 - 20268, 29436**

**10th Anniversary 1991 - 2001**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சர்வதேச முஸ்லிம் சமுகத்திற்கு இலங்கை முஸ்லிம்களை அடையாளப்படுத்தியவர்.

- ஹாபீஸ் நஸீா் அஹமட்

நமது தலைவா் நம்மை விட்டு மறைந்து விட்டார் என்பதை என்னால் மட்டுமல்ல நம்மாலும்கூட நம்பமுடியவில்லை.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பரிணாம வளர்ச்சியில் தலைவர் அஷ்ரப் ஒரு மைல் கல். இலங்கை அரசியலில் அவர் ''கிங் மேக்க''ராக மட்டுமன்றி அரசைச் செலுத்திச் செல்பவராகவும் செயற்பட்டார்.

தலைவரின் அரசியல் பிரவேசத்தின் பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூலம் நமது சமூகம் ஒரே மரநிழலின் கீழ் ஒன்று திரட்டப்பட்டது மட்டுமன்றி சர்வதேச ரீதியில் பிரிந்து நின்ற சில முஸ்லிம் தலைவர்களின் மன இணக்கப்பாட்டுக்கும் முன்னின்று உழைத்த பெருந்தலைவராவார்.

சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் முன்னால் இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகம் காத்திரமான முறையில் அடையாளப்படுத்தப்பட்டது மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் உத்வேகமான, முன்னேற்பாடான நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

அவரது சகல வெற்றிகளுக்கும் காரணமாக அமைந்தது அவரிடம் காணப்பட்ட இறையச்சமும், இதய சுத்தியான செயற்பாடுகளுமாகும்.

தலைவர் அஷ்ரப் வாழ்ந்த காலம் குறுகியதாக இருந்தபோதிலும் அவர் ஏற்படுத்திய சாதனைத் தடயங்கள் பல்லாயிரம் வருடங்கள் அவர் வாழ்ந்த கனதியைக் காட்டி நிற்கின்றது.

எதையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகவே பேசிப்பழக்கப்பட்ட அவரிடம் சராசரி மனிதனைக் காட்டிலும் மேலான காருண்யமும் கலையழகு நயமும் குடிகொண்டிருந்தது.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் மின்னிக் கொண்டிருந்த அரசியல் தலைவர்களுள் இவர் ஒரு விடிவெள்ளி என்று அழுத்தமாகக் கூற முடியும்.

இலங்கை முஸ்லிம்கள் அரசியல் ரீதியில் விழிப்புணர்வை அடைவதற்கு அவர் அமைத்த வியூகங்கள் இன்னுமொருவரால் கச்சிதமாக செயற்படுத்த முடியுமென்பதை எம்மால் நம்ப முடியாதுள்ளது. காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

தலைவர் அவர்கள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் ஸ்தாபனத்தை அமைப்பதற்கு முன்னர் செல்லாக் காசாக இருந்த முஸ்லிம் வாக்குகள் ஒவ்வொன்றும் காங்கிரஸின் தோற்றத்துடன் தேசிய அரசியலின் உறைமோராக மாறியுள்ளது வெளிப்படையாகும்.

இலங்கை அரசியல் வரலாறு எழுதப்படும்போது மர்ஹூம் அஷ்ரஃபின் வரலாறு தொடர்பான பக்கங்கள் இல்லாமல் அது எழுதப்படுமானால் அது பூரணமான வரலாறாக அமையமாட்டாது.

நேசமிக்க, நல்லிதயம் கொண்ட உண்மைத் தலைவனை இழந்து நெஞ்சம் குமுறும் இலட்சக்கணக்கான விடுதலைப் போராளிகளுடன் நானும் ஒருவனாய் நின்று இந்நாளில் அவரை நினைவு கூறுகின்றேன்.

வஸ்ஸலாம்.


ஹாபீஸ் நஸீா் அஹமட்
சர்வதேச விவகாரப் பணிப்பாளர்,
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A. L. M. MUSTHAFA

LANKA FILLING STATION & SERVICE CENTRE
MAIN STREET, SAINTHAMARUTHU - 01.
Tel: 067 - 29443 / 063 - 24208








## ASRIN MOTORS

சகல
வாகனங்களுக்குமான
பொடி
தயாரிப்பாளர்

இன்றே எம்மிடம் ஒரு
முறை விஜயம் செய்து
பாருங்கள்

MAIN STREET,
SAINTHAMARUTHU - 01.






அரசாங்க மரக்
கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம்
பெற்ற

**முகவர் டிப்போ**

சாய்ந்தமருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மர்ஹூம் அஷ்ரஃப்புடன் இணைந்து செயற்பட்ட காலங்கள் உயிர் இருக்கும் வரை மறக்கமுடியாதவை

**கே. எம். எச். கால்தீன்**
**பீடாதிபதி**
**தென்கிழக்கு பல்கலைக்கழகம்**
**ஒலுவில்.**

அகில இலங்கை எம். எச். எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றம் வெளியிடும் இம்மலருக்கு எமது மனம் நிறைந்த இந்நினைவுச் செய்தியை அனுப்புவதில் மன நிறைவு பெறுகின்றேன். அன்னாரின் மறைவினால் சோகத்தில் ஆழ்ந்துள்ள உள்ளங்களுக்கு அல்லாஹ் சாந்தி அளிக்கப் பிரார்திக்கின்றேன். அன்னாரின் அகால மறைவினால் இலங்கை முஸ்லிம்கள் மட்டுமல்ல அன்னாரின் மனிதாபிமான நடைமுறையினால் ஈர்க்கப்பட்ட அனைவருமே தமது துயரிலிருந்து இன்னும் மீள முடியாமல் தவிக்கின்றார்கள்.

அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்கு வித்திட்டதாகவும், தேசிய ஐக்கியத்துக்கு முன்னின்று உள உறுதியுடனும், தைரியத்துடனும் பணியாற்றும் பான்மை கொண்டதாகவும் அமைந்திருந்தது. இதனை நாம் மிகவும் காத்திரமாக அன்னாரது நடைமுறைகளில் இருந்து அறிந்து வந்தோம். அவரோடு இணைந்து செயற்பட்ட காலங்கள் உயிர் இருக்கும் வரை மறக்க முடியாதவை.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் சார்ந்த இயக்கமாக விளங்கினாலும், அதனை ஓர் அரசியல் கட்சியாக மாற்றுவதற்கு வழி அமைத்த நிகழ்வு 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் இடம் பெற்றது. அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனம் கூட்டிய மகா நாட்டில் முஸ்லிம்களுக்கான ஒரு தனி அரசியல் கட்சியும், மாகாண சபை ஒன்றும் வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1986ஆம் ஆண்டு செப்டம்பரில் ஓர் அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்த இத்தீர்மானங்களே வழி அமைத்தன. இதனை மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் ஒரு போதும் மறந்ததில்லை. அவரது உரைகளில் அவ்வப்போது இதனை ஞாபகமூட்டவும் தவறவில்லை. இந்த நாட்டில் முதுகெலும்புள்ள ஓர் இயக்கமாக அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தை அவர் மதித்திருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸுக்கு பொருத்தமான ஒரு தலைவராகவும், முஸ்லிம் சமூகத்தை நேர்மையான வழியில் இட்டுச் செல்லும் ஒரு நேரிய சிந்தனை உடையவராகவும் அவர் விளங்கியமையால் முஸ்லிம் சமூகத்தின் தலைவிதி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது தலைமைத்துவத்தின் கீழ் முஸ்லிம் சமூகத்தின் கண்ணியமும் கௌரவமும் பாதுகாப்பப்பட்டு வந்தது. நுணுக்கமான அரசியல் போக்கும் அணுகுமுறையும் அவரின் சிறப்பம்சங்களாகும்.

முஸ்லிம் காங்கிரஸினை முஸ்லிம்களின் அரசியல் சக்தியாக மாற்றியமைத்த அவர், இந்த நாட்டின் சகல மக்களையும் ஒன்றுபடுத்தும் ஒரு புதிய அரசியல் அமைப்பைக் கட்டியெழுப்பும் ஒரு பரீட்சார்த்த முயற்சியை மேற்கொண்டார். அதனால் உருவானதே தேசிய ஐக்கிய முன்னணியாகும். இதனை வெற்றிகரமாக உருவாக்குவதற்கு அவர் இரவு பகல் பாராது தூக்கமின்றிப் பணியாற்றினார். அவரின் தனித்துவமான ஆளுமையும் ஆற்றலும் அவர் நினைத்தவற்றைச் சாதிக்கும் சக்தியாக விளங்கின. குறுகிய காலத்தில் பாரிய ஓர் அரசியல் சக்தியை உருவாக்கும் ஆற்றலை அவர் பெற்றிருந்தார். எதிரிகளையும் நண்பர்களாகக் கருதி இன்முகத்துடன் உறவு வைத்திருந்தார். அனைவரையும் ஈர்க்கும் சக்தியுடையவராகவும் அவர் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமானமும், மனித நேயமும் அவரிடம் இயல்பாக அமைந்து காணப்பட்டன. தன்னோடு இணைந்திருந்தவர்களின் ஆற்றல்களை அவர் அறிந்து தமது இலட்சியப் பயணத்தில் அவர்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டார். அவரோடு இணைந்திருந்தவர்கள் அவரை என்றும் மறக்க மாட்டார்கள். அனைவரின் இதயங்களிலும் அவர் பசுமை நினைவுகளாக நிறைந்திருக்கின்றார்.


அவரது அரசியல் பாதையில் பின்னாலிருந்து கருத்துக்கள் வழங்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் அவற்றை அவர் மன நிறைவுடன் ஏற்றுக்கொண்டார். உலமாக்களைக் கண்ணியப்படுத்தி அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதில் அவர் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். அனைவரது ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் ஆளுமை அவரின் ஆற்றலை வெளிப்படுத்தியது. அவரது அரசியல் ஆற்றலுக்கு ஈடு கொடுப்பவர்கள் மிக அரிதாகவே காணப்பட்டனர். அவரது அகால மரணத்திற்கு எதிர்ச்சக்திகளின் சதியே காரணமென்று அவரது நேசர்கள் நம்புகின்றனர். அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். சமூகத்தில் எல்லாப் பிரிவினரும் அவரின் பிரிவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப முடியாமல் தவிக்கின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் அகில இலங்கை எம்.எச்.எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றம் வெளியிடும் மலர் அன்னாரின் பணிகளை ஞாபகமூட்ட மேற்கொள்ளப்படும் பாரிய முயற்சியாகும். இம்மன்றத்தின் பணிகளால் அன்னாரின் சேவையின் மகத்துவம் மனித குலத்துக்கு தெளிவு படுத்தப்படல் வேண்டும். புதிய தலைமைத்துவம் அன்னாரின் வழியை நன்கு புரிந்து செயற்பட இதுவழி அமைத்தால் அதுவே நாம் அன்னாருக்குச் செய்யும் பெரும் பணியாகும்.

**கலாநிதி மௌலவி கே.எம்.எச். காலித்தீன்.**


# TRYWIN TRAVELS & TOURS

**No: 10/1, Cyntex Buld, Lotus Road, Colombo - 10. Tel - 074- 385778, 718058 e-mail: aadel@eureka.lk**



Our efficient staff will attend to all your travel requirements, we offer the most reasonable fare to India, Middle East, and Europe.

It will be our earnest disire to give you entire statisfaction in the discharge of duties enterusted to us.

Don't hesitate to contact us......

Thanks!!!

The Management


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாற்றுக் கட்சி அரசியல் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர் நம் தலைவர் அஷ்ர∴ப்

- ஏ.ஜே.எம். முஸம்மில்

بسم الله الرحمن الرحيم

மறைந்த மாமனிதர் நமது தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர∴ப் அவர்களின் முதலாம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு நினைவுச் செய்தி வழங்குவதில் உவகையடைகின்றேன்.

நமது தலைவர் நம்மை, விட்டுப் மறைந்தாலும்கூட நமது சமுதாயப் பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் முன்னெடுத்துச் செல்வதில் அவர் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அரசியல் என்னும் ஆழ்கடலில் துடுப்பிழந்த படகைப் போல் கரை சேர முடியாமல் முஸ்லிம் சமுதாயம் தத்தளித்துக் கொண்டிருந்த போது படகை நேர்வழியில் செலுத்தி கரை சேர்க்கும் துடுப்பாக மறைந்த தலைவர் மர்ஹூம் எம். எச்.எம் அஷ்ர∴ப் முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் பாக்கியமாக கிடைத்தார்.

இருள் சூழ்ந்த முஸலிம் சமூகத்தின் ஒளி வீச்சாக நமது தலைவர் விளங்கினார். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக அல்லலுற்றிருந்த முஸலிம் சமூகத்தின் சமூக சமய கல்வி பொருளாதார மேம்பாட்டுக்காக அவர் தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டமையை முஸ்லிம் சமூகம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

நமது தலைவர் உயிரோடு இருந்த காலத்தில் கூட பெரும்பான்மையின சிங்கள அரசியல் தலைவர்கள் பலர் அன்னாரது அரசியல் சானக்கியத்தையும், மதி நுட்பத்தையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்பட்ட அரசியல் நகல் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சுமார் மூன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக உரையாற்றி சாதனை படைத்தமை வரலாற்று நிகழ்வாகும். இந்நிகழ்வுக்கான பெருமை நமது தலைவரையும், அவர்பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லிம் காங்கிரஸையுமே சாரும்

அன்னாரின் வழிகாட்டலின் கீழ் முஸ்லிம் சமுதாயத்தின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது எமது ஒவ்வொருவரதும் முக்கிய பணியாகும். ஒற்றுமைப்பட்ட முஸ்லிம் தலைமைத்துவத்தின் உணர்வுகளைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபடுவோமாக.

அல்-ஹாஜ் ஏ.ஜே.எம். முஸம்மில்,
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
கொழும்பு மாவட்ட அமைப்பாளர்,
இல. 07, அல்பிரட் ஹவுஸ் வீதி,
கொழும்பு - 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LTS. GROUP (PVT) LTD.

## AKKARAIPATTU.

General Trading Establishment

**TECHNICAL SERVICE CENTRE**

நவீன முறையில் வாகன
மற்றும்
இயந்திர தொழில்நுட்ப சேவை.

அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள (கொம்றோ அருகாமையில்) மேற்படி நிறுவனத்தில் இச்சேவைகள் செய்து கொடுக்கப்படும்.

- WHEEL ALIGNMENTARY SERVICE
  - ☞ Camphor
  - ☞ Caster
  - ☞ Suspension
  - ☞ Wheel, hub Service
- COIL SPRING & SPRING LEAF SERVICE
- STEERING BOX SERVICE
- BRAKE SERVICE
- CLUTCH SERVICE
- ENGINE SERVICE
  - ☞ Diesel Smoke Service
  - ☞ Petrol Ignition Timing Service
  - ☞ Engine tune up
- GEAR BOX SERVICE
- AUTOMATIC TRANSMISSION

*All kinds of spare parts service*

**எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்**

இல. 61, பிரதான வீதி,
அக்கரைப்பற்று.

T.P. 067 - 78804
E - MAIL - ltsg 1968 @ emirates.net. ae
WEB SIDE : WWW.Skynery, hanbush.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை முஸ்லீம்களின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய மாபெரும் தலைவர்

**- புரவலர், அல்-ஹாஜ் ஹாஷீம் உமர்**

بسم الله الرحمن الرحيم

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி இஸ்லாமிய சமூகமும் இந்நாட்டின் ஏனைய சமூகமும் இணையான சமூகம் என்பதை நிலைநிறுத்திய மறைந்த தலைவர் மர்ஹூம் அல்ஹாஜ் M.H.M அஷ்ரப் அவர்களின் ஓராண்டு நிறைவு தினத்தை குறிக்கும் வகையில் நினைவு மலர் ஒன்று இதழ் விரித்து மலர்வது பாராட்டுக்குரியது.

தான் சாந்த சமூகத்துக்கு சிறப்பாகவும், குறிப்பாகவும் சேவையாற்ற வேண்டும் என்ற சீரிய கொள்கையை அதிகமாக கொண்டிருந்தாலும் ஏனைய சமூகங்களோடும் நல்லுறவைப் பேணவேண்டும், அதை நடைமுறையிலும் காட்டவேண்டும் என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டு அதன்படி வாழ்ந்தவர் மர்ஹூம் அஷ்ரப் என்பதை எவராலும் மறுக்க முடியாது.


அவரை நேசித்தவர்கள் ஆயிரமாயிரம் இருக்கலாம். ஆனால் அவரால் நேசிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்பதை எண்ணும் போது பெருமிதமாகவே இருக்கிறது.

அவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு தெரிவிக்கப்பட்ட பாராட்டுக்களையும் அணிவிக்கப்பட்ட புகழ்மாலைகளையும் விட அவர் மறைந்த பிறகு மணம் பரப்பும் இந்த நினைவு மலர் கனதியானது இந் நினைவு மலரை வெளியிடும் மலர் ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- நன்றி -

புரவலர் அல்-ஹாஜ். ஹாஷீம் உமர்,
சுயாதீன தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மோடு என்றும் நிலைத்து நிற்கும்

முகாமையாளரும்,
மற்றும்
உத்தியோகத்தர்களும்

**மக்கள் வங்கி**

**அக்கரைப்பற்று**


# எமது விஷேட நன்றிகள்

**ஜனாப் : ஏ. எம். அலியார்**
**"ஜெஸிமாஸ்"**
**மருதமுனை.**

**ஜனாப் : பி.ஏ. றஸாக்**
**மார்க்கட்**
**கல்முனை.**

அல்ஹாஜ்: எம்.ஐ.ஏ.லத்தீப்
தப்லிக்றைஸ்மில்
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எஸ். நிஜாமுதீன் (சட்டத்தரணி)
# (ஆலோசகர் அவுஸ்திரேலிய குடிவரவுச்சட்டம்)

பச்சையிலும், நீலத்திலும் குளிர்காய்ந்து கொண்டு சொந்தச் சுயநல, கழுத்தறுப்பு அரசியல் நடத்திக் கொண்டிருந்த அன்றைய அரசியல்வாதிகளின் அஸ்தமனத்துக்கு வித்திட்ட அரசியல் ஞானி எமது மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ர.்.ப் சட்டத்தரணி அவர்கள்.

இந்த மாபெரும் தலைவரை நினைவு கூறும் இக்காலகட்டத்தில் எனது நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும் அந்த அரசியல் ஜோதியின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், தீர்க்கதரிசனமான அவரது அரசியல் சிந்தனை என்றுமில்லாதவாறு எமக்கு தற்போது தேவைப்படுகிறது.

எமது தன்னலமறியாத் தலைவர் யாரை எந்த இடத்தில் வைக்கவேண்டுமென்பதை நன்கறிந்திருந்தார். ஒவ்வொருவரது பங்களிப்பையும் அந்த மனிதர் மறந்து விடவில்லை. இன்று கூக்குரலிடும் காங்கிரஸினால் உருவான சில கொந்தராத்து அரசியல்வாதிகள் தமது கொள்ளளவை மறந்து அண்டங்காக்கைகள் எல்லாம் குயிலாய் வேடம் போட்டுக் கொண்டு அலைந்து திரிகின்றன.

பாவம் இவர்கள் வாய்திறந்தால் போதும் யாரும் இனம் கண்டுவிடுவார்கள் இவர்கள் எவ்வளவு சுயநலப் பித்தர்கள் என்று தலைவர் இப்படியானவர்களை மிகக் கவனமாக கையாண்டுவந்துள்ளார்கள். ஒவ்வொரு தேவைக்கும் இவர்களைப் பயன்படுத்தினார்களேயொழிய இவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கட்சியின் பேரால் சொந்த அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள அனுமதித்ததுமில்லை, தகுதியற்றவர்களை உயர்வான இடங்களில் விட்டுவைத்ததுமில்லை. கட்சி அங்கத்தவர்களே, உத்தியோகத்தர்களோ தலைவரையும் கட்சியையும் தமது உயிரிலும் மேலாக நேசித்தார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து செயலாற்றுவது உயிராபத்தானது என்று கருதிய ஒரு காலடும் உண்டு. அப்போது பேரினவாத கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு இந்தக்கட்சியை நசுக்கப் பார்த்தார்கள், அவர்கள் தோல்வி கண்டார்கள், தமிழ் இயக்கங்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வரவேற்கவில்லை மாறாக அழித்தொழிக்க வழிதேடினார்கள் அப்போது இந்தக்கட்சியை ஒழிக்க வரிந்து கட்டிக்கொண்டு செயல்பட்டவர்கள் பலர் இப்போது முஸ்லிம் காங்கிரஸின் உயர் இடங்களை அலங்கரித்துக் கொண்டிருப்பது பல தியாகிகளுக்கும், உண்மையான காங்கிரஸ் அபிமானிகளுக்கும் சந்தோசமானதல்ல ஆயினும் மறைந்த தலைவரின் தலைமைத்துவப் பண்பில் ஆகர்ஷிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஏதோ ஒரு காரனத்தினால் இவ்வாறு நடைபெறுகிது. என்று நம்பினார்கள் பின்னர் மறைந்த தலைவர் அவர்களே இந்த சுயநலக் குழுக்களின் அபார வளர்ச்சியினால் நிலைகுலையவேண்டியேற்பட்டமையும் அதன் அடியொற்றிய சதிகளின் வரலாறும் இன்னொருமுறை இப்படியொரு நிலை எந்தவொரு முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும் ஏற்படக்கூடாது என்று இறைவனைப்பிராத்திப்போமாக அடிப்படைப் போராளிகளும் உண்மையான கட்சியின் அபிமானிகளும் ஓரங்கட்டப்பட்ட நிலையில், சுயநல அரசியல்வாத சக்திகளும் கொந்தராத்துக்கும், கொமிஸனுக்கும் கட்சிக்காரனாகக் காட்டிக்கொண்டு முழு நேர தொழிலாக இதனைச் செய்து வருபவர்கள் மீண்டும் என்ன செய்தால் தனக்கு எச்சில்துண்டு கிடைக்கும் என்று கணக்கீடு செய்து வருவதைப் பார்க்கும் போதும், எப்படியான பஞ்சமாபாதகராக இருந்தாலும் பரவாயில்லை பணம் இருந்தால் போதும் நாங்களும் குளிர்காயலாமே என்று துடியாய் துடித்துக் கொண்டிருக்கும் உள்ளூரின் கொந்தராத்து அரசியல் குட்டிச் சாத்தான்களைப் பார்க்கும் போது மறைந்த தலைவர் காட்டிய வழியைத்தானா? இவர்கள் பின்பற்றுகின்றார்கள். என்று மனசஞ்சலம் ஏற்படுகின்றது.

கப்பம் கேட்கும் அரசியல் கலாச்சாரம் இன்று கொடிகட்டிப் பறக்கிறது. எம் மறைந்த தலைவர் இப்படியான அரசியலை எமக்கு ஒரு போதும் கற்றுத்தரவில்லை. இது எப்படி எமது கட்சிக்குள் கலாச்சராமாக உருவெடுத்தது என்பது புரியாத புதிராக இருக்கிறது. பேரினவாத கட்சிகளின் பெருநோயான கப்பம் வேண்டும் கடன்கார அரசியல் பெருச்சாளிகள் காங்கிரஸில் ஐக்கியமாகியிருப்பது. ஆரோக்கியமானதொன்றாக தெரியவில்லை மறைந்த தலைவர் காட்டிய அரசியல் பின்னணியும் கலாச்சாரமும் அருகி வருவது அந்த மாமனிதரின் மரணத்தையே அர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றதாக்கிவிடும் இந்த முஸ்லிம் சமூகத்துக்காக தன் உடல், பொருள், ஆவி சகலவற்றையும் அர்ப்பணம் செய்த எமது மறைந்த காவியத்தலைவன், சரித்திரபுருஷன், காலத்தால் அழியாத இஸ்லாமிய சின்னம் இந்த கப்பம் தேடி அலையும் அரசியலைக் காணக்கூடாது என்றுதானோ கண்ணை மூடிக்கொண்டது.

மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்களின் அரசியல் பண்பாட்டை கொச்சையாக்கி கொண்டிருக்கும் அடிவருடிகளும், பணத்துக்காக நிமிடத்துக்கு நிமிடம் தங்களை நிறம் மாற்றிக் கொள்பவர்களையும் நம்பும் படியாக எப்போதும் எம் மறைந்த தலைவர் கூறியதாக எனது நினைவுக்கு வரவில்லை.

இதயம் அழுதுவடிகிறது. இந்த மாபெரும் தலைவர் இன்னும் சிலகாலம் எம்மோடிருந்திருந்தால் இக்கட்சியின் பலம், அதன் அரசியல் கலாசாரம் நெறிபெற்று இன்றிருக்கும் நிலை தவிர்ந்திருக்குமோ? என்னவோ? இன்றிருக்கும் ஒரே நம்பிக்கை எமது தற்போதைய தலைவர் கௌரவ ரவுப் ஹக்கீம் சட்டத்தரணி அவர்கள் மட்டுமே. இந்த நல்ல மனிதரின் ஆயுளை நீடிக்கவைத்து இக்கட்சியின் உண்மையான தொண்டர்களை இனம் கண்டு தகுதிக்கும், திறமைக்கும் மதிப்பளித்து ஒற்றுமையை முஸ்லிம்களிடையே ஏற்படுத்துவதற்கும் கப்பம் தேடி அலையும் அரைவேக்காடுகளையும், கொந்தராத்துக்கு அலையும் பணமுதளைகளையும் இனங்கண்டு கட்சியைத் தூய்மைப்படுத்தும் செயலுக்கு வல்ல அல்லாஹ் அவனது சகல றஹ்மத்துக்களையும் சொரிந்து உதவி புரிய பிரார்த்திப்பதுடன் மறைந்த எமது மாபெரும் தலைவரின் அரசியற் சிந்தனைகளுக்கு உயிர் கொடுக்க இந்த முதலாண்டு நினைவு உத்வேகத்தை நம் எல்லோருக்கும் அளிக்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதுடன். இது தொடர்பில் பிரதிக்ஞையும் செய்வோமாக.

- வஸ்ஸலாம் -


**எஸ். நிஜாமுதீன் (சட்டத்தரணி)**
**128, ஹாஜா வீதி,**
**சாய்ந்தமருது - 12.**
**தொ.இல : 067 - 20165**



கிழக்கிலங்கையின் மோட்டார் சைக்கிள் விற்பனை முன்னோடிகள்

# JET WAY MOTORS

*all kinds of Yamaha, Starway, Gismo, Out Boat, Engine are avilable*

**யமஹா, ஸ்டார்வே, ஹீரோ கிஸ்மோ, மீன் பிடி வள்ள இயந்திரம் (அவுட் போட் இன்ஜின்) மற்றும் சகலவிதமான மோட்டார் சைக்கிள்களுக்குமான உதிரிப்பாகங்களுக்கும் நீங்கள் நாட வேண்டிய**

ஒரே இடம்

AMW

**ஜெட்வே மோட்டர்ஸ்**

JWM

STARWAY

அம்பாரை மாவட்ட ஏக வினியோகஸ்தகர்கள்.

**ஜெட்வே மோட்டர்ஸ்,**
உரிமையாளர் : ஜனாப் எம்.ஐ. அக்பர் அலி.
பிரதான வீதி,
அக்கரைப்பற்று.
தொ.பேசி & தொ. நகல் : 067 - 77766

கிளை :

**ஜெட்வே மோட்டர்ஸ்,**
நிலா பில்டிங்,
பிரதான வீதி,
நிந்தவூர்
தொ.பேசி : 067 - 50888

செப்டம்பர் 07 இல் தங்களது ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடினார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளைக் காண அவா கொண்டிருந்த நம் தலைவர்.

– மீரா.எஸ்.இஸ்ஸடீன்

بسم الله الرحمن الرحيم

மனித நேயமிக்க மாமனிதர் மர்ஹூம் எம். எச். எம் அஷ்ரஃப் எம்மைவிட்டு மறைந்து முதலாவது வருட நிறைவை நாம் எல்லோரும் இன்று நினைவூட்டிக் கொண்டிருக்கிறோம். அவர் மறைந்தாலும் எம்மத்தியில் அவரது நினைவு குன்றிலிட்ட தீபம்போல் ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

முஹம்மது ஹுஸைன் மதீனா உம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராகத் திகழ்ந்த அவர் 1948ம் ஆண்டு சம்மாந்துறையில் ஒக்டோபர் 23ம் திகதி பிறந்தார். கல்முனைக்குடி ஆண்கள் பாடசாலையில் (தற்போது அல்-அஷ்ஹர் வித்தியாலயம்) தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த இவர் பின்னர் பத்திமா கல்லூரியில் ஒரு வருடமும், 1961 - 1966 வரை கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் கல்வி பயின்றார். இளமைப்பருவத்தில் எழுத்தாற்றல், சமூகப்பணி, சமயப்பணி போன்ற இன்னோரன்ன காரணங்களால் இவர் ஈர்க்கப்பட்டதன் விளைவாகவும், ஆங்கில கல்வியில் இவருக்கு ஏற்பட்ட மோகம் காரணமாகவும் சுமார் 3 வருடங்கள் இவரது கல்வி தடைப்பட்டது.

இதன் பின் 1969ம் ஆண்டு நடைபெற்ற சட்டக் கல்லூரியின் புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றி அங்கு தெரிவு செய்யப்பட்ட இளம் சட்டத்தரணி அஷ்ரஃப் 1970ல் நடைபெற்ற முதலாம் வருட பரீட்சையில் முதலாம் வகுப்பில் சிறப்புச் சித்தியடைந்ததுடன் அரசியலமைப்புச் சட்டத்தில் பரிசும் பெற்றார். 1971 ஆண்டு நடைபெற்ற இரண்டாம் வருட பரீட்சையிலும் முதலாம் வகுப்பில் சித்தியடைந்து 1973ம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் தேர்வாகி 1974ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி ஒரு சட்டத்தரணியாக வெளியேறினார்.

சட்டத்தரணியாக வெளியேறியதிலிருந்து ஒரு வருடம் தனிப்பட்ட ரீதியில் சட்டத்தரணியாக தொழிலை மேற்கொண்ட இவர் ஒரு வருடத்தின் பின்னர் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் அரச வழக்குத் தொடுநராகப் பணியாற்றி சிவில், கிரிமினல், வழக்குகளில் ஆஜராகி வந்தார்.

கிரிமினல் வழக்குகளில் மிகவும் பிரபல்யம் பெற்ற இவர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு

*'தென் கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளைக் காணக்கூடிய நன்னாளை நான் காண வேண்டும். தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சட்ட பீடம் ஒன்று ஆரம்பிக் கப்பட்ட பின்னர் எனது இறுதிக் காலத்தில் நான் அங்கு அதிதி விரிவுரையாளராகச் சட்டம் போதிக்க வேண்டும். ஒலுவிலில் நான் அமைக்கும் சிறிய வீட்டில் இருந்து இதையெல்லாம் செய்ய வேண்டும்...'*

எடுத்துக் கொள்ளப்பட்ட பன்னிரெண்டு கொலை வழக்குகளில் ஆஜராகி, 12 வழக்குகளிலும் வெற்றி பெற்றமை இவரது சட்ட வாதத்துக்குக் கிடைத்த சிறப்பம்சமாகும்.

இதன் பிறகு மீண்டும் கொழும்பில் உள்ள நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகக் கடமையாற்றிய போதுதான் இவர் அரசியலுக்கு இழுக்கப்பட்டார்.

### அரசியல்பிரவேசம்

1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது கிழக்கிழங்கையைச் சேர்ந்த கல்விமான்களும், அரசியல் ஆர்வலர்கள் சிலரும் சேர்ந்து முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்ற அரசியல் அமைப்பை உருவாக்கி, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அரசியல் ரீதியில் ஒப்பந்தம் செய்து தேர்தலில் போட்டியிட்ட போது அதன் வேட்பாளர்களுக்காக பிரபல பேச்சாளராகவும் அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவாரகவும் இருந்து செயற்பட்டார்.

1977ம் ஆண்டிலிருந்து முஸ்லிம் சமூகத்தின் மேம்பாட்டுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த அஷ்ரஃப், 1984ம் ஆண்டு வரை கல்முனையில் தனது தொழிலையும், சமூகப் பணியையும் மேற்கொண்டபோது தான் வன்செயல்கள் ஆரம்பமாகின. வன்செயல் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டவர்களில் சட்டத்தரணி அஷ்ரஃப் குறிப்பிடத்தக்கவர்.

அன்று கல்முனையில் இனத்தின் பெயரால் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த அக்கினியில் தனது அரசியல், சமய, சட்ட, இலக்கிய நூல்களையும், பொக்கிஷங்களையும், உடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் குருவி கூடு கட்டியதைப்போல் கட்டிய வீட்டையும் தீ நாக்குக்கு தீனி போட்விட்டு இளம் மனைவியுடனும் பிஞ்சுக் குழந்தையுடனும் கொடி கட்டிப் பறந்த சட்டத் தொழிலையும் விட்டு விட்டு இரவோடு இரவாக அகதியாக தான் பிறந்த மண்ணைவிட்டு நாதியற்றவராய் கொழும்பில் தஞ்சமடைந்தார்.

இவ்வேளையில் தான் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையே பேச்சு வார்த்தையும், நட்வார்சிங், பி. சிதம்பரம் போன்றவர்களின் விஜயங்களும் இலங்கையில் இடம் பெற்றிருந்தது. இக்காலகட்டத்தில் இனப் பிரச்சினைத் தீர்வுத் திட்டப் பேச்சுவார்த்தை தொடர்பாக கிழக்கிலங்கை முஸ்லிம் களின் நலனில் அக்கறை கொண்டு திருமலை, மட்டு, அம்பாரை மாவட்டங்களைச் சேர்ந்தோர் இலங்கை இந்திய அரசுகளின் தூதுக் குழுக்களுடன் பேச்சு வார்த்தையில் கலந்துகொண்டு எவ்வித பலனுமின்றி சோர்வடைந்த நிலையில் சட்டத்தரணி அஷ்ரஃ பின் உதவியை நாடினர். அவர்களின் கோரிக்கையைத் தட்டிக்கழிக்க முடியாமையினாலும் தவிர்க்க முடியாத காரணங்களினாலும் தனது அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

### ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் தோற்றம்

1981ம் ஆண்டு காத்தான்குடியில் ஒரு சாதாரண இயக்கமாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் மீண்டும் பழைய காங்கிரஸ் அங்கத்தவர்கள் 12 பேரை உள்ளடக்கியதாக 1986ம் ஆண்டு வீறு நடைபோட ஆரம்பித்தது. இந்த ஆரம்பமானது ஒரு சத்திய வாக்குடன் தான் ஆரம்பித்தது என்பதை இங்கு ஞாபகமூட்ட வேண்டும். இப்போதுள்ள 12 பேரும் ஸ்ரீ.ல.மு.கா.வுக்காக உயிர் விடவும் தயாராக இருக்க வேண்டும். என்ற "பைஅத்" சத்தியப் பிரமாணத்துடன் நள்ளிரவில் துணிவு கொண்டனர். இந்த சத்தியப் பிரமாணத்தின் அடிப்படையில் 1986 நவம்பரில் கொழும்பு ''பாட்ஷா'' விழாவில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் ஒரு அசியற் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட கட்சி இன்று என்ன நிலையில் உள்ளது என்பதை இந்நாட்டு மக்கள் நன்கறிவர்.

சிறந்த கலை இலக்கியவாதியான இவர் சிறுகதை, கவிதை என்பவற்றுடன் நின்றுவிடாது இஸ்லாமிய சமயக் கட்டுரைகளையும் தொடர்ச்சியாக பத்திரிகைக்களில் எழுதி வந்துள்ளார். இது தவிர இவரது கவிதை ஆற்றலின் வெளிப்பாடு, "நான் எனும் நீ'' கவிதைத் தொகுப்பு நூலாக வெளிவந்திருக்கிறது. 600 பக்கங்களுக்கு மேற்பட்ட இந்நூல் தமிழில் வெளியிடப்பட்ட மிகப் பெரிய கவிதைத் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இளமைக் காலந்தொட்டே இடதுசாரிக் கொள்கையில் ஊறிப் போயிருந்த இளைஞர் அஷ்ரஃப் தானொரு இடதுசாரி என்பதை வலியுறுத்துவதற்காக என்னவோ 1977ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தன்று கம்பளையைச் சேர்ந்த பேரியல் என்ற இள நங்கையைக் கைப்பற்றினார். இவர்களுக்கு ஒரே மகன். பெயர் அமான் அஷ்ரஃப்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசியல் சக்தியாக உருவாக்கிய பின்னர் அரசியல் வாழ்வில் அவருக்குக் கிடைத்த முதல் வெற்றி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் எதிர்க்கட்சியில் இருந்தவாறு குரல் கொடுக்க ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து 1989 பெப்ரவரி 15ல் நடைபெற்ற தேர்தலின் மூலம் 4 பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சி பெற்றது. 1994ல் ஆகஸ்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் மூலம் 7 உறுப்பினர்களையும், 2 தேசிய பட்டியல் உறுப்பினர்களையும் தன்வசம் வைத்துக் கொண்டு அவர் புரிந்த சாதனைகள் வரலாற்றில் இடம் பெறத்தக்கவை. இதுதவிர தனக்குக் கிடைத்த துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுப் பதவியின் மூலம் வட, கிழக்கில் பயங்கரவாத நடவடிக்கையினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்குச் சேவை செய்தார். துறைமுக அபிவிருத்தி அமைச்சின் மூலம் நாட்டின் நாலா பாகங்களிலும் தொழில் வாய்ப்பற்றிருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர் களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டதுடன் பெரும்பாலான முஸ்லிம், தமிழ் இளைஞர் யுவதிகளுக்குத் துறைமுகத்தினுள் நுழையக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

இலங்கை அரசியலில் சிறுபான்மை இனமக்களின் உரிமைகளை பேரம்பேசிப் பெற்ற புதிய அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவித்த பெருமை மர்ஹூம் அஷ்ரஃப்பையே சாரும். இந்த நாட்டில் ஐ.தே. கட்சியையும், பொ.ஐ.மு. அரசாங்கத்தையும் மாறி மாறி அரசியல் அதிகாரத்தில் அமர்த்திய பெருமை அஷ்ரஃப்பினுடைய அரசியல் சாணக்கியத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். மூன்றாவது தடவையாகவும் ஸ்ரீ.ல.மு காங்கிரஸுக்கும் அதன் குழந்தையான தே.ஐ. முன்னணிக்கும் ஆட்சி அதிகாரத்தில் அரசை நிர்ணயிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது என்பது எவராலும் மறுக்க முடியாததொன்றாகும்.

இம்முறை தேர்தலில் கிடைத்த சாதனைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண அவர் இல்லையே என்ற கவலை எம் எல்லோரையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம், சிங்கள மக்களை உள்ளடக்கிய அபேட்சகர்களை பொ.ஐ.முன்னணியில் நிறுத்தி அவர்களை வெற்றி பெற வைத்தது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். உண்மையாகவே அவர் இருந்திருந்தால் தே.ஐ.மு அபேட்சகரான காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி கூட பாராளுமன்றம் சென்றிருப்பார். அவரை (கதிர்காமத்தம்பியை) கூட்டிக் கொண்டே நான் பாராளுமன்றம் செல்வேன் என்று ஒலுவில் துறைமுகக் கட்டிடத்தில் சூளுரைத்தவர் கதிர்காமத்தம்பியுடன் மறைந்துவிட்டார்.

மர்ஹூம் அஷ்ரஃபின் அரசியல் அதிகார காலத்தில் அவர் சாதித்தவைகளில் தென்கிழக்குப் பல்கலைக்கழகமும், ஒலுவில் துறைமுகமும் குறிப்பிடத்தக்கவை. தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பற்றி அவருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவர் என்னிடம் அடிக்கடி ஒரு ஆசையை வெளிப்படுத்தி நிற்பார். ''இஸ்ஸடீன் ! இந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளைக் காணக்கூடிய நன்னாளை நான் காணவேண்டும். எனது இறுதிக் காலத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நான் அங்கு அதிதி விரிவுரையாளராக சட்டம் தொடர்பான பாடத்தைப் போதிக்க வேண்டும். இவற்றையெல்லாம் ஒலுவிலில் நிர்மாணிக்கப்பட்டுவரும் எனது சிறிய வீட்டிலிருந்து செய்ய வேண்டும் என்று கூறினார்.

இது தவிர செப்டம்பர் மாதம் அவரது அம்பாறை உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது பொதுத் தேர்தல் முடிந்ததன் பின்னர் கிடைக்கின்ற ஆசனங்களைப் பொறுத்து நான் சிலரை அந்த இடங்களுக்கு நியமனம் செய்து விட்டு நான் பாராளுமன்றத்துக்கு வெளியே கட்சித் தலைவராக இருந்து இவர்களை வழி நடாத்த வேண்டும் என்பதே எனது விரும்பமாகும்'' என்றும் கூறுவார்.

தலைவர் அஷ்ரஃப், மறைந்த ஜனாதிபதி ஆர். பிரமேதாசவுடன் வைத்திருந்த அரசியல் உறவு காரணமாக தேர்தலில் வெட்டுப் புள்ளியாக இருந்த 12.5% த்தை 5% மாகக் குறைத்தார்.

இதன் காரணமாக இன்று எத்தனையோ சிறுபான்மைக் கட்சிகள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறத் தகுதி பெற்றுள்ளன. இவர்கள் அனைவருமே தலைவர் அஷ்ரஃபுக்கு நன்றியுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ஊடகவியலாளர்களைப் பெரிதும் கௌரவிக்கும் தலைவர் அஷ்ரஃப் இன, மத, மொழி, பேதமின்றி எல்லோருடனும் சமமாகப் பழகி வந்ததுடன் செய்தியாளர்களுக்கு ஒரு துன்பமென்றால் அதை தாங்கிக் கொள்ளமாட்டார். அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவரோடு தொடர்பு வைத்திருந்த எல்லாத் தரப்பு செய்தியாளர்களும் இதற்கு சாட்சி பகர்வர்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இந்த நாட்டு அரசியலில் மேலாதிக்கம் செலுத்திய மர்ஹூம் அஷ்ரஃப் எப்போதும் தீர்க்கதரிசனத்தோடு சடுதியாகவே எடுக்கும் பல தீர்மானங்கள் பலருக்கு ஆச்சிரியத்தைக் கொடுத்தாலும் அவர் அமைத்த வியூகம் தரும் அறுவடையின் பின்னர் அவரது தூரநோக்குச் செயற்பாடுகளை மெச்சுவது வழக்கம்.

மர்ஹூம் அஷ்ரஃப் ஒரு அரசியற் கட்சியின் தலைவர் என்ற வகையில் எடுத்த எந்தவொரு முடிவும் மஸுரா அடிப்படையிலேயே எடுக்கப்பட்டது. இவர் அடிக்கடி மஸுராவில் பங்கு பற்றுபவரின் தகுதி தரம் பற்றி சிந்திக்காது அவரது கருத்தை மட்டுமே பார்க்க வேண்டும் என்பார். 49 பேர் சேர்ந்து எடுத்த ஒரு தீர்மானத்தை சற்றுத் தாமதகமாகி வந்த 50வது நபர் கூறும் ஆலோசனைப்படி மாற்ற வேண்டி ஏற்படும் என்பார்.

மர்ஹூம் அஷ்ரஃப் அம்பாறை மாவட்டத்தில் பங்கு பற்றுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் போதும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தியதன் பின்னரே மற்ற விடயங்களைப் பற்றிப் பேசுவது வழக்கம். மர்ஹூம் அஷ்ரஃப் இந்த விடயத்தில் தனது இறுதிக் காலத்தில் அதுவும் அவர் உயிரோடு இருக்கும் போதே தனது இலட்சியத்தில் வெற்றி பெற்றார் என்று கூறலாம்.

''என்னால் ஐக்கிய இலங்கையை உருவாக்க முடியாமற் போனாலும் ஐக்கிய அம்பாறை மாவட்டத்தையாவது உருவாக்குவதே எனது இலட்சியக் கனவுகளில் ஒன்றாகும் என்று அவர் சூளுரைப்பதையும், அதனை செயற்படுத்திய மையும் பெரும் சாதனையாகும்.

இவ்வாறன சிறப்புக்களையெல்லாம் பெற்றிருந்த தலைவர் எம்மைப் பொறுத்த வரை மரணிக்கவில்லை அவர் மறைந்து விட்டார். அல்லாஹ் அவருடைய பாவங்களை மன்னித்து நல்லருள் புரிவானாக! ஆமீன்.


**02.10.77இல், தலைவரினால் அளிக்கப்பட்ட நினைவுக் குறிப்பு**

[illegible]

02/10/77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளக் கமலமடி**
**உத்தமனார் வேண்டுவது**



சுவாமி விபுலானந்தர்
ஞாபகார்த்த பணிமன்றம்,
காரைதீவு

# Beta Travels

**MANPOWER CONSULTANTS L.L.NO: 1543**

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பும் வீட்டுப்பணிப் பெண்கள், சாரதிகள், தொழிற்சாலை ஊழியர்கள், கணனி இயக்குனர், மின்னிணைப் பாளர், குழாய் பொருத்துனர்களுக் கான விசாக்கள் பெற்றுத்தரப்பட்டு மிகவும் குறுகிய காலத்திற்குள் அனுப்பி வைக்கப்படுவர்.

(உங்கள் கடவுச்சீட்டுடன் இன்றே விஜயம் செய்யுங்கள்)

**BETA TRAVELS**

799, Maradana Road,
Colombo - 10,
Sri Lanka

Tel: 684206
Fax: 075-359859
Hotline: 077-320771

**துப்பரவான கல், மண் அற்ற தரமான அரிசி வகைகளை நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்**


# C.B. Rice Mill

## C.B. அரிசி ஆலை

**C.B.** அரிசி ஆலை,
உரிமையாளர் C.B. றபீக்,
நற்பிட்டிமுனை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம் தலைவர் மறைந்தாலும் அவர் நாட்டிய மரமும் அவர் ஏற்படுத்திய ஒற்றுமையும் மென்மேலும் விருட்சமாக மேலோங்கி நிற்கட்டும்

**எம். இசட். முனாஸ் காரியப்பர்**

ஆண்டாண்டு காலமாக அரசியலில் அனாதைகளாகி எடுப்பார் கைப்பிள்ளையாக முகவரியற்ற சமூகமாக தேடுவாரற்றுக் கிடந்த முஸ்லிம் சமூகம் இன்று இந்த நாட்டிலே அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் கூட தீர்மானிக்கும் ஓர் பலம் வாய்ந்த சக்தியாக மிளிர்வதற்கு வித்திட்ட எம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் பெருந்தகை மர்ஹூம் எம். எச். எம். அஷ்ர.்.ப் எம்மைவிட்டுப் பிரிந்து ஒரு வருடம் ஆனாலும் எம் உள்ளக் கிடங்கில் பல்லாண்டுகாலம் ஆக்கிரமித்தது போன்ற உணர்வையே ஏற்படுத்தி நிற்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் இயக்கமாக உருவெடுத்து வளரும் பருவத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி நமது நாடு முகம்கொடுத்த முதலாவது மாகாணசபை தேர்தல் யுத்தகளத்துக்கு மத்தியில் நடைபெற்ற ஒன்றாகும். தலைவர் கட்டளையிட்டார். அவரது தொண்டர்களாகிய நாங்கள் அரசியல் களத்தில் கால்பதித்து உயிரை கையில் பிடித்துக் கொண்டு முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்துகின்ற முதல் முயற்சியினை முன்னெடுத்துச் சென்றோம். அல்ஹம்துலில்லாஹ் நாங்கள் நினைத்ததையும்விட வட கிழக்கு மாத்திரமன்றி முஸ்லிம்கள் எவ்வாறாயினும் ஒற்றுமைப்படவேண்டும் என்ற திடசங்கற்பத்தை வலியுறுத்தி நிற்கிறது.

மாமனிதர் மறைந்த எம் தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ர.்.ப் அவர்களின் சமூகவிடுதலைப் போராட்டப் பாஷறையில் ஆரம்பப் பயிற்சி பெற்ற நாங்கள் அவர் காட்டிய வழியில் அவர் இட்ட கட்டளையை சிரத்தின் மேல் சுமந்து செயற்பட்டு இக்கட்சியை கண்ணீரும் செந்நீரும் சிந்தி கட்டி வளர்த்தோம்.

இறைவனின் அருளும் தலைவரின் விடாமுயற்சியும் போராளிகளின் துடிப்பும் இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆல விருட்சமாக ஆக்கி உள்ளது. அந்த ஆல விருட்சத்தின் கீழ் ஒற்றுமைப்பட்ட முஸ்லிம் சமூகம் கருத்து முரண்பாடுகளினால் தனிமனித விருப்பு வெறுப்புகளென்று சூறாவளி பேய்க் காற்றினால் சின்னாபின்னப்பட்டு விடக் கூடாது என்பது என் போன்ற போரளிகளின் பிரார்த்தனையாகும்.

நம் தலைவர் மறைந்தாலும் அவர் நாட்டிய மரமும் அவர் ஏற்படுத்திய ஒற்றுமையும் மென்மேலும் விருட்சமாக மேலோங்கி நிற்க வேண்டும் என்று தலைவர் மறைந்த இந்நாளில் நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

**எம். இசட். முனாஸ் காரியப்பர்,**
திட்டப்பணிப்பாளர்,
புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு,
முன்னாள் வட கிழக்கு மாகாண சபை உறுப்பினர்,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்ணமஹால்

## ஜ்வலர்ஸ்

நங்கையரின் பொன் எழில் மேனிக்கு
மேலும் அழகூட்ட புதுப் புது டிசைன்
நகைகளைப் பெற்றுக் கொள்ளவும்
உங்களுக்குத் தேவையான உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்குச் சிறந்த இடம்



ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து தருவதுடன்
22 கரட், தங்க நகைமேல் சீல் வைத்தும் தரப்படும்

**63, பிரதான வீதி,**
**கல்முனை.**

# பாவா

## டெக்ஸ்டைல்ஸ்

திருமண பட்டுச்சேலைகள்,
பாம்பே சல்வார் சூட்,
சாரி வகைகள்,
பிளவுஸ் துணிகள்,
ஆடவருக்கு தேவையான
சேட்டிங், சூட்டிங், ரெடிமேட்
உடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்



**பாவா**
**டெக்ஸ்டைல்ஸ்**

**63, பிரதான வீதி,**
**கல்முனை.**
**தொ.பே: 067-29461**

# M. S. M. RICE MILL





தரமான அரிசி வகைகளுக்கு நாடவேண்டிய
இடம்

## எம். எஸ். எம். அரிசி ஆலை

ஏ. சீ. ஏ. சதூர்,
எம். எஸ். எம். ரைஸ் மில்,
அட்டப்பள்ளம்,
நிந்தவூர்
தொ.இல: 067–50141

# BCM BARAKATH CENTRE

**Hardware Merchant**



**17, Main Street,**
**Maruthamunai - 04.**
**Tel: 067-29139**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓயாது ஒலித்த உரிமைக்குரல்

- யூ .எல்.ஏ. அஸீஸ் -

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக எமது சமூகத்தின் விடிவுக்காகவும் உயர்வுக்காகவும், தன்னை அர்ப்பணித்து மறைந்த எமது அன்புத் தலைவர், அஷ்-ஷஹீத் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.ஃப் அவர்களின் ஓராண்டு நினைவாக வெளியிடப்படும் நினைவு மலருக்கு இந் நினைவுச் செய்தியை வழங்குவதை பெரும் பேறாக கருதுகின்றேன்.

எமது நாட்டின் அரசியல் வரலாற்றில் நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் ஒரு அரசியல் கட்சிக்குத் தலைமை தாங்கி பல முன்மாதிரிகளுடன் அவற்றை வழி நடத்தி பல்லாயிரக் கணக்கான சவால்களுக்கு முகம் கொடுத்த, மறைந்த மாண்புமிகு தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.ஃப் அவர்களின் மன வலிமையும், வெற்றிகரமான மூளை வளமும், தீர்க்கதரிசனமான சிந்தனையும் கொண்டு விளங்கிய சிறந்த ஜனநாயக வாதியாவார்.

மறைந்த தலைவர் அவர்களிடம் ஒரு மனித வாழ்வுக்குத் தேவையான அத்தனை குணாம்சங்களும் சிறப்பாக மேலோங்கிக் காணப்பட்டன. ஒரு ஆசானாக, கல்விமானாக, அறிஞனாக, கவிஞனாக, ஒரு விடுதலை வீரனாக, சமூகத் தலைவனாக எல்லாவற்றுக்கும் மேலாக தீர்க்கதரிசனம் மிகுந்த அரசியல் ஞானியாக அவர் வகித்த பாத்திரங்கள் வரலாற்றில் என்றுமே அழித்து விடமுடியாத தடயங்களாகும்.

மிருதுவான இதயம் கொண்ட மனிதராக, எமது சமூகத்தின் சுதந்திரமான சுவாசத்திற்காக அவர் ஆற்றிய பணிகள்தான் அவர் மறைந்து ஓராண்டு கடந்தும்கூட பல இலட்சம் மக்களது மனங்களில் நீங்காத இடம் பிடித்தவராக திகழ்வதற்கும், இலட்சக்கணக்கான இதயங்கள் ஏங்குவதற்கும் காரணங்களாக அமைந்துள்ளன.

ஒரு மெழுகுவர்த்தியாக எமது சமூக மேம்பாட்டுக்காக உரிமைக்குரலாக அவர்கள் பலத்த கனவுகளுடன் ஓயாது ஒலித்து - உழைத்துக்கொண்டிருந்த வேளையிலேயே நடந்தேறிய அவர்களது திடீர் மறைவினால் ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் எம்மிடம் இருந்து மறையவில்லை. அவர்கள் எந்த இலட்சியங்களுக்காக தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்தார்களோ அவற்றை நிலை நிறுத்தப்பாடுபடுவதே நாம் அனைவரும் அவருக்குச் செய்யும் அன்பு மரியாதையாகும்.

எல்லாம் வல்ல இறைவன் எமக்காக தன்னையே அர்ப்பணித்த அன்புத் தலைவருக்கு மறுமையில் ஜன்னத்துல் பிர்தௌசில் உயர்ந்த இடத்தை வழங்கப் பிராத்திக்கின்றேன்.

**யூ.எல்.ஏ. அஸீஸ்,**
**பிரதேச செயலாளர்,**
**அட்டாளைச்சேனை,**
**06.09.2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BURHAN'S

நீண்ட கால பாவனை, நீடித்த உழைப்பு,
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம் இவற்றிற்கு

## புர்ஹான்ஸ்



மருதமுனையில் சகல விதமான
துவிச்சக்கர வண்டிகளையும்
நியாயமான விலையில் விற்பனை
செய்பவர்கள்.

**BURHAN'S**

387, 389, Main Street,
Maruthamunai-02,
Kalmunai.

T.P: 067-29239, Res/Fax: 067-20223

# *FARWIN* TRADERS

GENERAL RICE MERCHANTS, COMMISSION AGENTS IN LOCAL PRODUCE

***28, OLD MOOR STREET,***

***COLOMBO - 12***

*BRANCHES:*

*H. L. A. Jabbar*


396, Main Street, Kalmunai.

**T.P: 067-29347, 29578, 23065**

**FALEEL RICE MILL**
303, Main Street, Kalmunai,
T.P: 067-22021, 29427.

**ZIYATH RICE MILL**
303, Main Street, Ninthavur,
T.P: 067-50297, 508270.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முஸ்லிம் சமுகத்திற்கு முகவரியைத் தேடித் தந்தவர்

**- அல்-ஹாஜ் ஏ.எல்.ஏ. றசூல்**

بسم الله الرحمن الرحيم

இலங்கை வாழ் முஸ்லிம்களின் மாபெரும் தலைவராகத் தோன்றி, முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் முத்திரை பதித்து எம்மை விட்டும் பிரிந்து சென்ற மாமனிதரே மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர் சிறந்த கல்விமான், சமூகத் தொண்டன், இலக்கியவாதி, அரசியல் மாமேதை. பல தசாப்தங்களாக அரசியல் பின்னின்ற முஸ்லிம் சமூகத்தைத் தட்டி எழுப்பி முன்கொண்டு வந்த அரசியல் சாணக்கியன். பாராளுமன்ற உறுப்பினராக பதவிவகித்த காலத்தில் இன, மத, மொழி வேறுபாடின்றி ஈடும் எடுப்பும் அற்ற சேவைகளை ஆற்றிய மாபெரும் தொண்டர். புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல் துறைமுக அபிவிருத்தி அமைச்சராகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவராகவும், நுஆவின் தலைவராகவும், ஜனாதிபதி சட்டத்தரணியாகவும் இருந்த காலத்தில் இலங்கை நாட்டு மக்களுக்காக அளப்பரிய சேவையாற்றிய மாபெரும் சேவையாளர். அன்னார் அகாலமரணமடைந்த முதலாம் வருட நினைவு தினத்தை ஒட்டி அவரது வாழ்க்கைக் குறிப்புகளுடன் கூடிய நினைவு சிறப்பு மலருக்கு எனது நினைவுச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கென்று கல்வியியல் கல்லூரி ஒன்றை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்களில் முதன்மை இடத்தை வகித்தவர் இவர். தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் எமது சமூக ஆசிரியர்கள் பலர் இதன் காரணமாக நற்பணியாற்றி வருவதை நாம் அனைவரும் அறிவோம். இவரது அயராத சேவையினால் நிகழ்காலத்தில் மட்டுமல்ல எதிர் காலத்திலும் கல்வியில் முஸ்லிம் சமூகம் முன்னேறிவருவதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. இதுமட்டுமன்றி அவர் அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி, வவுனியா தேசிய கல்விக் கல்லூரி போன்றவற்றிற்கு தனது அமைச்சின் மூலம் வழங்கிய பஸ்வண்டிகள், மற்றும் பல காரியாலயப் பொருட்கள் என்பன இன்றும் அவரது நினைவாகவும் ஞாபக சின்னங்களாகவும் திகழ்கின்றன.

இவர் வாழ்க்கையில் எவருக்கும் அநீதி செய்ய எண்ணாத பண்பாளர் எதிரிகளையும் தன்பால் கவரக்கூடிய இரக்க சுபாவம் கொண்டவர். குறிப்பாக என்னுடன் மிகவும் அன்புடன் பழகியவர். எங்கு சந்தித்தாலும் புன்சிரிப்பால் கவர்ந்து விடும் காந்த சக்தி உடையவர். அப்படிப்பட்ட மாபெரும் தலைவனை நல்ல அன்பினை நாம் இன்று இழந்து கண்ணீர் வடிக்கின்றோம். இன்று நாடு இவரது பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளது. முஸ்லிம் சமூகமே இவரது இழப்பால் குழம்பியுள்ளது. அன்னாருக்கு நாம் அனைவரும் செய்யக்கூடிய கைமாறு என்னவெனில், நாட்டில் வாழும் பல்லின மக்களும் ஒன்று சேர்ந்து இன, மொழி, மத சமூக வேறுபாடுகளை மறந்து சமாதானத்தையும் சுயகௌரவத்தையும் கட்டிக்காப்பதாகும். குறிப்பாக முஸ்லிம் மக்கள் ஒரே குடையின் கீழ் குவிந்து தமது உரிமைகளை வென்றெடுக்க அரும் பாடுபடவேண்டும். அப்போதுதான் அம் மாபெரும் தலைவரின் ஆத்மா சாந்தியடையும். அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது கல்விக் கல்லூரியின் அனைத்து ஊழியர்களினதும் நன்றியும் ஆதரவும் என்றும் உரித்தாகுக. அப்பெருந்தகையின் உழைப்பிற்கும் அர்ப்பணிப்பிற்கும் இறைவனின் சாந்தியும், நல்லருளும் நல்லாசியும் என்றென்றும் கிடைப்பதாகுக. அன்னார் என்றென்றும் ஜன்னத்துல் பிர்தௌஸ் என்னும் சுபனவதியில் வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**நன்றி**

அல்-ஹாஜ்: ஏ.எல்.ஏ. றசூல், E.Ed. (Aus)
பீடாதிபதி,
அட்/தேசிய கல்விக் கல்லூரி, அட்டாளைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Specialist for wedding sarees

AND BOMBAY SALWARS

# OCIANIK EMPORIUM

*Wholesale and Retail Dealers in Textiles*

**MAIN STREET, SAINTHAMARUTHU. TEL: 067-22431**



திருமண பட்டுச் சேலைகள், பாம்பே சல்வார்சூட், சாரி வகைகள், பிளவுஸ் துணிகள், ஆடவருக்குத் தேவையான சேட்டிங், சூட்டிங், ரெடிமேட் உடைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள சிறந்த ஒரே ஸ்தாபனம்

## ஓசியனிக் எம்போரியம்

பிரதான வீதி, சாய்ந்தமருது ☎ : 067-22431

PHILIPS **DAEWOOD**
Daytron
National Panasonic
**USHA**

HAYLEYS ELECTRONICS

***Government Supplier, Sole Distributors and Dealers of Hayleys Electronic Ltd., and Usha Products such as Steel & Wooden Furniture of Household Goods, Office Equipments & Stationeries, Eletrical Appliances & Luxury Goods etc.***
***Authorised Dealer of Sisil Singer Sri Lanka Ltd.,***


**USHA** Show Room,

**147, Main Street, Kalmunai, Sri Lanka.**

Call: 067-29828, City Office: 01-348159
Resd: 067-21539 & 29301 Fax: 067- 20341

# NIPPON ELECTRONICS

**Dealers in: All Kinds of Genuine imported Spare Parts for T.V., Radio, Refrigerator, Video Deck, Amplifier and All Kinds of Radio, T.V., Deck and Electrical Fans, Tubelights etc.**



**110B, Mian Street, Kalmuani.**
**(Opp. of People's Bank, Kalmunai)**
**✆ : 067-29964**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தனிப்பட்ட கருத்து முரண்பாடுகளைக் களைந்து மர்ஹூம் அஷ்ர.ஃப் அவர்களின் இலட்சியங்களை உயிர்பெறச் செய்வதே நாம் அவருக்கு செய்யும் கைமாறாகும்.**

**கமால் முஸ்தபா**
**பிரதான வீதி,**
**நிந்தவூர்.**

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து கிழக்கு மாகாண அரசியலில் கொடிகட்டிப் பறந்த கேற்முதலியார் எம். எஸ். காரியப்பர், முஸ்தபா ஆகியோரது அரசியல் வம்சத்தில் வந்த நான் அரசியலில் ஈடுபடாதிருந்த வேளையில் நிந்தவூரின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு தலைவராக என்னைத் தெரிவு செய்து அதன் பின், குறுகிய காலத்துக்குள் அமைப்பாளராகவும் நியமித்தது மட்டுமல்லாமல் சில காலத்தின் பின் மாவட்டக் குழு உறுப்பினராகவும். என்னை நியமித்த அரசியல் விற்பன்னர், சட்டவல்லுனர் மனித நேயமிக்க மாமேதை மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ர.ஃப் அவர்கள் என்னை, ''நான் யார?'' என்று அறிவதற்கான பெருமானத்தை முத்திரை குத்தி ஒப்புவித்தமையை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது.

பல அரசியற் கட்சித் தலைவர்கள் என்னை அணுகியும் கூட தலைவர் அஷ்ர.ஃப் அவர்களை விட்டுவிட்டு என்னால் வேறு எவருடனும் சேர முடியவில்லை.

மறைந்த என்னுடைய தந்தை முன்னாள் அமைச்சர் எம்.எம். முஸ்தபா அவர்கள் தலைவருடன் இணைந்ததற்குப் பிறகுதான் அம்பாரை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுடைய முழுமையான வெற்றியை நாம் காணக்கூடியதாக இருந்தது. இதனை தலைவர் அவர்கள் பல மேடைகளில் கூறி உள்ளார்.

உதாரணமாக ஜனாதிபதித் தேர்தலின் பிறகு அதிகாலை 4.00 மணியளவில் எனது தந்தைக்கு தொலைபேசி மூலம் நன்றியைத் தெரிவித்துவிட்டு அதே நாள் அந்த பெருந்தகை அவர்களும் முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களும் எனது இல்லத்துக்கு விஜயம் செய்து நன்றியைத் தெரிவித்தார்கள். அப்படியான ஒரு மாமனிதரை முஸ்லிம் சமூகம் ஒரு போதும் மறந்து விடமாட்டாது, மறந்து விடவும் கூடாது.

எதிர்கால முஸ்லிம் சமுதாயத்தின் உதாரண புருஷராக விளங்கிய அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் முஸ்லிம்கள் இந்த நாட்டில் சிறுபான்மையாக இருந்தாலும் ''நாங்களும் இலங்கையர், எங்களுக்கும் சகல அரசியல் உரிமைகளும் உண்டு'' என்று நிருபித்த அந்த மாமனிதரை நாங்கள் ஒரு போதும் மறந்து விடலாகாது.

தலைவர் தனது வாழ்நாளில் எப்போதும் மனிதர்களை எந்த அடிப்படையிலும் தரம் பிரித்துப் பார்த்ததில்லை. குறிப்பாக அரசியலை பொறுத்தமட்டில் சீனியர், ஜூனியர் என்ற பேதமும் பாரத்ததில்லை.

தலைவர் அஷ்ர.ஃப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிக்காக கைக்கொண்ட யுக்திகளில் ஒன்றுதான் மக்கள் சக்தி அவர் பின்னால் அணிதிரண்டிருக்கிறதோ? அவரை அரவணைத்துச் செல்வதில் அவர் மிகவும் கரிசனை காட்டியவர் இதுவும் அவரது அரசியல் சாணக்கியத்துக் கிடைத்த வெற்றியாகும்

மாமனிதர் நம் மத்தியில் இல்லாமல் இறையடி எய்திவிட்டார். அவர் ஆற்றிய சேவை நம்மத்தியில் நினைத்து நிறைந்து நிற்கிறது. அவர் ஸ்தாபித்த ஸ்தாபனங்கள் நம் மத்தியில் நிலைத்து நிற்கின்றன. இதனைப் பாதுகாக்க வேண்டியது முஸ்லிம் சமுதாயத்தினுடைய கடமை. இந்தக் கடமையில் ஒன்றுதான் எங்களுக்கிடையில் உள்ள ஒற்றுமை.

தலைவருக்கு நாம் செய்யும் கைமாறு என்னவென்றால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வளர்ப்பதற்காக தலைவர் முஸ்லிம் சமுதாயத்தை எவ்வாறு ஒற்றுமைப்படுத்தினாரோ அந்த ஒற்றுமையை நாம் எல்லோரும் எங்களுக்குள் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட கருத்து முரண்பாடுகளைக் களைந்து அவரது இலட்சியங்களை உயிர்பெறச் செய்வதே எனது பேரவாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**AL- HAJ. Y. L. HABEEB MOHAMED**

(Dip-in-Agri. and Dip-in-Marketing)
Distributor for Pepsi Cola
(Ampara Distict)

**AND STAFF**

# ORAIZA MARKETING SERVICES

Main Street,
Nintavur - 25.



Regd. No: කළ / 124 of 28-02-1971.

T. P: 067-29180

*மட்டுப்படுத்தப்பட்ட*

**கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கல்முனை**

සීමාසහිත කල්මුනේ විවිධ සේවා සමූපකාර සමිතිය - කල්මුනේ

*Kalmunai Multi Purpose Co-operative Society Ltd.*

*அரசியல் வானில் நீ ஒரு விடிவெள்ளி,*
*தலைவா! உங்களுக்காக நாம் இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.*

தலைவர், இயக்குனர் சபை உறுப்பினர்கள், பொது முகாமையாளர், கிளை முகாமையாளர்கள்,
மற்றும் உத்தியோகத்தர்கள், பொதுச் சபை உறுப்பினர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாபெரும் தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ர∴ப்

- ஐ.ஏ.ஹமீட் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் அதன் தேசிய தலைவரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் அமைச்சருமான அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ர∴ப் அவர்களை சென்ற 16.09.2000ம் தினம் விதியின் கொரூரக் கரங்கள் கவர்ந்து சென்றுவிட்டன. ''இன்னாலில்லாஹி வொஇன்னா இலைஹிராஜிஊன்.''

தலைவர் அஷ்ர∴ப் அவர்களின் திடீர் மறைவு இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் மிகப் பெரும் தலைமைத்துவ வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது. இந்த வெற்றிடம் பொருத்தமான முறையில் நிரப்பப்படுமா என்பதை காலம்தான் தீர்மானிக்கும்.

மர்ஹூம் அஷ்ர∴ப் அவர்கள் ஒரு பிறவித் தலைவர். அவரது பரந்துபட்ட நோக்கும் தூய இலட்சியமும் சிலாகிக்கப்பட்ட ஒரு விடயம். அரசியல் அநாதைகளாக இருந்த இலங்கை முஸ்லிம்களுக்குத் தனியான அரசியல் விலாசம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தவர் அவர். ஏனைய சமூகங்களோடு முஸ்லிம்கள் ஒற்றுமையைப் பேணவேண்டும் எனவும் வலியுறுத்தியவர். இந்தப் பணியிலேயே அவர் தன் இறுதி மூச்சையும் விட்டார்.

1960களிலே நான் அஷ்ர∴ப் அவர்களை முதன் முதலில் சந்தித்தேன். மருதமுனை இளைஞர் புத்துணர்ச்சி மன்றம் நடாத்திய பேச்சுப் போட்டியில் பதினேழு வயதிற்குட்பட்டவர்கள் பிரிவில் அனைவரும் வியக்கும் வண்ணம் அருமையாகப் பேசி அப்போது முதற் பரிசைத் தட்டிக் கொண்டார். அதன்பின்னர் அவர் சட்டக்கல்லூரியில் பயின்ற பொழுது மீண்டும் அவரைச் சந்தித்து நட்பைப் புதுப்பித்துக் கொண்டேன்.

சட்டக்கல்லூரி நாட்களில் அவரும் நானும் கொழும்பு கோட்டை சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் இளைஞர் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தோம். அவர் சபாநாயகர்; நானோ சாதாரண எதிர்க்கட்சி ''எம்.பி.''யாக இருந்தேன். எங்கள் இளைஞர் பாராளுமன்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அக்கால கட்டத்தில் கல்விச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்கள், முஸ்லிம் மாணவிகளுக்கும் நடன பாடத்தை கட்டாயமாக்கினார். இதனால் சமூகத்தில் பல சர்ச்சைகள் எழுந்தன. அவ்வேளை ஜனாப் அஷ்ர∴ப் அவர்கள் ''அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்'' என்ற ஒரு சிறிய புத்தகம் எழுதி அதை இளைஞர் பராளுமன்ற உறுப்பினர்களுக்கு வினியோகித்தார். அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் ஆத்திரமடைந்தாரோ தெரியவில்லை. அடுத்த நாளே இளைஞர் பாராளுமன்றம் இழுத்து மூடப்பட்டது. இங்ஙனம் தனக்கு சரியெனப்பட்டதை எவருக்கும் பயப்படாமல் வெளியே சொல்லும் தன்மையுடையவராக இளைஞர் அஷ்ர∴ப் இருந்தார். தலைமைத்துவப் பண்பை அவர் அப்போதே வெளிக்காட்டினார். சமூகத்திற்குத் தன்னாலான எதையேனும் செய்ய வேண்டும் என்ற துடிப்போடு இருந்தார். மற்றவர்களின் சிந்தனைகளிலிருந்து மாறுபட்ட சிந்தனை உள்ளவராக அவர் மிளிர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்த தினத்தில் கொழும்பில் ஒரு தேநீர் விருந்து ஏற்பாடு செய்திருந்தார். அதில் நானும் கலந்து கொண்டேன். இந்த வைபவத்தில் நான் பேசும் பொழுது ''அஷ்ர.்.ப் சாக்கடையான அரசியலுக்கு ஒரு போதும் வரக்கூடாது. ஏற்கனவே அதில் பலர் புரண்டு கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் சமூகத்திலிருந்து பல சுபரீம் கோர்ட் நீதியரசர்களும், அட்டோர்னி ஜெனரல்களும் வரவேண்டும். எனவே, அஷ்ர.்.ப் நீதிச் சேவையில் இணைந்து பணியாற்ற வேண்டும்'' எனக் கூறினேன்.

எனது புத்திமதியை செவிமடுக்காமல் அவர் அரசியலுக்கு வந்தமைக்காக நான் அவருக்கு நன்றி பாராட்டுகின்றேன். ஏனெனில் அவர் அரசியலுக்கு வராமல்விட்டிருந்தால் தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனை முஸ்லிம் சமுதாயம் பெற்றிருக்கமாட்டாது. முஸ்லிம்கள் குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தங்களது அரசியல் தனித்துவத்தை அடைந்திருக்கமாட்டார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஆலவிருட்சமும் முளைவிட்டு வளர்ந்திருக்கமாட்டாது.

கொடுத்த வாக்கை காப்பற்றும் நாணயம் தலைவர் அஷ்ர.்.பிடம் வெகுவாக இருந்தது. 1994ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது, அம்பாரை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் ஆறில் ஏதேனும் ஒன்றிலேனும் முஸ்லிம் காங்கிரஸ் தோல்வியுற்றால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வேன் என அவர் சூளுரைத்தார். முஸ்லிம் காங்கிரஸ் நிந்தவூர், பொத்துவில் ஆகிய இரண்டு பிரதேசசபைகளில் தோல்வியைத் தழுவியது. தலைவர் அஷ்ர.்.ப் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். மேலும் அதே தேர்தலில் கல்முனை பிரதேச சபையில் மிகக் கூடிய தெரிவு வாக்குகளை எவர் பெறுகின்றாரோ அவரையே தவிசாளர் ஆக்குவேன் என்று பகிரங்கமாக அறிவித்தார். அவர் கூறியபடியே ஆகக் கூடிய தெரிவு வாக்குகள் பெற்ற என்னை தவிசாளராக்கினார்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியும் உயர்ச்சியும் அதன் கல்வித் தராதரத்திலேயே தங்கியுள்ளது என்று தலைவர் அஷ்ர.்.ப் உறுதியாக நம்பினார். இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் அவர் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். எதிர் நீச்சல் போட்டே இந்தக் காரியத்தை அவர் சாதித்தார். இந்த ஒரு விடயத்திற்காக மாத்திரமேனும் அம்பாரை மாவட்ட மக்கள், விசேஷமாக முஸ்லிம்கள், தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகவும், நன்றியுடையவர்களாகவும் இருக்க வேண்டும்!

இலங்கை முஸ்லிம் அரசியலில் மட்டுமன்றி, பொதுவாக இலங்கை அரசியலிலேயே தலைவர் அஷ்ர.்.ப் ஒரு மேதாவாக நிமிர்ந்து நின்றார். இந்த நாட்டில் எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு அரசியல் சீர்திருத்தம் ஒன்றே வழி என அவர் திடமாக நம்பியதோடு அத்தகைய ஒரு தீர்வைக் கொண்டுவருவதற்காக தனது இறுதி மூச்சு வரை உழைத்தார். சமூகங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு இந்த நாட்டில் சமாதானம் மலரவேண்டும் என மனமார விரும்பினார். அவரது இந்தக் கொள்கையைப் பின்பற்றுவதே தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுக்கு நாம் அளிக்கும் மாபெரும் காணிக்கையாக இருக்கும்.


அல்லாஹ், தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதியை அளிப்பானாக.

28.08.2001

ஐ.ஏ. ஹமீட்,
முன்னாள் தவிசாளர்,
கல்முனை பிரதேச சபை.

குறிப்பு: இந்தக் கட்டுரை தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் மரணத்தின் பின்னர் 14.12.2001ம் ஆண்டு 'டெயிலி நியூஸ்'' பத்திரிகையில் வெளியான இவரது இரங்கல் கட்டுரையின் தமிழாக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயிரம் ஆண்டுகளில் செய்து முடிக்கவேண்டிய பணியினை அரைநூற்றாண்டில் செய்து முடித்த அரசியல் ஞானி மர்ஹூம் அஷ்ர.:ப்

-ஏ.எல் மீராமுகையதீன், அதிபர்.

மறைந்த தலைவர், மாமனிதர் மர்ஹூம் எம். எச். ஏம். அஸ்ர.்.ப் அவர்களின் மறைவின் ஓராண்டு நிறைவையொட்டி வெளியிடும் இந்நினைவு மலருக்கு நினைவுச்செய்தி வழங்குவதில் நாம் மன நிறைவு அடைகின்றோம்.

இலங்கை அரசியலில் பேரினவாதங்களினாலும், பிரதேச சந்தர்ப்பவாதங்களினாலும் கூறுபடுத்தப்பட்டு சுய விலாசமின்றிருந்த எமது சமுதாயத்தைத் தனக்கே உரித்தான ஆழுமைப் பண்புகளால் சீர்திருத்தி புனரமைத்து தனித்துவமான அரசியல் முகவரியைப் பெற்றுத் தந்த அரசியல்ஞானி மர்ஹூம் அஸ்ர.்.ப் அவர்களின் அபார சாதனையை நன்றியுணர்வுடன் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றோம்.

காலத்திற்குக் காலம் இலங்கைப் பாராளுமன்ற ஆசனங்களை அலங்கரித்து ஆட்சியாளர்களின் எடுப்பார் கைப்பிள்ளையாக வாழ்ந்து வந்த முஸ்லிம் சமுதாயத்தை ஆட்சியின் பங்காளர்களாக மாற்றிக் காட்டியது மட்டுமல்லாது ஆட்சியை தீர்மானிப்பவர்களும் நாங்களே என்பதை நிதர்சனமாகச் செய்து காட்டிய செயல் வீரர் அவர்.

அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்ற மாயைகளை பெரிதாகக் காட்டி மக்களை ஏமாற்றி வந்த அரசியல்வாதிகளுக்கு இவையல்ல அரசியல்; அரசியல் வேறு, இவை அரசியலில் ஒரு சாதாரண விடயம் என்பதைத் தமது அமைச்சுக் காலத்தில் செய்து காட்டினார். பிரதேச அலகு, பல்கலைக்கழகம், துறைமுகம், நகர அபிவிருத்தி போன்ற பல விடயங்களைத் தொட்டுக்காட்டிச் சென்றுள்ளார்.

மறைந்த தலைவர் எம். எச். எம். அஸ்ர.்.ப் அவர்களின் தூரநோக்கான சிந்தனையும் பரந்து விரிந்த சமூகப் பார்வையும் திட்டமிடல், வழிநடத்தல், முடிவெடுத்தல், மொழித்தேர்ச்சி, வாக்குவன்மை போன்ற பல ஆழுமைப் பண்புகள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது வரலாறு மீண்டுமொருமுறை இவ்வாறான தலைவரொருவரைச் சந்திக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஆற்றவேண்டிய அளப்பெரும் பணிகளையெல்லாம் அரைநூற்றாண்டு மாத்திரமே வாழ்ந்து ஆற்றிவிட்டு எம்மை விட்டுப் பிரிந்த தலைவர் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு உயர்ந்த 'ஜன்னதுல் பிர்தௌஸ்' எனும் சுவனபதியில் இணைத்துக் கொள்ள எல்லாம் வல்ல இறைவனிடம் எமது கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**அல்-மனார் மத்திய கல்லூரி,**
**மருதமுனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW LANKA MEDICALS

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''
உங்களுக்குத் தேவையான சகல விதமான மருந்து வகைகளையும்
நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்




**நியூ லங்கா மெடிக்கல்ஸ்**

உரிமை: **அல் ஹாஜ்.எம்.ஏ.எம். சுபைடீன்**
**மெயின் வீதி,**
**அட்டாளைச்சேனை - 09.**
**தொ.பேசி.இல: 067-77937**



# M. P. A. TRADE CENTRE


·172, Main Street, Ninthavur, Sri Lanka T.P: 067-50026, 50526




**DEALERS IN: MITSUI CEMENT, Building Material Items, Electrical Goods, Anton, S-Lon, PVC Goods, Robbialac Paint, Steel Furniture, B. O. P. Tea, Rice & L. P. Gas**

**எம். பீ. ஏ. ரேட் சென்ரர்**
**172, மெயின் வீதி,**
**நிந்தவூர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எண்ணற்ற சோதனைகளால் துயருற்ற இஸ்லாமிய சமுதாயம் விடிவுபெற இதய சுத்தியுடன் உழைத்த பெரும் தலைவர் மர்ஹூம் அஷ்ர∴ப்

**- ஏ.எம்.ஏ. சமது,** அதிபர்.

இஸ்லாமிய இதயத் துடிப்புக்களை ஸ்தம்பிக்கச் செய்த கௌரவ அமைச்சர், தேசியத் தலைவர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்களின் மரணம் எனும் இன்னல் சேதி கேட்டு ஒரு வருடம் கடந்து விட்டது. எம் இதயங்களில் உயிரோவியமாய் வீற்றிருந்து, நடமாடிய அன்னாரின் அன்பு உருவம் இன்று அசையாதிருக்குகின்றது.

ஈழத்து முஸ்லிம்களின் இலட்சோப இலட்சம் இதய சாம்ராஜ்யங்களில் அரசோச்சிய மன்னனை அரசியல் பேரறிஞனை அகிலம் அறிந்த அரும்பெருந்தலைவரை இழந்து இன்றும் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றது முஸ்லிம் சமூகம். அது அன்னாரின் மண்ணறைக்கும் ஊடுருவுகின்றது.

எண்ணற்ற சோதனைகளால் இம்சைப்படுத்தப்பட்ட இஸ்லாமிய சமுதாயம் வேதனைகளைக் களைந்து விடிவு பெற இதய சுத்தியுடன் போரடி, உழைத்த பெருந்தலைவரது, புகழ்பூத்த மனிதப் புனிதனது சுழற்சியின் வேகம் என் மனக் கண்ணில் விரிகின்றது.

தொட்டதை ஜோதியாய் துலங்கச்செய்து புகழ்பெறவைக்கும் ஒப்பரிய மாமனிதரே! நீ விரித்த மரணத்தின் வித்து இன்னும் புரியாத புதிரே.

பாராளும் வல்லமை பெற்ற பாந்தவ்ய தலைவரே! பாசத்தால் பிணைக்கும் உந்தன் சாணக்கியம்- நினைந்து நினைந்து உருகவைக்கும் நினைவுகள் ஒன்றோ? இரண்டோ? உங்களுடன் இருந்த போது இதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன், என்கண்ணீர் பனிக்கின்றது.

அம்மன் கோயில் வீதியில் வீடு துறந்து அகதியாய் வெளியேறி கொழும்பில் குடியேறினாய். எம் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. சகலதையும் துறந்து சென்றதனால் தளர்ந்திருந்த தலைவரை சில மாதங்களின் பின் எண்மர் சந்திக்கச் சென்றோம். சமுதாயம் விடிவு காண, விட்ட பணியைத் தொடர முன்வருமாறு உருக்கமாக வேண்டுகோள் விடுத்தோம். எமது கோரிக்கையை ஏற்று ''நீங்கள் எல்லோரும் கட்சிப் பணியைத் தொடர என்னுடன் கைகோர்க்க முன்வந்தால் நான் தயார்'' என்று கூறி ஒப்பந்தம் செய்தோம். அதனை எழுதி முதலில் நானும் ஏனைய எழுவரும் கையொப்பமிட்ட அந்த நிகழ்வு சரித்திரமாகிவிட்டதை எண்ணிச் சிரிக்கிறேன்.

இணைந்து கையொப்பமிட்ட நண்பர்கள் ஒலுவில் நூாஹுலெவ்வை, அட்டாளைச்சேனை யூ.எம்.வாஹித் மாஸ்டர், நிந்தவூர் ஹசனலி, மருதமுனை ஹனிபா மாஸ்டர், கல்முனைக்குடி அன்பு முகையதீன் மாஸ்டர், சாய்ந்தமருது கட்டடக் கலைஞர் இஸ்மாயில் ஆகியோருடன் எமது பணிகள் தொடர்ந்தன. பொத்துவில் தொடக்கம் ஓட்டமாவடி மட்டுமல்ல கிண்ணியா, மூதூர் என்றெல்லாம் எம் பணிகள் தொடர்ந்தன. தலைவர் அடிக்கடி வந்து சென்றார்.

கட்சியின் பிரசாரத்திற்காக சிறு சிறு கருத்தரங்குகளை வீடுகளில், வீட்டு முற்றங்களில் கூட்டிய போது கூட்டத்தினருடன் நிலத்தினில் அமர்ந்திருந்து நீண்ட நேரங்களைச் செலவிட்ட தலைவரின் கட்சிப் பணியின் ஆரம்பம் இன்னும் நிழலாடுகின்றது. தாய்மார்களை தனது பேச்சாற்றலால் ஈர்த்தெடுத்த பாங்கு சிந்திக்க வைக்கும் பாடமாகும், தலைமையின் உண்மைப் பண்பாகும்.

தேர்தல் காலத்தில் சில்லறைச் செயல்களால், போதைப் பானங்களால் நாசமாகிச் சீரழியும் இஸ்லாமிய இளம் சமுதாயத்தைப் பேரின வாதிகளிடமிருந்து 'எதுவரினும் அதை ஏற்பபேன்' என சூளுரைத்து அதனைத் துணிவுகொண்டு மீட்டெடுத்த மேதையே! இந்த இலட்சிய வேட்கை எவருக்கும் இல்லை. அரசியல் அதிகார ஆங்காரம் அன்புச் சகோதரர் இப்றாஹீமை கைதுசெய்து காவலில் வைத்துவிட்டதைப் பொறுக்காது என்னையும் அழைத்துச்சென்று அர்த்த ராத்திரியில் அதிகாரியைக் கண்டு பேசி மீட்டெடுத்து வீடு கொண்டு சேர்த்து விட்டு தன்னந் தனியாக அதிகாலை இரண்டு மணிக்கு அம்மன் கோயில் வீதியால் வீடுநோக்கிப் பயணம் செய்த துணிவுக்கு நிகரேது தலைவரே!


ஒன்றாய்க் கலந்து, உயிருடன் உறவாடி, உண்மை அன்பினால் பிணைந்து, அடுத்தவர் அவப்பழிகளை யும் தூக்கி வீசி, என்னை என்றும் நினைவில் நிறுத்திய பெருமனங்கொண்ட பேரறிஞனே! இன்னும் உன் பிரிவை எண்ணி ஏங்குகின்றேன். நாம் வளர்த்த மரத்தடியில் என்றும் நிலைத்திருக்கும் எண்ண முண்டு.

கட்சியின் ஆரம்ப மகாநாட்டில் கட்சிக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க முன்வந்த எண்மருக்கு விருது வழங்கிக் கௌரவித்த போது தவிர்க்க முடியாத சூழ்நிலையினால் தலைவரிடம் இருந்து விருதைப் பெறும் பாக்கியத்தை இழந்ததை எண்ணி இன்றும் வேதனைப்படுகின்றேன்.

**ஏ.எம்.ஏ. சமது,**
**அதிபர், ஷம்ஸ் மத்திய கல்லூரி,**
**மருதமுனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AKRAM FARM HOUSE



*Distributors For:*
*Agro Chemicals Fertilizers,*
*Animal Health Products*

விநியோகஸ்தர்:
விவசாய இரசாயனம், உரவகைகள்,
மிருக உற்பத்திப் பொருட்கள்.

## அக்ரம் பாம் ஹவுஸ்

116, பிரதான வீதி, கல்முனை.

**116, Main Street, Kalmunai.**
**Dail: 067 - 29257, Fax: 29157, Res: 067-21557, Store: 067-60357**



பர்வின் மரம் அரியும் ஆலை,
தச்சு தொழிற்சாலை.

**FARWIN FURNITURES**

## பர்வின் பேர்னிச்சர்


சகல விதமான
மரத்தளபாடங்களுக்கும்
மருதமுனையில் தலைசிறந்த
மர ஆலை.
நியாய விலையில்
உங்களுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும்
பெற்றுக் கொள்ளலாம்

உரிமை: அல் – ஹாஜ். ஏ. எல். எம். முஸ்தபா

**பிரதான வீதி,**
**பெரியநீலாவணை, மருதமுனை.**
**☎ : 067-29563, 21068, 20936**



# N.J.R. RICE MILL




**கல், மண் அற்ற சிவப்பு, வெள்ளை, சம்பா**
**போன்ற அனைத்து ரக சுத்தமான அரிசி**
**வகைகளுக்கும் நாடவேண்டிய ஆலை**
**என்.ஜே.ஆர். அரிசி ஆலை**

MAIN STREET,
NINTHAVUR.
T.P: 067-50306


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைமைத்துவப் பண்புகளுக்கு வரைவிலக்கணத்தைத் தனது நடவடிக்கைகள் மூலம் வகுத்துக் காட்டிய செம்மல் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரஃப்

- அல்ஹாஜ் ஏ.எச்.ஏ. பஷீர்.
அதிபர்.

بسم الله الرحمن الرحيم

இக்கல்லூரியின் வளர்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் ஆறு ஆண்டுகால அமைச்சர் பதவிக் காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி அதிகம் என்று கூறலாம். அமைச்சர் பொறுப்பு ஏற்றதிலிருந்து வருடா, வருடம் இக்கல்லூரிக்காய் - பெண்கல்வியின் வளர்ச்சிக்காய் ஒதுக்கித் தந்த நிதியை உணர்வுகள் உள்ள எந்த மனிதரும் மறக்க மாட்டார்கள், இக்கல்லூரி இருக்குமளவுக்கும் அவற்றின் சுவடுகள் இருந்து கொண்டேயிருக்கும்.

கல்லூரியின் முன் தோற்றத்தையே மாற்றியமைத்து மாணவிகள் விடுதிக்கு புதுச்சோபை கொடுத்து வருகின்ற, போகின்ற மனிதர்களின் இதயங்களிலெல்லாம் ''அஷ்ரஃப் '' என்ற நாமம் பதியும்படியாய் செய்துவிட்டு மறு உலகம் புறப்பட்டுச் சென்ற இப் பெருந்தலைவனை எண்ணும் போதெல்லாம் இக்கல்லூரி துயரத்தால் வெதும்புகிறது.

மக்கள் நிம்மதியாக உறங்க வேண்டும் என்பதற்காகத் தான் விழித்திருந்து, ஒரு நூற்றாண்டுச் சேவையைப் பத்தாண்டுக்குள் நிறைவேற்றிய புண்ணியவானை யாரும் இலகுவில் மறந்து விட முடியாது. புனரமைப்பு, புனர்நிர்மான அமைச்சு என்றால் என்ன என்பதனை அமைச்சரவைக்கும், மக்களுக்கும் எடுத்துக்காட்டிய வள்ளல் பெருமான் ஆவார். தலைமைத்துவப் பண்புகளுக்கு வரைவிலக்கணத்தைத் தனது நடவடிக்கைகள் மூலம் வகுத்துக்காட்டிய செம்மல். தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தைப் பெற்றுத் தந்த பெருந்தகை. கல்விக் கூடங்களிலும் கலையம்சம் பொருந்திய கட்டிடங்களைத் தோற்றுவிக்கலாம் என்று ஏனையோருக்குக் காட்டிய மகான். இலங்கை முஸ்லிம்களின் குரலை உலகெங்கும் ஓங்கச் செய்த வல்லவர்.

இக்கல்லூரியினை நாட்டின் தலை சிறந்த கல்லூரியாக மாற்ற வேண்டுமென்ற முனைப்பில் அன்னார் கண்ட கனவுகள் மிகப்பெரியது.

''கல்விக்காகச் செய்யப்படும் சேவைகளுக்கும் செலவுகளுக்கும் மனிதரிடத்திலும் அல்லாஹ் விடத்திலும் நிச்சயம் நன்மதிப்புண்டு'' என்ற நபிமொழிக்கிணங்க எமக்காய், எம் சமூதாயததிற்காய், எம் நாட்டுக்காய் சேவை செய்த நல்லவரை, வல்லவரை அறிஞரை, கவிஞரை - ''யா அல்லாஹ்! நீ பொருந்தி ஜன்னத்துல் பிர்தெளசை அவருக்கு காணிக்கையாக கொடுத்தருள்வாயாக! அன்னாரின் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் உள்ளங்களில் சாந்தியை நிலவச் செய்வாயாக!'' என்ற பிரார்த்தனையில் இக்கல்லூரியின் அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவிகள், ஊழியர்கள், பெற்றோர், பழையமாணவிகள், நலன் விரும்பிகள் ஆகியோருடன் இணைந்து நானும் இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கின்றேன்.


வஸ்ஸலாம்

அல்ஹாஜ் ஏ.எச்.ஏ. பஷீர்,
அதிபர்.
மஹ்மூத் பெண்கள் கல்லூரி,
கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Abans Ltd.

# LG




Express Cool



**LG** GR 182 REFRIGERATOR

*1st seller in Sri Lanka*

# Abans Ltd.

498, Galle Road, Colombo - 03,
Sri Lanka.
T.P: 565265 - 79 (15 Lines) Fax: 94-1-565299.

**DEALER / BRANCH :**

## AKKAS MULTI SHOP

*Trusted & Truthful*

**Main Street, Akkaraipattu.**
**T.P: 067 - 77499**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு மன்னர் மனம் கொண்ட அரசியல் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப்

**16.09.2000 அன்று.................**

**- அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. சத்தார். (ஜே.பி)**

இலங்கை வாழ் முஸ்லிம்களை பேரதிர்ச்சியடையச் செய்த நாள்!
தேர்தல் கடமைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த எம்மை எல்லாம் சித்தப் பிரமை கொள்ளச் செய்த நாள்!

''யா அல்லாஹ்! இச்செய்தி பொய்யாக இருக்கக் கூடாதா'' என்று ஒவ்வொரு இதயமும் ஏங்கிய நாள். வெளிநாட்டில் வாழ்கின்ற எமது சகோதரர்களின் தொலைபேசிகள் எம்மை எல்லாம் குடைந்தெடுத்த அந்த நாள்!

இன்றோடு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்கிறதென்பதை நம்பமுடியாமல் இருக்கிறது.
ஆயினும், நெஞ்சை விட்டு மாறாத நினைவுகளை தடம்பதித்த சக்தியை, மாமனிதரை எண்ணிப்பார்க்கிறேன்.

''பொத்துவில் தீர்மானம்'' இது எம்மிருவருக்குமே புரியும் பரிபாசை. அதன் மூலம் அந்த மாமனிதனின் மானிட நேயத்தையும் சமூகம் பற்றிய எதிர்காலத் திட்டங்களையும் என்னால் அறிய முடிந்தது. அதுவே அவர்மீது அதிக ஈடுபாடு காட்டவும் வைத்தது.

- ஒவ்வொரு இளைஞனுக்கும் வேலை.
- வேலைவாய்ப்புப் பெற்றவனை ஏழைக் குமர்களுக்கு மணமுடித்து வைத்தல்.
- அக்கரைப்பற்று முதல் பொத்துவில் வரை உள்ள வெற்றுக் காணிகளில் அவர்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல்.

பொத்துவிலிலிருந்து பயணித்த போது அவர் என்னிடம் கூறிய இந்தத் திட்டம் கிழக்கு இஸ்லாமிய இளைஞர்களின் மொத்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகவே எனக்குப்பட்டது.

இது மட்டும் நிறைவேறி விட்டால்................

14.09.2000 அன்று இரவு 12 மணியளவில் தொலைபேசியில் என்னோடு பேசும் போது ''பொத்துவில் தீர்மானம்'' நிறைவேறாமலே போய்விடுமோ என்று அங்கலாய்த்ததன் அர்த்தம் இரண்டு நாட்களின் பின்புதான் என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஒரு முறை இஸ்லாத்தில் கருத்தடை கூடுமா, கூடாதா என்ற வாதம் எம்மிடையே வந்தது. அதற்கு கூடும் என்று அவர் முன்வைத்த கருத்துக்கள் மார்க்கத்தில் அன்னாருக்கிருந்த ஆழமான அறிவையும் பற்றையும் எடுத்துக்காட்டியது.

இரண்டாவது தலைமைத்துவ விடயத்தில் நான் பலமுறை அவருடன் விவாதித்திருக்கிறேன். சம பலமுடைய இருவர் இருப்பின் கட்சியுடைந்து விடும் என்றதோடு அதற்கு ஆதாரமாக கட்சியின் இரண்டாம், மூன்றாம் தலைமைத்துவத் தரத்திற்கு கணிக்கப்பட்டு 'பைஅத்' செய்தவர்களின் கழுத்தறுப்புக்களையும் துரோகங்களையும் எடுத்துக் கூறி எம்மை ஆசுவாசப்படுத்தினார். இருப்பினும் தற்போதைய தலைவரை அவர் இனங்காட்டவும் தவறவில்லை.

1986ல் காத்தான்குடியில் ஒன்றுகூடல் ஒன்று இரவு 12 மணியைத் தாண்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைக் கலைப்பதற்காக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அன்றுதான் எம் தலைவரின் மன உறுதியை எம்மால் காண முடிந்தது. இதற்கு காரணமாகவிருந்தவர் இன்று எமது கட்சியின் தீவிரப் போராளிமட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினரும் கூட. ஆனால், அந்த ஒன்று கூடலை ஏற்பாடு செய்தவர் எம்மைவிட்டும் வெளியே நிற்கிறார். இதுதான் இறைவனின் ஏற்பாடுபோலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளையில் முஸ்லிம் காங்கிரஸ் என்றால் அம்மக்களுக்கு எதுவுமே விளங்காத நிலையில் சகோதரர் நிஜாமுத்தீனையும் என்னையும் தலைவர் மாத்தளைக்குச் செல்லுமாறு பணிக்கிறார்கள் நாங்கள் அங்கு சென்று தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். JVP, SLFP, UNP என்ற மும்முனை அச்சுறுத்தலுக்கு மத்தியில் தலைவரின் திட்டமிடலும் வழிகாட்டலும் சகோதரர் அத்ஹம் அவர்கள் மாகாணசபைக்கு தெரிவாக வழிவகுத்தது. இது அவருடைய அரசியல் வழிகாட்டலுக்கு கிடைத்த வெற்றியாகும்.

எமது பிரதேசத்தில் தமிழ் இளைஞர்கள் மட்டுமல்ல எமது இளைஞர்களும் ஆயுதக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்ட வேளை ஆயுதக் குழுக்களின் செல்வாக்கு இளைஞர்கள் மத்தியில் மேலோங்கி வந்த காலம் எமது இளைஞர்களைப் பிழையான வழியில் செல்லாமல், நெறிப்படுத்தி அவர்களை அரசியல் மயப்படுத்த வேண்டிய பணியே எனது முதற்பணி என்று அவர் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும் இளைஞர்கள் பால் அவருக்கிருந்த பற்றுதலை வெளிக்காட்டி நிற்கின்றன. இன்னும் எவ்வளவோ!

புலவர்கள் என்றும் கவிஞர்கள் என்றும் நாயகம் என்றும் தன்னைத்தானே பெயர் சூட்டிக் கொள்ளும் இக்காலத்தில், மிகவும் புலமைவாய்ந்த பண்பட்ட ஒரு கவிஞர் திலகமாய் திகழ்ந்த அந்த மாமனிதனின் இழப்பு இன்னும் மிக நீண்ட காலத்திற்கு ஈடுசெய்ய முடியாததோர் இழப்பாகும்.

இன்றைய அரசியல் நிலவரம் இவருடைய வெற்றிடத்தை துல்லியமாக காட்டுகிறது.

ஒரு மன்னர் மனம் கொண்ட அரசியல் தலைவனாக
தலைசிறந்த மார்க்க அறிஞனாக
பார்போற்றும் புலவனாக
மனிதமுள்ள மானிடனாக

மொத்தத்தில் ஒரு ஆளுமை உள்ள அரசனாக எம்மிடையே உலா வந்த அந்தப் பேரொளி எம்மை விட்டு மறைந்து ஒரு வருடமாகி விட்டது என்பதை ஏற்க மனம் மறுக்கின்றது.

ஆனாலும் ஒரு நெருடல்

*நீங்கள் ஏற்று வந்த இலட்சியப்பாதையில்*
*தடையாக இன்று இருப்பது உங்கள் விலா எலும்பு என்பதுதான் வேதனை.*

பரவாயில்லை, உங்கள் வழி வந்து உங்கள் பொறுப்பையெல்லாம் தான் சுமந்து சமூகத்தின் விடியலுக்காய் தளபதியின் இளவலை நாங்கள் ஏற்று போராட புறப்பட்டு விட்டோம். உங்கள் ஆசிர்வாதம் எம்மை வழிநடாத்தும் என்ற நம்பிக்கையில்.

இந்த சமூகத்தை நீங்கள் நடுத்தெருவில் விட்டுவிடவில்லை. தகுதியான தலைமை ஒன்றை விட்டுத்தான் சென்றிருக்கிறீர்கள். அதற்காக என்றென்றும் இச்சமூகம் உங்களுக்கு கடமைப்பட்டுள்ளது.

யா அல்லாஹ்! மறைந்த எம்தலைவர் சமூகத்துக்கு செய்தவைகளை 'சதகத்துல் ஜாரியா'வாக ஏற்று அங்கீகரிப்பாயாக! அவருடைய ''கப்ரை'' ஒளிமயமானதாக ஆக்குவாயாக! அவருக்கு ''ஜென்னத்துல் பிர்தௌஸை'' வழங்குவாயாக! என்றும் அவரை சுவனத்தில் வாழச் செய்வாயாக!

முன்னேறும் பாதையிலே
முள்ளை வைத்தாலும்
தடை அகற்றி வழிநடாத்து
தலை மகனே.
இது உங்கள் மொழி
தொடர்வோம் அவ்வழி
இன்ஷா அல்லாஹ்!

**அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ சத்தார். (ஜே.பி)**
**அமைப்பாளர் (SLMC)**
**மருதமுனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் சமூகத்திற்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷமாக திகழ்ந்தார் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்கள்

- Z.A.H. றஹ்மான் JP -

இலங்கையின் அரசியல் வானில் சிறகடித்துப் பறந்த பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் எம்மை விட்டு பிரிந்து விட்டார் என்ற துக்ககரமான செய்தியைக் கூட கடந்த ஒரு வருட காலமாக என்னால் நம்பமுடியாமலிருந்தது. என்னால் மட்டுமல்ல முஸ்லிம் சமுதாயத்தின் மனோ நிலையும் அதுவாகத்தான் இருக்கும்.

தலைவரை அரசியல் ரீதியில் கடுமையாக விமர்சனம் செய்த மாற்றுக்கட்சி அரசியல் வாதிகளும், வேற்று இன அரசியல்வாதிகளும் அவரது திறமையை, ஆற்றலை ஒரு போதும் இலேசாகக் கருதியதில்லை.

இவ்வாறான ஒரு தலைவர் முஸ்லிம் சமுதாயத்துக்குக் கிடைத்தது நாம் செய்த பெரும் பாக்கியமாகும்.

நாதியற்றிருந்த முஸ்லிம் சமூகம் அரசியல் உரிமைகளை சலுகைகளாக அன்றி உரிமைகளாகப் பெற்ற வரலாறு ஸ்ரீ.ல.மு.காங்கிரஸுடனும் தலைவர் அஷ்ர.்.புடனும் ஆரம்பமாகியது எனலாம்.

இன்று எமது நாடு மிக இக்கட்டான சூழ் நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இரத்த ஆற்றின் பெருக்கெடுப்பும் அதில் மூழ்கி அழியும் மனித உயிர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலை எதிர்காலத்தில் தொடராமலிருக்க நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

**Z.A.H. றஹ்மான் JP**
**முகாமைத்துவப் பணிப்பாளர்,**
**கிளியர் செகுருட்டி சேவிஸ் பிறைவேட் லிமிட்டட்**
**மெயின் வீதி, மருதமுனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAJEEDIYA'S

உங்களுக்குத் தேவையான...
திருமண பட்டுச்சேலைகள்,
பாம்பே சல்வார் சூட்
சேர்ட், டீசேர்ட், சாரம்
லாஷாசோலி,
பிளவுஸ் துணிகள்



அனைத்து ரக ஆடைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

## மஜீதியாஸ்

(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)

11A, பிரதான வீதி,
சாய்ந்தமருது
தொ.இல: 067-29425
பெக்ஸ் இல: 067-22133


# THAMEEM
JEWELLERS



Importers of Sports Trophies & Awards Dealers in Sports Cups, Shields, Badges, Plastic & Paper Gem Stone Packets Gem Display Boxes & Jewellery Tools

**No: 150, Second Gross Street,**
**Colombo - 11, Sri Lanka.**
**Tel: 421537**

# MICRO ELECTRONICS
IMPORTERS IN ELECTRONIC SPARE PARTS



NO. 56, FIRST CROSS STREET,
COLOMBO -11.
TELPHONE: 433549,
TELE FAX: 334443

*With Best Compliments From:*

Sainthamaruthu


# Najath Glass Centre

அலுமினியம், கண்ணாடி, ஹார்ட்போட், பிளைவூட், சீட், பிளாஸ்டிக் கண்ணாடி, M. D. F. வேண்ட், கேட்டன் வகைகள், ஹாட்வெயார் வகைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள அனைவரதும் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

## நஜாத் கிளாஸ் சென்றர்

Main Street, Sainthamaruthu.
T.P: 067-29339


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மர்ஹூம் அஸ்ரஃபின் மறைவு முஸ்லிம் சமுதாயத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

- எம். இஸ்மாயில் ஆதம்
சட்டத்தரணி

எனக்கும் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களுக்குமிருந்த தொடர்புகளை இம்மலரில் எடுத்து விபரிப்பது என்னால் இயலாத காரியமாக இருக்கின்றது.

இலக்கியம், அரசியல் துறைகளில் இருவரும் ஒருமித்த நோக்கும், போக்குமுடையவராயிருந்த போதிலும் துரதிஷ்ட வசமாக ஒன்றுபட்டு இயங்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். எனினும் பரஸ்பரம், மதிப்பும், மரியாதையும், அன்பும், பாசமும் கொண்டிருந்தோம் என்பதை ஒரு சிலர் அறிவர். என்னை மாற்றுக்கட்சிக்காரனாக எனது நண்பர் ஒரு போதும் கணித்ததில்லை.

அஷ்ரஃப் அவர்கள் முன்வைத்த முஸ்லிம் அரசியற் கருத்தேற்புகளையும் ஆரம்ப சிந்தனைகளையும், வாதப்பிரதிவாதங்களுடன் பகிர்ந்து கொண்டவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். என்பதையும் , அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாத மு.கா. வின் செயற் குழுவில் நானும் ஒருவனாகப் பங்கேற்றுள்ளேன் என்பதையும் அக்கட்சியின் ஆரம்பகாலப் பதிவேடுகள் கூறும். எனது அப்போதைய பங்களிப்புக்குக் காரணம் நண்பர் அஷ்ரஃபின் தனிப்பட்ட கோரிக்கைகள்தான்.

மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் எனது நண்பராக மட்டுமன்றி, எனது உண்மைக்குண்மையான ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்துள்ளார் என்ற உண்மையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். அரசியலை ஒரு பக்கம் வைத்துவிட்டு சட்டப் படிப்பை மேற்கொள்ளுமாறு கண்டிப்பும் அன்பும் கலந்து அவர் வழங்கிய உத்தரவை நன்றியுடன் இன்றும் நான் நினைவு கூருகின்றேன். அப்போது அவர் கொழும்பில் அகதியாக இருந்தார். நான் அரசியலால் ஆசிரியத் தொழிலை இழந்திருந்தேன். ஆனால் நான் அனாதரவாக நிற்க வேண்டும் என்று அவர் எதிர் பார்க்கவில்லை. நான் வாழ்க்கையில் உயர்வடைய வேண்டும் என்று அவர் மனதார விரும்பினார்.

அவர் மரணித்தபோது அதை நான் என்னுடைய ஒரு தனிப்பட்ட இழப்பாகக் கருதினேன். ஆனால் இந்த ஒருவருடகால அரசியல் நிகழ்வுகளை அவதானிக்கும்போது அவர்தம் மறைவு முஸ்லிம் சமுகத்தின் பேரிழப்பு, பெருஞ்சோதனை என்பதை உணர்கிறேன், அல்லாஹ் அஷ்ரஃப் அவர்களுக்குச் சுவனபதியைத் தந்தருள்வானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்.

**எம். இஸ்மாயில் ஆதம்,**
**சட்டத்தரணி,**
**பொத்துவில் தொகுதி ஸ்ரீ.ல.சு.க. அமைப்பாளர்,**
**பொத்துவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை...!



மாசற்ற மனிதனாய், வீரத் தலைவனாய்
மனித மனங்களில் மங்காத மாணிக்கமாய்
உத்தம புருசராய், தூற்றுவோர்க்கும் ஈர்ந்தருளும்
சத்திய தலை மகனாய்
விரைவாக பதவி கொண்டு
அவசரமாய் மறைந்து விட்ட
அன்பான தலைவருக்கு
"அஸ்ஸலாமு அலைக்கும்"

உங்கள் மறைவுச் செய்தியதை ஏற்காத மனங்கள்
உங்கள் சத்தியத்தின் சிம்மாசனம்
உருவான கதையதனை மீட்டிக் கொண்டிருந்தன.

உண்மை என்று சொன்னதுமே
ஒரு கணம் நின்று விட்டது
உடல் உறுப்புக்களின் இயக்கம்
அதைப் பார்க்க நீங்கள் வரவில்லை, வந்திருந்தால்
தெரிந்திருக்கும் உங்கள் கண்களிலும் கண்ணீர்
பரிதவித்த நாங்கள் எல்லாம்
தத்தமது பிரிவுகளில் நின்று கொண்டோம்
அழுதழுது மற்றவர்க்கும்
ஆறுதலும் சொல்லிக் கொண்டோம்!

உங்களுக்காய் சுடப்பட்ட "ஆவத்து றொட்டி"
களின் துண்டுகளும் சாப்பிட்டோம்.

ஆவலோடு எதிர்பார்த்த - தனது
மூத்த மகனின் திருமணத்தில்
அழுது வடித்த தாயையும்
உண்மையாக நாங்கள் கண்டோம்.

இன்னுமொரு மானிடரால் நிரப்ப முடியாத
இடத்தை நீங்கள் வகித்ததாக
விசிம்பலுக்கு மத்தியிலும் முணுமுணுப்போடு
ஒரு வீட்டின் தலைவர் கதிரையிலே சாய்கின்றார்.

1948 இல் நீங்கள் பிறந்ததும் சுதந்திரமாம்
அதுவும் ஒரு சரித்திரம்தான்
வாழ்ந்ததும் ஒரு குறிக்கோளாய்
அதுவும் ஒரு சரித்திரம்தான்
(மனித மனங்களில்) வாழ்ந்து கொண்டு
மறைந்து விட்டார்
அதுவுமொரு சரித்திரம்தான் - என்ற
பாடசாலை மாணவனின்
பக்தியான உணர்வைக் கண்டோம்.

பெறுமதி வாய்ந்த பொருட்கள் பல உடைந்ததுமே
தலைவரே மறைந்து விட்டார்
"தூத்துத்தள்ளு" என்று சொன்ன
இளவயது பெண்ணவளில்
இறப்பின் பெறுமதியைக் கண்டோம்.

தலைவர் மறைந்து விட்டார் - ஆனால்
தூங்கி அவர் மறைய வில்லை
ஒவ்வொரு முஸ்லிமையும் தலைவராக ஆக்கி வைத்து
ஆற்றி நின்ற பணிதனை
தாங்க நிற்க நாங்கள் உள்ளோம்
இவ்வாறு உறுதி சொன்ன
இளைஞனையும் நாங்கள் கண்டோம்

"எனது சமுதாயத்தவர்களில் ஒரு கூட்டத்தினர்
அவர்களை எதிர்ப்பவர்கள் மீது
வெற்றியை நிலைநாட்டும் வரை
சத்தியத்துக்காக போராடுவதை
நிறுத்திக் கொள்ள மாட்டார்கள்
அவர்களுள் இறுதியானவர்கள்
தஜ்ஜாலை எதிர்த்து போராடுவார்கள்" - என்ற
நபியின் பொன்மொழியை நினைவு கூறி
உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் சொன்ன
மார்க்க அறிஞரையும் நாங்கள் கண்டோம்.

எம்மை தூசித்து விமர்சித்த பலரின்
உரோமங்கள் சிலிர்த்ததனை
கண்கூடாய் நாங்கள் கண்டோம்.

தலைமைத்துவ பண்புகளை
தன்னகத்தே தாங்கி நின்ற
சாதுரிய தலைமகனின் பாதைகளை பின்பற்ற
சிறுபான்மை தலைவர்கட்கு
வற்புறுத்தி சொல்ல வேண்டும்
என்ற ஹிந்து மத இளைஞனின்
நன்நோக்கு எதிர்பார்ப்பை
வெளிப்பாடாய் நாங்கள் கண்டோம்.

தங்க மகனின் மறைவதற்கு - யாரும்
காரணமாய் அமைந்திருந்தால்
இறைவா! அவர்களை நீ அழித்துவிடு - என்று
கண்ணீரோடு "துஆ" கேட்ட
வயோதிப மாதுகளை நாங்கள் கண்டோம்.

உங்கள் ஜனாஸா தொழுகையிலே
இறைவா!
"எங்களையும் எடுத்துவிடு
இனி எதற்கு வாழ்க்கை" என்று
இரந்து கேட்டு நின்ற
மக்கள் வெள்ளத்தையும் நாங்கள் கண்டோம்.

உங்கள் ஜனாஸா கிரிகையிலே
கலந்து கொள்ள கிடைக்கவில்லை
வருத்தம் இருந்த போதும்
இரந்து "துஆ" கேட்டுள்ளோம்.

ஆக்கம்:- பி. எம். அனஸ்தீன்
அம்பாரை மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் சமூகத்திற்கு முகவரி தேடிக்கொடுத்த வீரத் தளபதி

- சட்டத்தரணி யூ.எம். நிஸார் -

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், சட்ட முதுமானி பட்டம் பெற்றவருமான மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் முதலாவது ஞாபகார்த்த தினத்தையொட்டி, அகில இலங்கை எம்.எச்.எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றத்தினால் வெளியிடப்படும் நினைவு மலருக்கு நினைவுச் செய்தி வழங்குவதில் ஒரு புறம் பெருமையடையும் அதேவேளையில் மறுபுறம் சொல்லொன்னாத் துயரும் ஆழ்ந்த கவலையுமடைகிறேன்.

தலைவர்கள் பிறப்பதில்லை; உருவாக்கப்படுகிறார்கள் என்ற கருத்துடன் முழுமையாக உடன்பாடு உடையவர் என்ற அடிப்படையில் அகால மரணமடைந்த தலைவர் அஷ்ரஃப்; அவர்களின் பாடசாலை வாழ்க்கையிலிருந்து ஒரு சக்தி வாய்ந்த அமைச்சராக பரிணமித்த அவருடைய வாழ்க்கைப் படித்தரங்களில் ஒரு துடிப்புற்ற மாணவனாக சமூக சேவையில் ஒரு நாட்டமுள்ள ஒரு சட்டத்தரணியாக, முஸ்லிம் சமுகத்திற்கு முகவரி தேடிக் கொடுக்கும் ஒரு பெருங் கைங்கரியத்தில் ஒரு கட்சியை ஸ்தாபித்து அதனை வழி நடாத்திச் செல்லும் தளபதியாக, கட்சிப் பழுவுக்கு மத்தியிலும் சட்டத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற ஒரு புத்தி ஜீவியாக, அங்குமிங்குமாகக் கிடந்த முஸ்லிம் வாக்குகளை ஒன்று திரட்டி ஓர் அரசாங்கத்தை முஸ்லிம்களால் ஆக்கவும் முடியும், புரட்டவும் முடியுமென்று உலகுக்கு எடுத்துக் காட்டிய ஒரு உத்தமராக, சாதி, மத வேறுபாடுகளுக்கப்பால் நின்று மானுடத்தை சேமிக்கும் ஒரு கவிஞராக, எதிர்கட்சி அரசியல் வாதிகளுடன் மிக மரியாதையுடனும் அன்புடனும் பழகக் கூடிய ஒரு பண்பட்ட அரசியல் வாதியாக, இன்று பெற்றுள்ள படித்தரங்களில் தம்மால் முத்திரை பதித்துச் சென்ற ஒரு அபூர்வ மனிதராக மர்ஹூம் அஸ்ரஃப் அவர்களைத் தரிசிக்க நேர்ந்தது நாம் செய்த பாக்கியமே.

''ஒரு சமூகம் தன்னைத் தானே திருத்திக் கொள்ளாதவரை அல்லாஹ் கூட அதனைத் திருத்தமாட்டான்" என்பது அல் ஹதீஸ் ஆகும். பாடுபட்டு உதிரத்தை சீராக்கி, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, உணர்வுகளை முஸ்லிம்களுக்கு ஊட்டி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் ஒரு மாபெரும் அரசியல் விருட்சத்தை இலங்கை முஸ்லிம்களுக்கு அரசியல் அடைக்கலமளிக்கும் ஓர் உள்ளத்தை, வீட்டை கட்டியெழுப்பி விட்டுச் சென்றுள்ளார்கள்.

அவ்வீட்டை, கரையில் கட்டப்பட்ட ஒரு மணல்வீடாக அல்லது கருங்கல்லால் கட்டப்பட்ட ஒரு கல்வீடாக ஆக்குவது எமது செயல்களைப் பொறுத்த விடயமாக இருப்பதோடு, எமது தற்போதைய தலைவர் ஜனாப் றவூப் ஹக்கீமின் கரங்களைப் பலப்படுத்த முன்னின்று உழைப்போமாக !

வஸ்ஸலாம்

**U.M. நிஸார், M.A. JPUM,**
Attorney at Law & Notary Public.
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
அரசியல் அதி உயர்பீட உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COLOMBO DRAPERY STORES

## கொழும்பு றேபரி ஸ்டோர்ஸ்

## කොළඹ ඩ්‍රේපරි ස්ටෝර්ස්

Dealers in : Building Meterials, Machinery, Makita Power Tools
Agri Cultural Implements, Baby Care Needs & Suits, Diesal Engin
Generator, Water Pumps, Rice Huller, Griding Hullor
(Distributors for Bairaha Farms Products)

**கட்டிட, இயந்திர, கைத்தொழிலுக்கான ஆயுதப் பொருட்களுக்கு**

**கொழும்பு றேபரி ஸ்டோர்ஸ்**

**குழந்தைகளுக்கான பராமரிப்புப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்கும்**

**"C.D.S. BABY CARE"**


*for all your baby needs*



24, Main Street,
Kalmunai.
Tel : 067 - 29154, Fax : 067 - 21426

# I. ABDUL RAHEEM & BROS

*Fancy Goods, Gift Items, Stationaries, Foodware & school Books Etc.*




ஆறிலிருந்து அறுபது வரை
உங்கள் இல்லங்களின்
நிறைவரங்கம்

CENTRAL ROAD,
SAMMANTHURAI
TEL : 067 - 60020

**அப்துல் றஹீம் & பிரதர்ஸ்**
மத்திய வீதி,
சம்மாந்துறை
தொலைபேசி ~ 067~60020


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும்பான்மை அரசியல் வாதிகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னால் மண்டியிட வைத்தவர்

- அல்-ஹாஜ் ஏ. நெய்னா முஹம்மத்

உலகில் ஒவ்வொரு காலகட்டங்களிலும் வர்க்க, சமுகப் புரட்சிகள் நடைபெற்று ஒவ்வொரு புதிய தலைவர்கள் மனித சமுதாயத்தின் முன் அடையாளப்படுத்தப்பட்டனர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம்சமுகத்தை ஒரே இலட்சிப்பாதையில் அரசியல் ரீதியாக ஒரே குடையின் கீழ் ஒற்றுமைப்படுத்திய வரலாறும் எம்மைப் பொறுத்தவரை ஒரு சமுகத்தின் சுதந்திர சிந்தனைக்காணதும், அரசியல் மீட்சி உரிமைக்கானதுமான புரட்சியாகக் கொள்ளமுடியும்.

எந்தவொரு ஆயுதமுமின்றியும் இரத்தம் சிந்தாமலும் இவ்வாறனா ஒரு புரட்சியை மனிதநேயம் கொண்ட நல்லிதயம் படைத்த போரளிகளினுடன் தலைவர் மர்ஹூம் அஷ்ர.்.ப் மேற்கொண்டமை இலங்கைமுஸ்லிம்களின் அரசியல் வராற்றில் என்றென்றும் நினைவு கூறப்படும் ஓர் அம்சமாகத்திகழும் என்பதில் ஐயமில்லை.

முஸ்லிம் சமுகத்தின் விடியலுக்காய் மறைந்த தலைவர் அஷ்ர.்.ப் ஆற்றிய பங்களிப்புக்குக் கிடைத்த பரிசுதான் இன்று அவர் மறைந்த பின்னும் மக்கள் அவர் நாமத்துக்கு பின்னால் அணிதிரண்டு நிற்பது

காலத்துக்குக் காலம் நடைபெறும் தேர்தல்களின் மூலம் பேரினவாதிகளின் கூஜாக்களாக செயற்பட்ட முஸ்லிம் சமூகம் சில சமயங்களில் எச்சில் சலுகைகளுக்காக வாயுறும் சமூகமாகவும் மண்டியிட்டு கிடந்தது.

இந்த துர்ப்பாக்கிய நிலமை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்தோடு மறையத்தொடங்கி நமது தலைவர் மறையும் தறுவாயில் மிகவும் உச்சநிலை அடைந்திருந்தது என்பதை இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களும் நன்கறிவர்.

பேரினவாத சக்திகளின் முன்னால் மண்டியிட்ட சமூகம் தலைவரின் மறைவுக்கு முன்னர் மறுதலையாக அவரிடம் மண்டியிட்டது என்பதை யாரும் மறக்க முடியாது. இலங்கையின் அரசியலையும் ஆட்சியாளர்களையும் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று தடவைகள் தீர்மானித்த பெருமை தலைவரையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையுமே சேரும்.

எதிர்காலத்திலும் நமது சமூகம் ஒற்றுமையுடனும், ஒரே கருத்துடனும் செயற்பட நாம் அனைவரும் திடசங்கற்பம் பூண வேண்டும் என்று தலைவரின் முதலாம் வருட நினைவு தினத்தில் உங்கள் எல்லோரையும் தோழமையுடன் வேண்டி நிற்கின்றேன்.

வஸ்ஸலாம்.

நன்றி.

அல்-ஹாஜ் ஏ. நெய்னா முஹம்மத், JP.
பொருளாளர்,
மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாயல்,
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DRM

# Deen Rice Mill

தலைவா! நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் உள்ளங்களை ஆட்சி புரியும்.

- உரிமையாளர்: M. B. ஜுனைதீன்

கல், மண் அற்ற சிவப்பு,
வெள்ளை, சம்பா போன்ற
அனைத்து ரக சுத்தமான
அரிசி வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்

**டீன் ரைஸ் மில்**

பிரதான வீதி,
அட்டாளைச்சேனை - 01.
☎: 067 - 77418

---

HATTON NATIONAL BANK
*Your Partner in Progress*

HATTON NATIONAL BANK
HNB
LIMITED

**HATTON NATIONAL BANK LTD.**
Akkaraipattu Branch
Main Street,
Akkaraipattu.
T.P: 77500

---

மெருகூட்டப்பட்ட புதிய அறைகளில்
நிம்மதியாகத் தூங்க இன்றே நாடுங்கள்

## பர்ஸானா லொட்ஜ்
## FARSHANA LODGE

தூர இடங்களுக்குச் செல்வதற்கான
வாகன வசதிகள் செய்து
தரப்படுவதுடன்
அக்கரைப்பற்று - கொழும்பு
கொழும்பு - அக்கரைப்பற்று
பஸ் சேவைக்கான ஆசனப் பதிவுகளும்
செய்து தரப்படும்

முகாமையாளர்:
பி. டீ. செய்னுல் ஆப்தீன் ஜே.பி

**FARSHANA LODGE பர்ஸானா லொட்ஜ்**

94, Temple Road,
Maradana,
Colombo - 10.
T.P: 01-694657

94, டெம்பிள் ரோட்,
மருதானை,
கொழும்பு - 10.
தொ.இல: 01-694657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏழையின் இன்னலைத் தீர்க்க நள்ளிரவில் சகாத் வசூலித்து வழங்கிய வள்ளல்

**- அல்-ஹாஜ் ஏ.எம்.எம். ஜமால்தீன், அதிபர்**

நம் அனைத்து முஸ்லிம்களினதும் தனிப் பெருந் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரஃப் அவர்கள் எம்மையெல்லாம் விட்டு மறைந்த ஒருவருட நினைவு தினத்தில் அன்னாரை நினைவு கூர்வதில் ஆர்வமுடையவனாக இருக்கின்றேன்.

பேரினவாதிகளால் அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதைப் பொறுக்கமாட்டாத என்போன்றோர்கள் முஸ்லிம் காங்கிரஸின் மேம்பாட்டுக்காகத் தீவிர ஈடுபாடு கொள்ளும் நோக்கில் 1998ம் வருடம் செப்டம்பர் 18ம் திகதி சாரி, சாரியாக அன்னாரின் இதயத்தினுள் புகுந்து சங்கமானவர்களில் நானும் ஒருவன்.

எமது பிரவேசத்தை முஸ்லிம் காங்கிரஸ் அடிமட்ட சுய நலவாதிகள் சிலர் எதிர்த்த போதும் எம்மை முஸ்லிம் காங்கிரஸில் இணைக்கும் தீர்மானத்தில் அவர் உறுதியாகவே இருந்தார்கள்.

அன்று முதல் அன்னார் காலமாகும் நாள் வரை மிக நெருக்கமான தொடர்பையே வைத்திருந்தோம் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபாடும் ஒரு அதிபர் என்ற வகையிலும், கிராமத்தில் சமூக சேவைகளில் நீண்ட கால அனுபவமுடையவன் என்கின்ற முறையிலும், நாம் சந்திக்கும் போதெல்லாம் மிக உயர்ந்த நிலையில் விழிப்பதையும், நிற்பதையும் கௌரவிப்பதையும் நினைக்கும் போதெல்லாம் என் உள்ளம் இரத்தக் கண்ணீர் வடிப்பதை உணர்கிறேன்.

2000.09.16ம் திகதி அன்னார் காலமாவதற்கு முதல் நாள் (வெள்ளிக்கிழமை இரவு) நடை பெற்றவற்றை நினைத்துப் பார்க்கிறேன். நூற்றுக்கணக்கானோர் தலைவர் அவர்களின் இல்லத்தில் பொதுத்தேர்தல் விடயமாக ஆலோசனை நடத்தவென கூடியிருந்த நேரமது.

இரவு 2.30 மணியளவில் மாடிக்கு அழைக்கப்பட்டேன் அங்கு சுமார் 25 பேர் குழுமியிருந்தனர். என்னைக்கண்டதும் தலைவர் அவர்கள் நான் ஒரு ஏழையின் துயர் துடைக்க ஸகாத் அறவிடுகிறேன். ''ஜமால்தீன் மாஸ்டர் நீங்கள் எவ்வளவு தருகிறீர்கள் எனக்கேட்டார்கள். நான் ஒரு தொகையைக் கையளித்தேன் மற்றவர்களிடம் அறவிட்ட தொகையுடன் தானும் ஒரு பெரும் தொகையைச் சேர்த்து, அந்த ஏழை வாழ்ந்த வீட்டை வங்கியிலிருந்து மீட்க ரூ. 275000/- வழங்கினார். இது ஏழைகளின்பால் பிறர்துயர் துடைக்க அன்னார் எப்போதும் தயாராயுள்ள தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை ஹெலிகொப்டரில் அம்பாரை செல்வோம் வாருங்கள் என அழைத்தார். 16ம் திகதி சனிக்கிழமை எமது பாடசாலையிலும் தங்களை வரவேற்கும் வைபவம் உள்ளதால் நான் வெள்ளிக்கிழமையே செல்கின்றேன் எனக் கூறி வந்துவிட்டேன்.

சனிக்கிழமை காலை அன்னாரை வரவேற்கும் வேலைகளில் ஈடுபட்ட போதுதான், அந்தத்துயரச் செய்தி கேள்விப்பட்டு ஆறாத்துயர் கொண்டேன். இன்று ஒரு வருடமாகியும் இத்துயர் நீங்கவே இல்லை.

கூட்டு மொத்தத்தில் எம் தானைத்தளபதி ''அஷ்ரஃப்'' அவர்கள் சமூகத்துக்காகவும் தனிப்பட்டோர்களுக்காகவும் செய்துள்ள சேவைகளை உண்மை முஸ்லிம் ஒரு போதுமே மறக்கமாட்டான்.

இறைவா! அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்துக்கு அருள்புரிவாயாக. ஆமீன்
வஸ்ஸலாம்.

**அல்-ஹாஜ் AMM ஜமால்தீன் (அதிபர்)**
அறபா வித்தியாலயம்,
அட்டாளைச்சேனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHARP

GUARANTEED
by
sharp Corporation
Japan








Colour TV's
Video Cassette Recorders
CD Cassette Recorders
Radio Cassette Recorders
Video Projectors
Washing Machines
Refrigerators
Vacuum Cleaners
Micro Wave Ovens

## SHARP

We're Changing The World

The name that is at the cutting edge with Japanese technology is now readily available through dealers islandwide and backed by the superior Browns after sales service.




SHARP

# Brown & Company Limited

SOLE AGENT FOR SHARP CORPORATION JAPAN
Show Room : 481, T.B. Jayah Mawatha Colombo - 10.
Phone : 697111,698411, Facsimil : E 698489


DEALER / BRANCH :

# AKKAS MULTI SHOP

*Trusted & Truthful*

Main Street, Akkaraipattu.
T.P: 067 - 77499

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மர்ஹூ ம் அஷ்ரஃப் மறைந்தாலும் அவரது சேவைகள் காலத்தால் அழியாதவை

**அல்-ஹாஜ் எம்.ஐ.எம். யூசுப்**

இலங்கையில் முஸ்லிம்கள் என்றொரு இனம் இருப்பதை உலகிற்கு எடுத்துக் காட்டிய பெருமை மறைந்த மாமனிதர் மர்ஹூம் M.H.M அஷ்ரஃப் அவர்களையே சாரும்.

இப்படிப்பட்ட ஒருவரை கல்முனை மாதா ஈன்றெடுத்தது கல்முனை மண்ணுக்கு பெருமையாக உள்ளது.
இவர் ஒரு சிறந்த அரசியல் வாதியும், ஜனாதிபதி சட்டத்தரணியும், கவிஞரும் சதாவும் முஸ்லிம் சமூகத்தை மட்டுமன்றி அனைத்து சமூக ங்களையும் பற்றிச் சிந்தித்த மாமனிதருமாவார்.

இவர் இளமை முதல் இறுதிவரை மார்க்க விடயங்களில் அதீத ஈடுபாடும் அயாராத முயற்சியும் கொண்டு உழைத்ததுடன் பள்ளி வாசல்களுக்குத் தன்னால் இயலுமான பல்வேறு உதவிகளையும் செய்தார். குறிப்பாக கல்முனைக்குடி கடற்கரைப்பள்ளி வாயலுக்கு ''சென்சோடியம்'' கொண்ட உயர் மின் அழுத்த மின் குமிழ்களை பல இலட்சம் ரூபா செலவில் பொருத்தித் தந்துள்ளார். நாகூர் ஆண்டகை தர்ஹாவின் கட்டிட நிதிக்கு பண நன்கொடைகளையும் வழங்கியுள்ளார்.

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்மை விட்டு மறைந்திருந்தாலும்கூட இவரது சேவைகள் காலத்தால் அழியாதது, அழிக்கப்படவும் முடியாதது. முஸ்லிம்களின் பொருளாதார அபிவிருத்திக்கு ஈடு இணையற்ற சேவையாற்றிய பெருமையும் உரிமையையும் குறிப்பாக இவரையே சாரும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற அயராது துஆ செய்து அவுலியாக்கள், அன்பியாக்களின் துஆ பறக்கத்தினால் நல்ல சுகம் கிடைக்க வேண்டும் என இறைவனிடம் இரு கரம் ஏந்தி ''ஜன்னத்துல் பிர்தௌஸ்'' என்னும் சுவர்க்கம் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

**அல்-ஹாஜ் எம்.ஐ.எம். யூசுப்**
கல்முனைக்குடி கடற்கரைப்
பள்ளிவாயல்,
நம்பிக்கையாளர் சபை சார்பாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALLI SPECIAL PAPPADAM

# அல்லி ஸ்பெஷல் பப்படம்

தரமானதும் சுவைமிக்கதுமான அல்லிப் பப்படம், அல்லி நூடில்ஸ், அல்லி சிவப்பரிசி நூடில்ஸ், அல்லி ஜேம், அல்லி கோடியல், அல்லி மினரல் வோட்டர், அல்லி நுளம்புத் திரி, அல்லி சோப், அல்லி தக்காளி சோஸ், அல்லி மிளகாய் அல்லி சிவப்பரிசி, அல்லி அரிசிமா முதலியவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள சிறந்த இடம்

## அல்லி கொம்பனி (பிறை) லிமிட்டட்



நாம்முளுவ,

பஸ்யால



DISTRIBUTED BY :

**Alli Company (Pvt) Ltd.**

Pasyala. T.P. 033-86798, 85039, 85040

Fax : 0094-33-85003

E - mail. shanazz@lanka.ccom.ik

அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு முகவர்

# நியு பாஹிம் என்ட பிறைஸ் பிறைவேட் லிமிடட்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பல்லாயிரக் கணக்கானவர்களை அனுப்பி நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம். ஆண் பெண் இருபாலாருக்கும் உடனடி வேலைவாய்ப்பிற்கு நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்.

# NEW FAHIM ENTERPRISE (pvt) ltd.


அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு முகவர்

இரண்டு வாரத்திற்குள் பயணம், கடவுச் சீட்டு பெற்றுக் கொடுக்கப்படும்.

**283, முதலாம் மாடி,**
**பிரதான வீதி,**
**கொழும்பு - 11**

283, 1st Floor,
Main Street,
Colombo - 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இலங்கை வாழ் முஸ்லிம்களை அடையாளப்படுத்தியவர் மர்ஹூம் அஷ்ரஃப்

- ஏ. சீ. எம். சுஹூட்

மறைந்த தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ர.்.ப் அவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களை வெறும் வார்த்தைகளால் கூறி விட முடியாது.

கடந்த காலங்களில் பெரும்பான்மை அரசியல் வாதிகளிடம் பெற்ற தரகர் முறை சலுகைகளை மாற்றியதோடு, தலைவர் அஷ்ர.்.ப் அவர்கள் அது சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருந்த போதிலும் எமது உரிமைகளை நேரடியாகப் பெற்றுத்தந்தமை அவரது அளப்பரிய பணிக்குச் சான்றுபகரும்.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இலங்கை வாழ் சிறுபான்மை முஸ்லிம்களின் பிரச்சினைகளை உரிய முறையில் வெளிக் கொணர்ந்தவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ர.்.ப் ஆவார்.

நான் அவருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிராவிட்டாலும் அவரது திறமையான செயற்பாடுகள் என்னை அவரின் பால் ஈர்க்க வைத்தது.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் உரிமைகட்காகவும் ஏனைய, சிறுபான்மை மக்களின் உரிமைக்காகவும் ஜன நாயக ரீதியில் இயங்கி வளந்து வரும் சிறிய கட்சிகளின் நலனுக்காகவும் 1998ஆம் ஆண்டு 2வது குடியரசு அரசியல் யாப்பில் புகுத்தப்பட்ட தேர்தல் தொடர்பான 12.5 வீத வெட்டுப் புள்ளியை இரவோடு இரவாக அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி 5 வீதத்துக்கு குறைத்தன் மூலம் சிறுபான்மை இன மக்களினதும் ஜனநாயக அரசியல் கட்சிகளினதும் உயிரோட்டமான அரசியல் செயற்பாடுகளுக்கு வித்திட்ட பெருமையும் இவரையே சாரும்.

இது மாத்திரமன்றி 1970 தொடக்கம் 1977 வரை முஸ்லிம்களின் தலைவராக கணிக்கப்பட்ட மர்ஹூம் கலாநிதி பதுயுத்தீன் ம.்.மூத் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தும் கூட கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் பல்கலைக்கழகமொன்றின் ஒரு பீடத்தைக் கூட (வளாகம்) அமைக்க முடியாத நிலையை மாற்றி அமைத்ததுடன் ஒரு சில மாதங்களுக்குள்ளேயே தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தித் தந்த பெருமை தலைவர் அஷ்ரபையே சாரும்.

அவர் எம்மை விட்டு மறைந்தாலும் அவருடைய எண்ணங்களும், கொள்கைகளும் முஸ்லிம் சமூகத்தை வழி நடத்திக் கொண்டே இருக்கும் என்பதை எவரும் மறுத்துறைக்க முடியாது.

**ஏ. சீ. எம். சுஹூட்**
**சுயாதீன பண்ணை உரிமையாளர்,**
**நிந்தவூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வாழ் சிறுபான்மை மக்களின் கலங்கரை விளக்காக ஒளிவீசி திசைகாட்டிய மாபெரும் தலைவர் மர்ஹூம் அஷ்ர∴ப்

**- எம்.பி. ஏ. அஸீஸ். ஜே.பி. அமைப்பாளர்**

செப்டம்பர் 16ம் திகதி இலங்கை வாழ் முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றை எழுதும் போது மறக்க முடியாத கண்ணீர் தோய்ந்த கரிய நாளாக இருக்கும் என்பதை நாம் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

ஆம், இலங்கை வாழ் சிறுபான்மை மக்களின் கலங்கரை விளக்காக நாலா திசைகளிலும் ஒளிவீசி - திசை காடடிய மாபெரும் தலைவர், மக்கள் தொண்டன், மனிதம் நிறைந்த மனிதன் மா்ஹூம் எம். எச். எம். அஷ்ர∴ப் அவர்கள் மறைந்த அத்தினத்தை நினைக்கும் போது குருதியோட்டமே நின்று விடுவது போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றது.

எம் நெஞ்சமெலாம் நிறைந்த அந்த மாபெரும் தலைவரின் ஒவ்வொரு பக்கமும் அற்புதங்கள் நிறைந்த அருமையான ஒரு புத்தகம் உலக வரலாற்றில் கண்ணிறைந்த கனவான்களான பல அரசியல் தலைவர்களை சந்தித்துள்ளோம். அந்த வரிசையில் கிழக்கிலே தோன்றிய உதய தாரகை நாற்றிசையும் ஒளி வீசி பிரகாசிக்க தொடங்கிய அவ்வேளை மறைந்து போன அந்த நினைவை மறக்கத்தான் முடியுமா?

மறைந்த முஸ்லிம் கங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான மர்ஹூம் அஷ்ர∴ப் அவர்கள் தன்னை ஒரு அரசியல் வாதியாக மட்டும் இனம் காட்டவில்லை. தொண்டனாக, ஆளுமைமிக்க தலைவராக, தீர்க்க தரிசியாக, கவிஞராக எல்லாவற்றுக்கும் மேலாக, மனம் விரும்பும் மனிதனாக அவரைக் காண்கின்றேன்.

கடந்த 25 வருடங்களாக அன்னாரின் பக்கத்தில் இருந்து பல பக்கங்களைக் கண்டவன் என்ற வகையில் அவரை ஒரு முழு மனிதனாகக் காண்கின்றேன்.

சட்டத்துறையில் ஜொலித்த அஷ்ர∴ப், அரசியல் துறையிலும் முத்திரை பதிப்பதற்கு அவரது ஆளுமையின் அற்புதச் சக்தியே காரணமாகும். அரசியல் செயற்பாடுகளில் மற்ற இனத்தவர்கள் மத்தியில் கேள்விக் குறியாக இருந்த முஸ்லிம் சமூகத்தை ஆச்சரியக் குறியாக மாற்றிய மகத்தான் பெருமைக்குரியவர். மறைந்த தலைவரின் செயற்பாடுகள் வேறாகவும் - அரசியலை வேறாகவும் கொள்ளாமல், மக்கள் மத்தியில் சொன்னதை செய்யவும் - செய்வதை சொல்லவும் முன் மாதிரியான அரசியலை முன்னெடுத்துச் சொன்றவர்தான் அந்த மாபெரும் தலைவர்.

ஒரு அரசியல் வாதிக்குரிய தீர்க்க தரிசனம் அவரில் பெருமளவு காணப்பட்டது. தனது உறுதியான தலைமைத்துவத்தினால் தான் சார்ந்த கட்சியை கட்டுக் கோப்பான நிலையில் வைத்திருந்தார். தொண்டர்கள் நம்பும் தலைவனாக மக்கள் நம்பும் மாபெரும் தலைவராக அவர் மிளிர்ந்ததற்கு அன்னாரின் தலைமைத்துவப் பண்புகளே காரணமாயிற்று. முஸ்லிம்களின் அரசியல் வழிகாட்டியாக சிதறிக் கிடந்த சமூகத்தை ஒன்று படுத்திய தீர்க்க தரிசனமிக்க மனிதர் அவர். அவரின் அரசியல் வாழ்வில் அவர் சமூகத்தை உயர்த்திய ஏணியாகவும், கரைசேர்த்த தோணியாகவும் தன்னை உருக்கி சமூகத்திற்கு கொடுத்த மெழுகு வர்த்தியாகவும் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ர∴ப் அவர்களைக் காண்கின்றோம்.

அஷ்ர∴ப் அவர்கள் ஒரு அரசியல் வாதியாகவும், ஒழுக்கம் நிறைந்த மனிதனாகவும் அவர் தனது வாழ்வை அமைத்துக் கொண்டார். சமூகச் சிந்தனையின் அடிப்படையில், தன்னிடம் உதவி கேட்டு வந்தர்வகளிடம் ஓர் கட்சித் தலைவராக, அமைச்சராக அணுகாமல் ஓர் மனிதனாகவும், மனித இதயம் படைத்த மகத்தான தலைவராகவும் அவரைப் பலமுறை அனுபவ ரீதியாகக் கண்டுள்ளேன்.

சூரியனின் பிரகாசத்தைப் போன்று சமுதாய முன்னேற்றத்திற்காக பல்வேறு திறமைகளை தன்னகத்தே கொண்டு வாழ்ந்த அந்த மாமனிதர் இன்று நம்மிடையே இல்லை என்பதை இதயம் ஏற்க மறுக்கின்றது.

அவர் மறைந்து ஒரு வருடம் என்ன, ஓராயிரம் ஆண்டுகள் மறைந்தாலும் மறக்குமா நெஞ்சம். அஷ்ர∴ப் என்ற அந்த மரம் சாய்ந்து விட்டது. நிரப்ப முடியாத இடைவெளியை ஏற்படுத்தி விட்டு எங்களை விட்டுப் பிரிந்து விட்டார். அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பதுதான் அவருக்கும், அவர் நேசித்த சமூகத்திற்கும் நாம் செய்யும் கைம்மாறாகும்.

சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்து மறைந்த தலைவரை அல்லாஹ் பொருந்திக் கொள்ள வேண்டும் என நாம் எல்லோரும் பிரார்த்தித்து, எந்நேரமும் அவர் உச்சரித்த ஒற்றுமை என்ற கயிற்றைப் பற்றிக் கொள்ள அல்லாஹ் நமக்கெல்லாம் பேரருள் புரிய வேண்டும் என கூறி விடை பெறுகின்றேன்.

எம். பி. ஏ. அஸீஸ் ஜே.பி
அமைப்பாளர்,
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
தலைவர்,
அனைத்துப் பள்ளி வாயல் சம்மேளனம்,
பொத்துவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களின் விஷேட ஊடக தகவல் தொடர்பு இணைப்பதிகாரியாகக் கடமையாற்றியவரும், அகில இலங்கை எம். எச். எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்ற ஸ்தாபகத் தலைவருமான ஜனாப் மீரா. எஸ். இஸ்ஸடீன் தலைவருடன் இறுதியாக எடுத்துக் கொண்ட படம்



2000.09.14 அன்று மாலை 6.00மணியளவில் அன்னாரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து இப்படம் பிடிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த தியாகத் தளபதி மர்ஹூம் அஷ்ர∴ப்

- அல் ஹாஜ் எம்.எம். ஹாமிது லெப்பை

بسم الله الرحمن الرحيم

உலகில் சிறந்த ஆத்மாக்கள் அனைத்தும் உலகை விட்டு மறைந்தேயாகும். என்பது இறைவனது நியதியாகும். அல்- ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் அந்த நியதிக்கிணங்கள எம்மை எல்லாம் துக்க சாகரத்தில் ஆழ்த்தி விட்டு தாருல் பவனாகிய இவ்வுலகைத் துறந்து தாருல் பகாவிக்கு சென்று விட்டார்கள். எம்மை விட்டு மறைந்து ஒரு வருட காலமாகியும் எங்கள் அனைவரது நெஞ்சங்களிலும் குடியிருக்கும் வீரத்தளபதியை இன்று நினைவு கூறுகின்றோம்.


சம்மாந்துறை மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட எம் தலைவர் ஆரம்பக் கல்வியை கல்முனையில் தொடங்கினார். தனது அரசியல் மதிநுட்பத்தினால் அனைத்து அரசியல் வாதிகளையும் தன்பக்கம் ஈர்த்தெடுத்துக் கொண்ட அவர் சமுகத்தின் எழிச்சிக்காக பல தியாகங்களை செய்தார். எதிர்க் கட்சியிலுள்ள முஸ்லிம் அரசியல் வாதிகள் தலைவரின் அரசியல், நுட்பத்தையும், அரசியல் சாணக்கியத்தையும் அறிந்து முஸ்லிம் சமூகத்தின் தேவைக்காக அவருக்கு எப்போதும் ஆதரவு வழங்க தயராக இருந்தார்கள். நான் கூட (26) இருபத்தாறு வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து 1994ம் ஆண்டில் தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் அரசியல் சித்தாந்தத்தினால் கவரப்பட்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டேன். அன்றிலிருந்து அவர் மறைவதற்கு முன்பு சம்மாந்துறையிலும், சாய்ந்தமருதிலும் கலந்து கொண்ட இரு பகிரங்க கூட்டங்களிலும் அவருடன் நானும் கலந்து கொண்டேன். அவருடைய இறுதி பகிரங்க கூட்டத்திலும் முஸ்லிம்கள் ஒன்றுமைபற்றியே உரையாற்றிய தலைவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களைக் கூட மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொண்டு செல்ல வேண்டுமென்ற அழைப்பையும் விடுத்தார்.

மறைந்தும் மாண்புறும் மக்களிடையே அல் - ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் மிகவும் முதன்மையானவராகத் திகழ்கிறார். முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த தியாகத் தளபதியின் வாழ்க்கைச் சரித்திரத்தில் எமக்கு பல முன் மாதிரிகள் பொதிந்துள்ளன. மனித வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் அவருக்கு நிகர் அவரேதான். அரசியல் அநாதைகளிலிருந்து முஸ்லிம் சமுகம் இந்த இலங்கை நாட்டை ஆளக்கூடிய அளவுக்கு தனது அரசியல் சாணக்கியத்தால் வழி ஏற்படுத்திய மாமனிதர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் ஒரு சிறுபான்மை சமூகத்தின் அரசியல் என்பதும் பெரும்பான்மை சமூகத்தை அண்டி ஒன்றியதாக இருக்க வேண்டும் என்ற ஒரு நியதியை வகுத்துக் கொண்டு அதனை நியாயப்படுத்துவது போல வாழந்து காட்டிய தலைமைத்துவங்களை ஓரம்கட்டி விட்டவர் எம் தலைவர். பெரும்பான்மை சமுகங்கள் கூட சிறுபான்மை மக்களின் பக்கம் சாய்ந்துதானாக வேண்டும் என்ற புதிய சித்தாந்தத்தினை நிரூபித்து காட்டியவர் அவர். எத்தனை தோப்புகள் தோன்றினாலும் அத்தனை தோப்புக்களையும் அரவணைக்கும் ஒரு பெருவிருட்சமாக என்றும் மிளிரும் தனது தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் என்றும் நிழல் தருவார். அவர் நிழலிலே அவரது எதிரிகள் கூடப் பயன்பெற்று மகிழ்வது அவரது பெருந்தன்மைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

எனவே, விருட்சத்திற்கு வித்திட்ட மாமனிதரின் நினைவு தினத்தில் அனைத்து முஸ்லிம்களும் ஒற்றுமையெனும் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட பிரார்த்திக்கின்றேன்.

**அல் - ஹாஜ் எம்.எம். ஹாமிதுலெப்பை.** ஜே.பி,
(ஓய்வு பெற்ற அதிபர்)
கௌரவ தலைவர். பல.நோ.கூட்.சங்கம். சம்மாந்துறை.
கல்முனை மாவட்ட சிககூ சமாசம். மாவடிப்பள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அல்ஹாஜ் என்.எம் அமீன்**
**தலைவர்,**
**ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்**

இலங்கை வாழ் முஸ்லிம்களின் அரசியல் எழுச்சிக்கும் விழிப்புக்கும் ஒரு தசாப்பத்தத்தில் பெரும் பங்களிப்புச்செய்தவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் போக்கினை மாற்றி அமைத்தவர்களில் பதுயுதீன் முஹம்மத் அவர்களை அடுத்து முக்கிய இடம் பெறுபவர் மர்ஹூம் அஷ்ர.்.ப் ஆவார். சிதறிக்கிடந்த முஸ்லிம் வாக்குகளுக்கு பெறுமானத்தை பெற்றுக்கொடுத்த மர்ஹூம் அஷ்ர.்.ப் குறுகிய காலத்தில் நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் அளப்பெரிய பங்களிப்பு செய்தவராவார்.


சமூகத்துக்கு சேவை புரிவதற்கு தனக்கு கிடைத்த குறுகிய காலத்துக்குல் சமூகத்தின் நீண்டகால பல தேவைகளைப் பெற்றுக்கொடுத்த பெருமை அமைச்சர் அஷ்ர.்.பினையே சாரும்

முஸ்லிம்களுக்காக இந்நாட்டில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என நம்முன்னோர் பலர் கனவு கண்டனர் அந்தக் கனவினை நனவாக்கிய பெருமையும் மர்ஹூம் அஷ்ர.்.பினேயே சாரும். மர்ஹூம் அஷ்ர.்.ப் ஆற்றிய சேவைகளுள் மிக முக்கியமானதும் பெறுமதிமிக்கதுமான ஒன்று தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்பதே எனது தாழ்மையான கருத்தாகும்.

எழுத்தாளாராக, கவிஞராக, சிறந்த பேச்சாளாராக, சட்டவல்லுனராக, தனது பெயரை பதிவு செய்து கொண்ட மர்ஹூம் அஷ்ர.்.ப் இந் நாட்டு ஊடகவியலாளர்களுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார். ஊடகவியலாளர்களின் நலனில் அக்கரைகாட்டிய அமைச்சர் அஷ்ர.்.ப் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்துடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்ததோடு முஸ்லிம் மக்களின் கட்டுபாட்டில் நாளிதழ் ஒன்றை ஆரம்பித்தது. மற்றும் இலத்திரனியலில் ஊடகங்களினையே ஏற்படுத்துவதற்கு முஸ்லிம் மீடியா போரம் கொண்டுள்ள இலட்சியத்தை செயற்படுத்த எம்முடன் இணைந்து செயற்பட முற்பட்டபோதே அவரை அல்லாஹ் எம்மிடமிருந்து பிரித்தெடுத்தான். அவரது அந்த சாதனையை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பது எல்லோரதும் பொறுப்பாகும்.


சமூக சிந்தனையுடன் செயற்பட்ட அமைச்சர் அஷ்ர.்.பின் எண்ணங்களை சமூகத்தினர் முன்னெடுப்பதற்காக அகில இலங்கை எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் ஞாபகார்த்த மன்றம் ஒரு நினைவு மலரை வெளியிடுவது பாராட்டபட வேண்டியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**HOLYFIELD PUBLICATION**
**220, MAIN STREET,**
**KALMUNAI.**
**SRI LANKA**
**CALL : 067 - 29429 & 29887**
**FAX : 00946729492**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகத்துறையை முழுமையாக பயன்படுத்திய அரசியல் ஞானி


UL. யாக்கூப் JP

**நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (செய்திப் பிரிவு), அறிவிப்பாளர்.**

**இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்,**

**கொழும்பு.**


ஸ்ரீ லங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரான இவர் கடந்த 17 வருட காலமாக இலங்கையின் தொலைக்காட்சி வானொலித்துறையில் ஒரு ஒலி, ஒளிபரப்பாளராகப் பணிபுரிந்து தற்போது தேசிய ரூபவாஹினித் தொலைக்காட்சிச் சேவையின் செய்திப் பிரிவில் சிரேஷ்ட தயாரிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ர.்.ப் அவர்களை எனது கல்லூரிக் காலங்களில் இருந்தே நன்கு அறிவேன். 1987ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான தொலைக்காட்சிப் பிரசாரத்தில் பங்குகொள்ள எமது நிலையத்துக்கு அவர் வருகை தருவார். அப்போது நான் அது சம்பந்தமான தமிழ் ஒளிபரப்புக்குப் பொறுப்பாக இருந்தேன். அவர் அடிக்கடி வந்து போனதன் காரணமாக அவருடன் எனது நெருக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. அதன் பின்னால் 1988 பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கையின் போதும் அதே விதமாக அவருடன் எனது உறவு மேலும் இறுக்கமடைந்தது.

இந்த நிகழ்வுகளுக்குப் பின்னால், அடிக்கடி அவரைச் சந்திக்கும் வாய்ப்பு தொழில் ரீதியாகவும், கலை, இலக்கிய ரீதியாகவும் எனக்குக் கிட்டியது ஒரு உண்மையான அரசியல் வாதியின் எழுச்சிக்கும், ஒரு தனித்துமான கட்சி தனது நோக்கத்தை அல்லது இலட்சியத்தை அடைவதற்கும், அந்தக் கட்சி ஒரு மக்கள் சக்தியாக மாறுவதற்கும் முதன்மைக் காரணியாக அமைவது ஊடகமே என்று என்னிடம் பல சந்தர்பங்களில் அவர் கூறியுள்ளார். 1994 பொதுத்தேர்தலைத் தொடர்ந்து அவர் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையடுத்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக அவரைப் பேட்டி காணும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. 'கிழக்கின் உதயம் மேற்கின் இதயம்' என்ற அவர் பற்றிய நூல் சம்பந்தமான தொலைக்காட்சிக் கலந்துரையாடல் ஒன்றைத் தலைமை தாங்கி நடாத்தும்படி அவர் என்னை அன்புடன் கேட்ட போது அதனை நான் ஏன் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்று கேட்டேன். அதே மாகாணத்தைச் சேர்ந்த அதுவும் நான் பிரதிநிதித்துவம் செய்யும் அம்பாரை மாவட்டத்தைச் சேர்ந்த நீங்கள் நடத்துவதே சாலப்பொருத்தம் என்று கூறியது. இன்னும் என் மனத்திரையில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது.

மேலும், 'நான் எனும் நீ ' எனும் அவரது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கவிதை நூல் சம்பந்தமாக நான் ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்து ரூபாவாஹினியில் ஒளிபரப்பிய போது அவர் தனது மகிழ்ச்சியை இப்படித்தான் கூறினார். ''யாக்கூப்; எனது நூல் வெளியீட்டு விழாவை பி. எம். ஐ. சி. எச் (B.M.I.C.H) இல் நடாத்திய போது நான் கண்டவற்றை, பார்த்து ரசித்தவற்றை, அனுபவித்தவற்றை, இரட்டிப்பான அனுபவத்தோடு பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி என்னைப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டீர்கள்'' என்றவாறு எனது கரங்களைப் பற்றிக் கொண்டார்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஜுலை 21ஆம் திகதி கொழும்பில் கௌரவிக்கப்பட்ட 7 ஊடகவியலாளர்களில் நானும் ஒருவன் அவர் மரணிப்பதற்கு சுமார் 55 தினங்களுக்கு முன்னர் அவரது கரங்களால் பொற்கிளியும், விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டதை உண்மையில் நான் ஒரு மாபெரும் கௌரவமாகவும், பேறாகவும் கருதுகின்றேன்.

இவ்வாறு அவருடன் அநேக சந்தர்ப்பங்களில் நெருங்கியிருந்ததால் என்னவோ எனக்கே அந்த மா மனிதனின் அகால மறைவின் போது அவரது ஜனாஸா நல்லடக்கம் பற்றிய நேர்முக வர்ணனையை தொலைக்காட்சியில் இந்த நாட்டுப் மக்களுக்காக வழங்கும் வாய்ப்பும் கிட்டியது. அவரின் பிரிவு துரதிர்ஷ்டவசமான நிகழ்வு என்றாலும் அவரது பிரியாவிடையிலும் நான் அவருடன் நெருங்கிப் போக வேண்டிய தேவையும் கடந்த வருடம் செப்டம்பர் 16ம் திகதி இயற்கையால் உருவாக்கப்பட்டது.

ஒரு ஊடகவியலாளனை எப்படி கௌரவிக்க வேண்டுமோ அவ்வாறே கௌரவிக்கவும், மதிப்பளிக்கவும் தெரிந்திருந்த மாமனிதரே அந்த அகன்ற விருட்சமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு 'ஜன்னத்துல் பிர்தௌஸ்' எனும் சுவனபதியை அருள்வானாக ஆமீன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A.R.M. ஜிப்ரி

**சரிகமுல்லை,**

**பாணந்துறை**

அப்துல் றஹ்மான் - சுபைதா உம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக 1959 மே மாதம் 1ம் திகதி (மேதினத்தன்று) பிறந்தவர் A.R.M.ஜிப்ரி அவர்கள்.

க.பொ.த .சாதாரணதரம் வரை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் கா.பொ.த உயர் தரத்தினை கல்முனை ஸாஹிறா கல்லூரியிலும் பயின்றார்.

குண்டசாலை விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா (Diploma - in - Agricultre) பட்டம் பெற்ற இவர் கணித - விஞ்ஞான துறையில் விஷேட பயிற்சி பெற்ற ஆசிரியர் ஆவார். இவர் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள B.Ed பட்டப்படிப்புக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

1986 ஒக்டோபரில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குள் (S.L.B.C )பிரவேசித்த இவர் தற்போது அனேக நேயர்களின் நெஞ்சங்களில் நிறைந்த தென்றல் அறிவிப்பாளராகவும், கிரிக்கட் நேர்முக வர்ணனையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

1991 டிசம்பரில் நடைபெற்ற ' சாப் ' விளையாட்டுப் போட்டியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (S.L.B.C) சார்பாக நேர்முக வர்ணனையாளராகக் கடமையாற்றி அவ்விளையாட்டுப் போட்டியினை சிறப்புற நேர்முகவர்ணனை செய்து பல்லாயிரம் நேயர்களது பாராட்டினையும் பெற்றுக்கொண்டார்.

1992ஆம் ஆண்டு முதல் இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்தி வாசிப்பாளாரகவும், விளையாட்டு வர்ணனையாளராகவும் கடமைபுரிந்து வருகின்றார்.

1996 மே மாதம் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் உட்பட பத்துப்பேர் அடங்கிய குழுவில் இவரும் ஒருவராக லிபியா, மோல்டா, டுபாய் போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் ஒன்றையும் மேற்கொண்டார்.


2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பு தெமட்டகொட Y.M.M.A. மண்டபத்தில் அம்பாரை மாவட்டக் கரையோரச் செய்தியாளர் சங்கத் தலைவர் ஜனாப் மீரா. எஸ். இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் கௌரவிப்பு வைபத்தின் போது மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களினால் கௌரவிக்கப்பட்ட இவர் 'சாமஸ்ரீ செந்தமிழ்ச் செல்வன்' ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியையான ஆமீனவை அன்புத் துணைவியாக ஏற்றுள்ள இவர் இரு ஆண் குழந்தைகளான மின்ஹாஜ், மின்ஆம் ஆகியோரின் தந்தையாவார்.

இன்றைய தமிழ் பேசும் நேயர்கள் பல இலட்சம்பேரின் இதயத்தில் மங்காத இடம்பிடித்துள்ள இவரது திறமையும் ஆற்றலும் ஒப்பற்றது என்றால் அது மிகையாகாது.

ஊடகவியலாளர்களை எப்போதும் நேசித்து புன்னகைப் பூங்கொத்துக்களை அள்ளி வீசி அகம் மகிழும் A.R.M. ஜிப்ரியின் பணிகளும், ஆற்றலும், திறமையும் மேலும் வளரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகத்துறையில் வெள்ளிவிழாக் கண்ட இவரைப்பற்றி...

**- மலர்குழு**

அக்கரைப்பற்றில் மர்ஹூம் மீரா சாஹிப் - ஹஜியானி அவ்வாக்குட்டி தம்பதிகளின் சிரஷ்டே புதல்வராக மீரா. எஸ். இஸ்ஸடீன் (முஹம்மது இஸ்மாயில்) 1955.01.10ஆம் திகதி அக்கரைப்பற்றில் பிறந்தார்

தனது ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயத்தில் பயின்ற இவருக்கு பல்கலைக்கழக நுழைவு அனுமதி கிடைத்த போதும் இவரின் பொருளாதார நிலை காரணமாக 1980ம் ஆண்டில் அந்த அரிய வாய்ப்பு கை நழுவிப் போனது. இந்நிலையில் தனது தளராத நம்பிக்கையின் பயனாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவனாகப் பதிவு செய்து தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்து 1984இல் இவர் ஒரு கலைப்பட்டதாரியானார். தரம் நான்கு மட்டுமே பாடசாலையில் பயின்ற ஒருவர் பட்டதாரியானாரென்றால் அது எத்தகைய அபார முயற்சியாக இருக்கும் என்பது இங்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கலைப்பட்டதாரியும், ஊடகவியல் சான்றிதழ் பெற்றவரும், சமாதான நீதவானுமாகிய இவர் 1987ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழத்தில் சட்டத்துறையில் (Law Faculty) வெளிவாரியாக பயில்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது நாட்டில் நிலவிய அசாதரண சூழ்நிலை காரணமாக அதனையும் தொடரும் வாய்ப்பு இவருக்குக் கிட்டவில்லை.

இவர் கல்வியில் இந்தளவு உயர்வதற்குக் காரணமாக இருந்தவர் இவரது சாச்சாவான ஜனாப் யூ. சுலைமான் (B.com Spl., Accountan) அவர்களேயாவார்.

இளவயதிலேயே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்துவம் பெற்றுக் கொண்ட இவர் அக்கட்சியின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் உழைத்து வந்தார். 1987ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் முஸ்லிம் பிரிவொன்றை அமைப்பதற்கு ஊன்று கோலாக இருந்த முன்னாள், இந்நாள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், முக்கிய பிரமுஸ்தர்களுமாகிய கௌரவ அலவி மௌலானா, ஹலீம் இஸ்ஹாக், ஏ. எம். சம்சுத்தீன், டாக்டர் எச். எம். ம.்.றூப், ஆகியோருடன் இவரும் ஒருவராக இணைந்து செயற்பட்டு 1988 ஜனாதிபதித் தேர்தல் வரை இவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முஸ்லிம் பிரிவின் பொதுசனத் தொடர்பு, பிரச்சாரச் செயலாளராகப் பணி புரிந்தார்.

காலப் போக்கில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்ட இவர் 1996 முதல் மறைந்த தலைவர், சட்டத்தரணி, கவிஞர் திலகம், அமைச்சர், மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் விசேட ஊடகத் தகவல் இணைப்பதிகாரியாகப் பணி புரிந்தார். அவர் மரணிக்கும் வரை அப்பதவியில் இருந்த இவர் 2001 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் பிரதிக் கல்வி அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லாஹ்வின் சிரேஷ்ட ஊடக இணைப்பதிகாரியாகப் பணிபுரிந்தார். அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் உபதலைவரும் அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தின் தலைவருமாக இரு தடவைகள் (1999/2000), (2000 / 2001) தெரிவு செய்யப்பட்ட இவர் அகில இலங்கை எம்.எச்.எம். அஷ்ர.்.ப் ஞாபகார்த்த மன்றத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

கல்விக்கு உயிரூட்டியவன் கல்லறையிலும் உயிரோடிருப்பான் என்பதற்கிணங்க அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்தை உருவாக்குவதில் முழு மூச்சாக நின்று உழைத்தவர்களுள் இவர் முதன்மையானவர். அந்தப் பாடசாலையை அமைப்பதற்கான குழுவில் மர்ஹூம் பீ.எஸ். மீரா தலைவராகவும், மீரா. எஸ். இஸ்ஸடீன் செயலாளராகவும் இருந்தவேளை பீ.எஸ்.மீரா இறையடி எய்தியதைத் தொடர்ந்து அவரது தலைமைப் பதவியை இவர் ஏற்று அப்பாடசாலையை தோற்றுவித்து எமது சமூகத்துக்குத் தந்துள்ளார்.

இவர் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி திறப்பு விழா சிறப்பு மலரின் (1992) ஆசிரியராக இருந்து சிறப்புற அமைத்து அதன் முதற் பிரதியை முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடமும் அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயத்தின் பொன் விழா சிறப்பு மலரின் ஆசிரியராக இருந்து அதன் முதற் பிரதியை அமைச்சர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ர.்.பிடமும் அக்கரைப்பற்று மன்பஉல் கைறாத் அரபிக் கல்லூரி நினைவு மலரின் ஆசிரியராகவும் இருந்து அம்மலரின் முதற்பிரதியை முனனாள் சபாநாயகர் எம். எச். முகமட் அவர்களிடம் அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வெளியிட்ட சிறப்பு மலரின் ஆசிரியராகவும் இருந்து அம்மலரின் முதற் பிரதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் கல்வி, உயர் கல்வி, நீதி அமைச்சர் மர்ஹூம் ஏ.சீ.எஸ். ஹமீத் அவர்களிடம் ஒப்படைத்தார். இறுதியாக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் மறைந்து ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் ``**காவிய நாயகன்**'' எனும் இந்நூலினை வெளியிடுவதிலும் முழு மூச்சாக நின்று உழைத்தவராவார்.

மறைந்த மாமனிதர் மர்ஹூம் அஷ்ர.்.ப் மீது அபார அன்பும் பற்றும் கொண்ட இவர் அவருடன் மிகவும் நெருக்கமான உறவு வைத்திருந்தார். அதனால் இவர்கள் இருவருக்கும் இடையில் மலர்ந்த அன்பின் உச்ச வெளிப்பாடே இந்நூலின் உருவாக்கமாகும்.

1972ஆம் ஆண்டு தொடக்கம் கட்டுரை, கவிதை என்பவற்றைப் பத்திரிகைகக்கு எழுதி வந்த இவர் 1974 தொடக்கம் இலங்கையிலுள்ள தேசிய நாளிதழ்களுக்கும் வார வெளியீடுகளுக்கும், வானொலி, தொலைக்காட்சி என்பவற்றிற்கும் அம்பாரை மாவட்டத்திலிருந்து செய்திகளை வழங்கி வருகின்றார்.

ஊடகத்துறையில் வெள்ளி விழாக் காணும் இவர் செய்தித் துறையின் மூலை முடுக்குகளையெல்லாம் எல்லாம் ஆராய்ந்து தேர்ச்சி பெற்ற அனுபவசாலியுமாவார். இதனால் இவருக்கு 1997ஆம் ஆண்டு தேசிய கலைஞர் பேரவை 'செய்திச் சிமிழ்' என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தது. இவர் செய்தித்துறையில் மட்டுமல்ல புகைப்படப்பிடிப்பு, ஒளிப்பதிவு (வீடியோ) என்பவற்றிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். இவரின் பத்திரிகைத் துறைப் பிரவேசத்துக்கு அடிகோலி வழி சமைத்தவர் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ யூ.எல்.எம். முஹிதீன் ஆவார். இவரின் எழுத்துத் துறை வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கி, ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி, நெறிப்படுத்தி, வழிப்படுத்திய பெருமை மர்ஹூம் எச்.எம்.பீ. முஹிதீன் அவர்களையே சாரும்.

இது காலவரை சமூக, சமய, அரசியல், பொருளாதார, கல்வி தொடர்பிலான செய்திகளை மட்டுமன்றி நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும், எழுதிக் குவித்திருக்கும் இவர் விரைவில் ஒரு பத்திரிகை வெளியிடும் அவாவோடும் இருக்கின்றார். இவரது இந்த எண்ணம் நிறைவேற எமது வாழ்த்துக்கள் அவருக்கு உரித்தாகட்டும்.

ஊடகத்துறையில் இவர் ஒரு செய்தியாளர் மட்டுமன்றி ஊடகவியலாளர்கள், மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் (Seminars), பயிற்சிப் பட்டறைகள் (Work Shop), என்பவற்றை ஏற்பாடு செய்து நடாத்தியுமுள்ளார்.

மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களின் உதவியுடன் கடந்த ஆண்டு அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர்கள் பலருக்கு Micro Cessette recorder, Office Bag, Photo Copy Paper என்பவற்றைப் பெற்றுக் கொடுத்ததுடன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். முஹிதீன் அவர்களின் நிதியில் இருந்து ஆறு ஊடகவியலாளர்களுக்கு தொலை நகல் இயந்திரத்தையும் (Fax) பெற்றுக் கொடுத்தார் அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாஉல்லாஹ் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஊடகவியலாளர்களின் நன்மை கருதி பயனுள்ள சேவையையும் ஆற்றியுள்ளார். ஊடகவியலாளர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்த பெருமை இவரை மாத்திரமே சாரும். மேலும் ஒரு வருட காலத்துக்குள் ஊடகவியலாளர் கௌரவிப்பு விழா ஐந்தினை நடாத்தி அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துள்ளார். அதில் கொழும்பு YMMA மண்டபத்தில் 2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடாத்தப்பட்ட கௌரவிப்பு விழா இவருக்கு பெருமையைத் தேடிக் கொடுத்தது. மேலும் ஊடகவியலாளர்கள் போக்குவரத்துச் செய்யும் போது எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்காக அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான (எஸ்.எஸ்.பி) பிறையன் எஸ். அமுனுகம அவர்களுடன் தொடர்பு கொண்டு விசேட பாதுகாப்பு அடையாள அட்டையையும் பெற்றுக் கொடுத்தார்.

எதற்கும் தயங்காத அஞ்சா நெஞ்சமும், சேவை மனப்பான்மையும், தான் சொல்வதை செயலில் செய்து காட்டும் உண்மைத் தன்மையும், பிறருக்கு உதவும் பரந்த மனப்பாங்கும் இவருக்கே உரித்தான குணங்களாகும். தொட்டதை எல்லாம் ஜோதியாய் மலரச் செய்யும் இவரது பாங்கு சிகரத்தை ஒத்தது என்று சொன்னால்கூட அது மிகையாகாது.

இவரது தூய்மையான எண்ணங்கள் என்றும் வெற்றி பெற மலர் குழு சார்பில் வாழ்த்துகிறோம்.

இவரது முகவரி

*மலர் குழு*

**மீரா.எஸ்.இஸ்ஸடீன்**
**பிரதான வீதி.**
**அக்கரைப்பற்று -02**
**T.P:/Fax: 067-77986**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளே புறப்படுங்கள்

போராளிகளே புறப்படுங்கள்!
ஒரு துப்பாக்கியின் ரவைகளால்
எனது இரைச்சல் அடங்கி விட்டதற்காய்
நமது எதிரி
வென்று விட்டான் என்று நீ
குழம்பி விடக் கூடாது!

அன்றுதான்
போராட்டமெனும் நமது
இருண்ட குகைக்குள்
வெற்றிச் சூரியனின்
வெண்கதிர்கள் நுழைகின்றன
என்பதையும் நீ மறந்து விடவும் கூடாது!

உனது தலைவனுக்கு
ஒன்றுமே நடக்கவில்லை
என்பதனை நீ எப்போதும் மறந்துவிடாதே!

தலைவர்கள் ஒருபோதும்
மரணிப்பதில்லை என்பதை
நான்
சொல்லித் தரவில்லையா?
என்னை அதற்காய் நீ
மன்னித்து விடுவாயாக!

நாம் அல்லாஹ்வின் பாதையில்
நடந்து வந்தவர்கள்
நீங்களெல்லாம் தொடர்ந்தும் அப்பாதையில்
நடக்க இருப்பவர்கள்!

இந்தப் போராட்டத்தில்
சூடுண்டாலும் வெட்டுண்டாலும்
சுகமெல்லாம் ஒன்றேதான்!

நமது போராளிகள்
யாருமே மரணிக்கப் போவதில்லை!

போராளிகளே புறப்படுங்கள்
ஓரத்தில் நின்று கொண்டு
ஓய்வெடுக்க நேரமில்லை!

இந்த மையித்தைக் குளிப்பாட்டுவதில்
உங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம்!

தண்ணீரும் தேவையில்லை பன்னீரும் தேவையில்லை!

உங்கள் தலைவன் உடலில்
இரத்தத்தால் சந்தனம் பூசப்பட்டுள்ளதா?

அது அவனின் மண்ணறையில்
சதா மணம் வீச வேண்டுமெனில்
தூக்கி விரைவில் எடுத்துச் சென்று
தொழுது விட்டு அடக்குங்கள்!

இந்த மையித்தைக் குளிப்பாட்டுவதால்
கடைசி நேரத்தில் தலைமைத்துவக்
கட்டுப்பாட்டை மீறாதீர்கள்!

கண்ணீர் அஞ்சலிகள் போதும்
கவலைகளை கொஞ்சம் மறந்து தூங்குங்கள்!

இரத்தத்தால் தோய்ந்திருக்கும்
எனது ஆடைகளை
எடுத்து வீசாதீர்கள்!

~ கவிஞர் திலகம்
எம்.எச்.எம். அஷ்ரஃப் ~

வேண்டுமெனில்
எனது 'இஹ்றாம்' துண்டுகளை
அவற்றுக்கு மேலே எடுத்துப் போடுங்கள்!

எனது உடலில் இருந்து பொசிந்து வரும்
இரத்தச் சொட்டுக்கள்; அவற்றைத் தழுவும்
பசியுடன் இருப்பதைப் பாருங்கள்!

எனது மூக்குக்குள்ளும்,
எனது காதுகளுக்குள்ளும்
பஞ்சுத் துண்டுகளை
வைத்தென் முகத் தோற்றத்தை
பழுதாக்கி விடாதீர்கள்!

சிலவேளைகளில் உங்களை நான்
சுவாசிக்காமலும்
சிலவேளைகளில் உங்களை நான்
கேட்காமலும்
சில வேளைகளில் உங்களுடன் நான்
பேசாமலும் இருந்திருக்கிறேன்!

குருடர்களாகவும்
செவிடர்களாகவும்
ஊமையர்களாகவும் இல்லாதவர்களால்
இப்போராட்டத்தில் நின்று பிடிக்க முடியாது!

கபுறுக் குழிக்குள்ளாவது
என்னை சுவாசிக்க அனுமதியுங்கள்
ஹூர்லீன்களின் மெல்லிசைகளை
கேட்டு ரசிக்கும் பாக்கியத்தைத் தாருங்கள்!

தூக்குங்கள் இந்த மையித்தை இன்னும்
சுணங்கவும் தேவையில்லை
தூக்கி விரைவில் எடுத்துச் சென்று
தொழுது விட்டு அடக்குங்கள்!
ஓரத்தில் நின்று கொண்டு
ஓயாமல் தர்க்கம் செய்யும்
வீரத்துக்கு வையுங்கள் முற்றுப்புள்ளி!

கருத்து வேறுபாடென்னும்
கறையான்கள் வந்துங்கள்
புரிந்துணர்வை சீரழிக்கும்! மிகவும்
புத்தியுடன் நடந்து கொள்ளுங்கள்!

வேகத்தைக் குறைக்காமல்
வெற்றியுடன் முன்னே செல்லுங்கள்!

ஆலமரமாய்
ஆயிரம் விழுதுகளுடன் நமது மரம்
வாழ வேண்டும் - அதை
வாழ்விக்கப் புறப்படுங்கள்!

எனது பணி இனிது முடிந்தது
உங்கள் பணிகளைச்
செய்வதற்காய்ப் புறப்படுங்கள்!

அவனின் நாட்டத்தை
இவனின் துப்பாக்கி ரவைகள்
பணிந்து தலைசாய்த்து
நிறைவேற்றியுள்ளன!

விக்கி அழுது
வீணாக நேரத்தை ஓட்ட வேண்டாம்
தூக்கி விரைவில் எடுத்துச் சென்று
தொழுதுவிட்டு அடக்குங்கள்!

**நன்றி:** நான் எனும் நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூர், பிரதான வீதி, பிறின்ஸ் மேர்சா கட்டடத்தில் இயங்கிவரும்

# அமானி டெக்ஸ்

*Makes you Stylish*

**2001**

சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட சேர்ட்டிங், சூட்டிங், சாறம், சாறி வகைகளையும் மணமக்களுக்குத் தேவையான கூறைப்பட்டுச் சாறி, ஸ்கேட் துணி வகைகள், ஆடவர்களை அலங்கரிக்கும் விதவிதமான ரீ சேர்ட் வகைகள், தாய்மார்களுக்கேற்ற சாறி வகைகள், சிறுவர் - சிறுமிகளுக்கான றெடிமேட் ஆடை வகைகளைப் பெற்றுக் கொள்ள என்றும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.....



# ARMANI TEX

*Prince Mirza Building*

*Nintavur*

067-50535

A R T

# AL-RAJHI TEXTILE'S




காலத்திற்கு ஏற்ற நவீன ஆடைத் தெரிவுகளுக்கு

நாடவேண்டிய ஒரே இடம்

## அல்-ராஜி டெக்ஸ் டைல்ஸ்

437-A, பிரதான வீதி,
மருதமுனை.
T.P: 067-29138
Celltell: 072-653789

ZEEMA HOTEL AKKARAIPATTU

# ZEEMA HOTEL




# ZEEMA HOTEL


நாவுக்கு ருசியான
சம்சா, பெட்டிஸ், வடை,
ரோல்ஸ், துதல், மஸ்கட்,
வட்டில் அப்பம், ஐஸ்கிறீம்,
லட்டு, கேக், குளிர்பானம்
முதலிய அனைத்துவிதமான
உணவுப் பொருட்களையும்
சுவைத்து மகிழ்ந்திட...

## சீமா ஹோட்டல்

பிரதான வீதி,
அக்கரைப்பற்று.
(ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முதல் முஸ்லிம் பிரதம ஆசிரியரான இவரை அகில இலங்கை எம்.எச்.எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றம் இன்று பொன்னாடை போர்த்தி, பொற்கிளி, விருது, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கின்றது.**

**முழுப்பெயர்** : முகைதீன் பிச்சை முஹம்மது அஸ்ஹர் (எம்.பி.எம் அஸ்ஹர்)

**முகவரி** : பி 27/2/1 தேசிய வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை, கொழும்பு - 10.

**சமூக அந்தஸ்து** : திருமணமானவர் - 5 பிள்ளைகளின் தந்தை. ஒரு ஆண், நான்கு பெண்கள்.

**வயது** : 54

**தொலைபேசி** : 01 - 348391

**தற்போதைய தொழில்** : பிரதம ஆசிரியர் - நவமணி தேசிய வார இதழ்.

**அலுவலக முகவரி** : ப்ரீலங்கா நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட், 156, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவளை.

**தொலைபேசி** : 074 - 204766

**பெக்ஸ்** : 074 - 204765

**பத்திரிகை துறை அனுபவங்கள்** : ஆசிரியர் புதுமைக்குரல் 1965 முதல் 1969 வரை
செய்தியாளர் தினபதி தினசரி 1968 முதல் 1974 வரை
செய்தியாளர் வீரகேசரி தினசரி 1975 முதல் 1994 வரை
ஆசிரியர் எழுச்சிக்குரல் 1985 முதல் 1998 வரை.
பாராளுமன்ற செய்தியாளராக 1969 முதல் 1994 வரை25 வருடங்கள் அனுபவம்.

**கௌரவங்கள்** : 25 வருட பத்திரிகையாளர் பணிக்காக 1992 முஸ்லிம் சமய, கலாசார விவகார, ராஜாங்க அமைச்சு சௌத்துல் ஹக்' (சத்தியக் குரல்) என்ற பட்டமளித்தது.
25 வருடகால பாராளுமன்ற செய்தியாளர் பணிக்காக முஸ்லிம் சமய கலாசார, ராஜாங்க அமைச்சு 1994இல் விருது வழங்கி கௌரவித்தது.
அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியம் 29.08.1999ல் இரத்தினபுரி நகரமண்டபத்தில் நடைபெற்ற விழாவில் "சாமஸ்ரீ சத்ய ஜோதி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது.
மலைநாட்டு கலாசார, கலை அமைப்பு 2000 டிசம்பர் 23இல் ரத்னதீப வித்துவான் எம்.ஏ ரஹ்மானால் **எழுத்துலக வேந்தர்** என பட்டம் சூட்டப்பட்டார்.

**ஆக்கங்கள்** : மாண்புறு ரமழானில் மனதுக்கினிய சிந்தனைகள்.
உறுமும் கடலும் உலவும் நதியும்.
(25 வருடகால பாராளுமன்ற செய்தியாளர் அனுபவத்தைக் கூறும் நூல்).


**புனைப்பெயர்கள்** : அஜான், அஸ்கல்ப, அபூஅப்ஸர், அபூஸியானா, ஸஹீதா மணாளன், அபூமிப்ராஹ், சத்யன், குலாப், சுழியோடி, கூர்ச்செவியன்.

**வெளிநாட்டுப் பயணம்** : இந்தியா, ஈரான், துபாய், நெதர்லாந்து, இத்தாலி, லிபியா, எகிப்து, பாகிஸ்தான்.

**சாதனைகள்** : 25 வருட காலம் தொடர்ச்சியாக பாராளுமன்ற செய்தியாளராக பணிபுரிந்த ஒரே பத்திரிகையாளர்.
தேசிய வார பத்திரிகை ஒன்றின் முதலாவது முஸ்லிம் பணிப்பாளர், முதலாவது முஸ்லிம் பிரதம ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இவர் பத்திரிகைத் துறைக்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவையைப் பாராட்டி அகில இலங்கை எம்.எச்.எம் அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றம் இன்று இவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி, விருது, சான்றிதழ் முதலியன வழங்கி கௌரவிக்கின்றது.**


ஏ.எச்.எம். பூமுதீன்
**134/B,** றுபைதா மன்ஸில்,
பெரிய நீலாவணை.
மருதமுனை.
T.P: 074-204766, 067- 21141


1978.02.22ல் மருதமுனை கிராமத்தில் பெரிய நீலாவணையில் பிறந்தவர் அப்துல் ஹையுள் மலிக் பூமுதீன் அவர்கள்.

இளமையிலிருந்தே சுறுசுறுப்பும் விவேகமும் கொண்ட இவர் சமூகப் பற்றும் சமூகசேவையில் அதீத ஈடுபாடும் கொண்டவர்.

பத்திரிகைத் துறையில் மிகுந்த நாட்டம் கொண்ட இவர் 1997ம் ஆண்டு தொடக்கம் செய்தித் துறையில் ஈடுபட்டு வருதுடன் கடந்த 2000.02.02ஆம் திகதி தொடக்கம் 'நவமணி' தேசிய வார இதழின் அலுவலக, பாராளுமன்றச் செய்தியாளராகக் கடமையாற்றிவருகின்றார். இவர் 'தர்ஷன் ' என்ற புனைபெயரில் பல்வேறு ஆக்கங்களையும் கட்டுரைகளையும் நவமணி பத்திரிகையில் எழுதி சமூக சீர்திருத்தத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் வழி சமைத்துள்ளார்.

மருதமுனை மண்ணில் நிறைந்து கிடக்கும் இலக்கியம், எழுத்து வளத்தினை இவரது படைப்புக்களிலும் காணக்கூடியதாக உள்ளது.

எவ்வகையான செய்தியானாலும் தயக்கமும் பக்கச்சார்புமின்றி எழுதி வரும் இவர் அண்மையில் அரசியல் தொடர்பான சில உண்மைகளை எழுதியதன் மூலம் அரசியல் வாதிகள் சிலரால் அச்சமூட்டி எச்சரிக்கப்பட்டுமுள்ளார். கசப்பாக இருந்தாலும்கூட அது உண்மையாயின் தயக்கம் இன்றி எழுதும் நிதானமும் தைரியமும் நிறைந்த ஒரு பத்திரிகையாளர் இவர் என்றால் அது மிகையாகாது. குறுகிய காலத்தினுள் பத்திரிகைத்துறையின் சிகரத்துக்கே சென்று விட்ட இளம் பத்திரிகையாளரான இவரின் காத்திரமான செய்தித்துறைப் பங்களிப்பின் மூலம் இவர் பலரது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பெற்றுவருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இவர் ஊடகத்துறைக்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவையைப் பாராட்டி, அகில இலங்கை எம். எச். எம். அஷ்ர∴ப் ஞாபகார்த்த மன்றம் இன்று இவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி, விருது, சான்றிதழ் முதலியன வழங்கி கௌரவிக்கின்றது.**

**பள்ளித்தம்பி இக்பால்**
**நூர்ப்பள்ளிவீதி,**
**அட்டாளைச்சேனை - 13.**

1967.04.25 ல், அட்டாளைச்சேனை 3ம் பிரிவில் பள்ளித்தம்பி - றைஹானா உம்மா தம்பதி களின் சிரேஷ்ட புதல்வராக பிறந்த இவர், அட்டாளைச்சேனை தேசிய கல்லூரியில் தனது ஆரம்ப கல்வியையும் உயர் கல்வியையும் பயின்றவராவர்


பள்ளிப்பருவத்திலேயே ஒரு ஆங்கில ஆசிரியராக வரவேண்டுமென்று பேரவாக் கொண்டிருந்த இவர், பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்களினது ஊக்குவிப்புடன் 1997.01.01 முதல் உதவி ஆங்கில ஆசிரியராக இருந்து வருகின்றார்.

அட்டாளாளச்சேனை 13ம் பிரிவைச் சேர்ந்த அல்ஹாஜ் எம்.ஐ அப்துல் றசீட் - உம்மு ஸல்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி பௌசுல் ஹிதாயா இவரது வாழ்க்கை துணைவியாவார். இல்லற வாழ்வில் தம்பதியர்க்கு இஷாட் அஹமட், முஹமட் இல்ஹாம் என இரு புதல்வர்களும், ஸஷ்னா பாணு எனும் புதல்வியும் இருக்கின்றனர்.

சமூகத்தில் காணப்படுகின்ற மாற்றங்களையும், மக்களின் மன உணர்வுகளையும் எழுத்துருவில் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டுமென்ற இலட்சியத்துடிப்பைக் கொண்டிருந்த இவர், ஊடகங்களின் மூலம் தான் இதனைக் காட்டமுடியும் என நினைத்து 1999. 03. 18ம் திகதி முதல் லேக்ஹவுஸ் பத்திரிகையாளராக நியமனம் பெற்றார். அன்று முதல் அவருடைய எண்ணங்களை எல்லாம் எழுத்துக்களால், தினகரன் மற்றும் டெய்லிநியூஸ் பத்திரிகைகள் மூலம் வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மட்டுமன்றி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாகாணச் செய்தியாளராகவும் கடமையாற்றும் இவர், அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தின் பொருளாளர் பதவியை கடந்த இரண்டு வருடங்களாக வகித்து வருவதோடு, நண்பர்களோடு இனிமையாக பழகும் சுபாவம், உதவும் சுபாவமும் கொண்டவரென்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இவர் இளைஞர் அபிவிருத்திக்காகவும் சமூக அபிவிருத்திக்காகவும் ஆற்றிவரும் அளப்பரிய சேவையைப் பாராட்டி, அகில இலங்கை எம். எச். எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றம் இன்று இவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி, விருது, சான்றிதழ் முதலியன வழங்கி கௌரவிக்கின்றது.**

## ஏ.ஜீ.ஏ.கபூர்

Dip - in - Journalism, Dip- in- Human Rights.

**முதலியார் வீதி, அக்கரைப்பற்று - 03.**

அக்கரைப்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் மிஷன், 6ம் குறிச்சி அ.மு.க. வித்தியாலயம், அக்கரைப்பற்று மு.ம.கல்லூரி (தேசியபாடசாலை) களில் கல்விகற்ற இவர் தொழில்நுட்பக் கல்வியை சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் கற்றார்.

1980 - 1985 டிசம்பர் 02 வரை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அம்பாரைப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் படவரைஞர் (Draughtsman) ஆகவும் பின் 1985 டிசம்பர் 03 முதல் இன்றுவரை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகத்தில் சிரேஷ்ட இளைஞர் சேவை அதிகாரியாகவும் கடமையாற்றி வருகின்றார்.

தே.இ.சே.மன்றத்தினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்டுவரும் சிறந்த இ.சே.அ. தெரிவுப் போட்டியில் 1998/99ம் ஆண்டில் அம்பாரை மாவட்டத்தின் சிறந்த இளைஞர் சேவை அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டதோடு அம்பாரை மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட சிறந்த இ.சே.அ. தெரிவில் 2000ஆம் ஆண்டில் விஷேட சேவைச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

இ.சே. அதிகாரியாக மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம், சிங்கள பிரதேசங்களில் சிறந்த முறையில் இளைஞர் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி இளைஞர்களுக்கு சிறந்த சேவையாற்றியுள்ள இவர் 1998ம் வருடம் அம்பாரை மாவட்ட தகவல் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் (தமிழ் மொழி) மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட இளைஞர்சேவை அதிகாரிக்குரிய கடமைகளை ஆற்றுபவராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைத் துறையில் ஆர்வம் கொண்ட இவர் அத்துறையினைப் பயிலும் பொருட்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறை டிப்ளோமா பாடநெறியினை பயின்று சித்தியடைந்ததோடு கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தில் இயங்கும் மனித உரிமைகள் கற்கை நிலையத்தின் புலமைப் பரிசில் பெற்று கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தினால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் டிப்ளோமா பாடநெறியினையும் பூர்த்தி செய்துள்ளார். சம்மாந்துறைத் தொழில்நுட்பக் கல்லூரியில் பயில் நிலைப்பட வரைஞர் பயிற்சி நெறியிலும் சித்தியடைந்துள்ளார்.

சமூக சேவையில் ஈடுபாடுகள் கொண்ட இவர் அ.ப.ம.ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக 1981/82, 83/84 காலங்களில் சேவையாற்றிய இவர் 1997 - 2000 வரை இச்சங்கத்தின் உபதலைவராகவும் கடமையாற்றியதோடு தற்போது பணிப்பாளராகவும் உள்ள இவர் அகில இலங்கை இ.சே.அ. சங்கத்தின் உபதலைவராக 04வது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு அக்கரைப்பற்று தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க நிருவாக சபை உறுப்பினராகவும், Peace Alliance இன் தவிசாளராகவும், 1991 முதல் கருங்கொடித்தீவு - 21 கிராமோதய சபைத்தலைவராகவும், சமதான நீதவானாகவும், கிறஸன்ட் சிறுவர் நிலையத் தலைவராகவும், சர்வோதய சிரமதான சமித்தி தலைவராகவும் அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்க நிருவாசபை உறுப்பினராகவும் முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினராகவும் உள்ளதோடு இன்னும் பல சமுகசேவை நிறுவனங்களிலுமிருந்து சிறந்த சமுக சேவையாற்றி வரும் இவர் தேசிய இ.சே.மன்ற 'துறுனு ரஸ' (තුරුණු රැස) இளைஞர் தகவல் மஞ்சரி ஆகியவைகளின் ஆசிரியராகவும் தினக்கதிர், நவமணி, பத்திரிகைகளின் செய்தியாளராகவும் கடமையாற்றி வருகின்ற இவரை 2001 ஜனவரி 6ல் அட்டாளைச்சேனை இ.க பிரதேச சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட பாராட்டுவிழாவில் இ.சே அதிகாரியாக சிறந்த சேவை செய்ததற்காக கௌரவ முன்னாள் பிரதி கல்வி அமைச்சர் ALM அதாவுல்லாஹ் M.P அவர்களால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

சுவீட் மஜீத் ஞாபகார்த்த மன்ற பொருளாளராகவும் முஸ்லிம் லீக்கின் செயலாளராகவும், அம்பாரை மாவட்ட நிஸ்கோ கூட்டுறவுச் சங்க பணிப்பாளராகவும், சனசவிய நம்பிக்கை நிதியத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, கல்முனைப் பிரதேச 'கிறடிட் அப்பிறைசர்' ஆகவும் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உபதலைவராகவும் புதுப்பள்ளியடி சனசமூக நிலைய நிருவாகியாகவும், சில்மியா இளைஞர் கழக தலைவராகவும், பல கழகங்கள் அமைப்புக்களில் கடமையாற்றியுள்ள இவர் தற்போது அக்கரைப்பற்று இளைஞர் சேவை அதிகாரியாக கடமையாற்றி வருகிறார். கடந்த 16 வருடகாலமாக இளைஞர்களின் அபிவிருத்திக்காகவும் மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் இவர் சுமார் 30 வருடங்கட்கு மேலாக பிரதேச மக்களின் பொருளாதார, கல்வி, கலாசார மேம்பாட்டிற்காகவும் பல்வேறு கழகங்கள் அமைப்புக்களின் மூலம் சிறந்த சேவையாற்றும் இவர் இளைஞர் அபிவிருத்தியினூடாக நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும், இன ஐக்கியத்தையும் ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் இன, மத வேறுபாடின்றி சேவையாற்றி வருகின்ற இவர் சிங்கள, ஆங்கில மொழிகளிலும் பரிச்சியமுள்ளவர்.

அக்கரைப்பற்று மாவடிச் சந்தியைச் சேர்ந்த மர்ஹூம்களான ஏ.எல்.எம். அப்துல் கரீம், எஸ்.ரி. றாஹிலா உம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வர்களில் ஒருவரான இவர் பயிற்றப்பட்ட ஆசிரியை M.A. கதீஜா உம்மா (றுக்கியா) அவர்களைத் துணைவியாகக் கொண்டு பாத்திமா றஸ்கா ஆஸ்மி, பாத்திமா ஜஸ்மி, அகமட் இ்.திஷாம், பாத்திமா நிஷ்மி ஆகிய குழந்தைகளுக்குத் தந்தையுமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவர் ஊடகத்துறைக்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவையைப் பாராட்டி, அகில இலங்கை எம். எச். எம். அஷ்ரஃப் ஞாபகார்த்த மன்றம் இன்று இவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி, விருது, சான்றிதழ் முதலியன வழங்கி கௌரவிக்கின்றது.

**MB. அஹமட் ஹாறூன்,**
*B.A (Hons), Dip.in. English,*
**73, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று - 05.**
T.P. **067 - 77168**

முகையதீன் வாவா, முஹம்மது பாத்தும்மா தம்பதிகளின் ஏக புத்திரராக 1970ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் பிறந்தவர் அஹமட் ஹாறூன்.

இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று அல்- முனவ்வறா வித்தியாலயத்திலும் இடைநிலை, இரண்டாம் நிலைக் கல்வியினை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யிலும் கற்று 1991ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றினார். அதன் பெறுபேறுகளின் படி 1994ஆம் ஆண்டு திருகோணமலை இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிக்கு 'ஆங்கிலத்தில் டிப்ளோமா' (Diploma - in - English) கற்கை நெறியினை பயில்வதற்காக அனுமதிக்கப்பட்டார். பல்வேறு அசௌகரியங்களின் நிமிர்த்தம் அங்கிருந்து புத்தளை(Buttala) இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கு தனது கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தார்.

பின்னர் இவர் 1997ஆம் ஆண்டு இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினைத் தொடர்வதற்காக தெரிவு செய்யப்பட்டு சமூக விஞ்ஞான மொழிகள் பீடத்தில் அனுமதிக்கப்பட்டார். இவர் தனது பட்டப்படிப்பிற்காக தமிழ் மொழியினைப் பிரதான பாடமாகவும் ஜப்பானிய மொழியினை உப பாடமாகவும் பயின்று இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவில் (second Class Lower Division) சித்திபெற்ற மொழியியற் கலைப்பட்டதாரியாவார். தன்னுடைய பல்கலைக்கழகக் காலத்தில் தான் கற்ற மும்மொழிகளுக்கு மேலாக சிங்கள மொழித் திறனையும் ஓரளவு வளர்த்துக் கொண்டார்.

சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் 1988 முதல் தே.இ.சே. மன்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அக்கரைப்பற்று ''ஜோய்ஸ்'' இளைஞர் கழகத்தில் இணைந்து அதில் பல்வேறு பதவிகளையும் வகித்து சுமார் 08 ஆண்டுகள் இளைஞர் அபிவிருத்திக்கு மட்டுமன்றி சமூக சேவைக்காகவும் தன்னை அர்ப்பணித்தார். அதற்காக இவருக்கு உறுதுணையாக இருந்தவர் இளைஞர் சேவை அதிகாரி ஜனாப் A.G.A. கபூர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் ''அல்றாஜ்'' சனசமூக நிலையம், ''வின்னர்'' கழகம், கிழக்கிலங்கை மாணவர் அமைப்பு, ''றொலக்ஸ்'' விளையாட்டுக் கழகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், அம்பாறை மாவட்ட கரையோரப் பத்திரிகையாளர் சங்கம், அக்கரைப்பற்று சமாதான அமைப்பு, புதுப்பள்ளிவாயல் திருமிதிக் குழு ஆகியவற்றின் உறுப்பினருமாவார்.

இளமையிலிருந்தே பத்திரிகைக்கு எழுதவேண்டும், ஒரு பத்திரிகையாளராக வரவேண்டும் என்ற பேராசை இவருக்கு இருந்தபோதும்கூட அது கைகூடும் என்று நினைக்கவில்லை. இந்நிலையில் 1995 செப்டம்பர் மாதம் 24ம் திகதி சூடாமணி பத்திரிகையில் வெளியான ''என் சுவாசம்'' என்ற கவிதை மூலம் இவர் எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைத்தார். அதனைத் தொடர்ந்து 1999.01.01இல் வீரகேசரி பத்திரிகையின் பிரதேச நிருபராக நியமனம் பெற்றார். பின்னர் தினக்கதிர், இடி, நவமணி ஆகியவற்றின் பிரதேச செய்தியாளராகவும் (உத்தியோகப் பற்றற்ற) கடமையாற்றி வருகிறார்.

அண்மையில் கருங்கொடித்தீவு -ஆலையடிவேம்பு (அக்கரைப்பற்று) எல்லைப் பிரச்சினை, அக்கரைப்பற்று ஜூம்ஆ முறையில் ஏற்பட்ட திடீர் பிணக்கு ஆகியவை தொடர்பான இரு கட்டுரைகளை எழுதியதன் மூலம் அனேகரது பாராட்டினையும் பெற்றுக் கொண்டார். சமூக, சமய, அரசியல் விடயங்களில் அதிக நாட்டங்கொண்ட இவர் அண்மைக்காலமாக இவற்றிலிருந்து சற்றுவிலகி வித்தியாசமாக எழுதவேண்டும் என்ற நோக்கில் தற்போது 'தாஜ்மஹால்', 'அனிச்சம்,' 'காதல்' ஆகியன பற்றிய ஆய்வுகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

பட்டம் பெற்று இருவருடங்கள் தாண்டியும்கூட பட்டதாரி நியமனம் கிடைக்காததால் இவர் தற்போது ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அல் ஹாஜ் பகுர்த்தீன் JP

**பட்டினப் பள்ளி வீதி,**
**அக்கரைப்பற்று- 04.**

எஸ். ஏ.எம் அபூபக்கர் - ஹலீமா நாச்சி தம்பதிகளின் புதல்வராக 1949ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் பிறந்தவர் அல்-ஹாஜ் பகுர்தீன்.

தனது ஆரம்பக் கல்வியினை அல்-முனவ்வறா வித்தியாலயம், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்தியகல்லூரி (தேசிய பாடசாலை) என்பவற்றிலும், உயர் கல்வியினை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியிலும் கற்றார்.

1968ஆம் ஆண்டு பத்திரிகைத் துறையில் தன்னை இணைத்துக் கொண்ட இவர் சுயாதீன பத்திரகை சமாஜத்தின் தினபதி, சிந்தாமணி, தந்தி ஆகிய தமிழ் பத்திரிகைகளினதும் வீக்எண்ட் (Weekend), சன் (Sun) போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளினதும் பிரதேச நிருபராகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாகாண நிருபராகவும் கடமையாற்றினார். 1979ஆம் ஆண்டுகளில் இலங்கையின் செய்தி நிறுவனமான ''லங்கா புவத்''தின் அம்பாரை மாவட்ட நிருபராகவும் பணி புரிந்துள்ளாா.

தற்போது தினகரன், டெய்லிநியூஸ், நவமணி ஆகிய பத்திரிகைகளினதும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினதும் பிரதேசச் செய்தியாளராகக் கடமை புரிந்து வரும் இவர் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் தொழில் வாய்ப்பு பெற்று வெளிநாடு சென்றுள்ளார்.


சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு பல்வேறு கட்டுரைகளைத் தொடராக எழுதி சாதனை படைத்ததுடன் பலரது பாரட்டையும் பெற்ற இவர் செய்தித்துறைக்கான புகைப்படம் எடுப்பதில் நன்கு தேர்ச்சி பெற்றவர். 1981 - 1982 காலப்பகுதியில் இவர் சவுதி அரேபியாவில் இருந்த போது பல்வேறு விளையாட்டுச் செய்திகளையும் அங்கிருந்து அனுப்பிக் கொண்டிருந்தார். அம்பாறை மாவட்ட கரையோரச் செய்தியாளர் சங்க அங்கத்தவரான இவர் சமூக சேவையில் அதிக அக்கறை கொண்டு பல்வேறு சமூக சேவை அமைப்புக்களில் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.

''திகாமடுல்ல சிங்கள பௌத்த சங்விதானய'' என்ற அமைப்பு 1995ஆம் ஆண்டு இவருக்கு 'கலாசூரி' பட்டத்தினையும் அதே ஆண்டில் தேசிய கலைஞர் பேரவை 'செய்திச் சிமிழ்' பட்டத்தினையும் 1999இல் ஹிக்மா தொழில் நுட்ப நிறுவனம் 'சமூக நேயன்' பட்டத்தினையும் வழங்கி கௌரவித்ததுடன் 1997ஆம் ஆண்டு தென்கிழக்கு ஆய்வமையத்தினால் கல்முனை சாஹிரா கல்லூரியில் நடாத்தப்பட்ட பாராட்டுவிழாவில் தபால் தந்தி வெகுசன தொடர்பு முன்னாள் பிரதி அமைச்சர் கௌரவ எம்.எல் ஏ. எம். ஹிஸ்புல்லாவினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் அம்பாரை மாவட்ட கரையோர பத்திரிகையாளர் சங்க அனுசரனையுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தகவல் திணைக்களத்துடன் இணைந்து அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடாத்திய பயிற்சிப் பட்டறையின் போதும் கௌரவிக்கப்பட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஆரம்பகால உறுப்பினரான இவர் அம்பாரை மாவட்ட கரையோர பத்திரிகையாளர் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரான இவர் அதன் தலைவராகவும் இருந்த சிறந்த சேவையாற்றியுள்ளார்.

ஒய்வு பெற்ற சிரேஷ்ட பத்திரிகையாளர் எம். எ. எம். ஹசன் அவர்களின் சகோதரரான இவர் எம். எஸ் சித்தி சல்மாவை மணம் புரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏ.எல். ஜுனைடீன்

**43, ஜீ. எம்.எம்.எஸ் வீதி,**
**சாய்ந்தமருது.**

கல்முனைப் பிரதேசத்தில் செய்தியாளராக விளங்கும் இவர் 1954.03.08ம் திகதி அஹமட் லெப்பை - சப்ரா தம்பதிகளின் மகனாகப் பிறந்தார். சாய்ந்தமருது அல் -ஹிலால் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த இவர் பின்னர் கல்முனை ஸாஹிரா, சம்மாந்துறை மு. மத்திய கல்லூரி, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் உயர் கல்வியைத் தொடர்ந்தார்.

ஜுனைடீன் பற்றிய குணநல இயல்புகளைக் கூறுவதென்றால் எப்போதும் அமைதியான சுபாவத்துடன் தனது காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்து செயற்படுபவராகவும் மற்றவரை நேசித்து உபசரித்து மகிழ்வதில் தேர்ச்சி பெற்ற விற்பன்னராகவும் காணப்படுகின்றார்.

இவரது எழுத்தாற்றலையும் செய்தித்துறையில் ஈடுபடுவதற்கான ஆற்றலையும் பற்றி கேட்டபோது, ''எனது தந்தை எனது இளமைப்பருவத்தில் இந்தியாவில் இருந்து வெளிவரும் 'முஸ்லிம் முரசு', 'தாறுல் இஸ்லாம்', 'றஹ்மத்' போன்ற பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வாங்கிப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தவர்.

''தந்தை படித்துவிட்டு வைத்திருக்கும் பத்திரிகைகளை நான் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கியதன் விளைவு என்னையும் ஒரு எழுத்தாளனாக மாற்ற உதவியது.'' என்று கூறினார்.


ஆரம்பத்தில் சிறிய கவிதைகளையும் துணுக்குகளையும் எழுதத் தொடங்கிய இவர் காலப்போக்கில் விமர்சனக் கட்டுரைகளையும் எழுதத் தொடங்கியதன் விளைவு மறைந்த பிரபல பத்திராதிபரும், ஆசிரியருமான எஸ்.டி. சிவநாயகத்தின் பால் கவரப்பட்டதன் காரணமாக 1979ம் ஆண்டு காலப்பகுதியில் தினபதி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் சாய்ந்தமருதுக்கான நிருபராக நியமனம் பெற்றதுடன் சில காலத்தின் பின்னர் கல்முனை நிருபராகவும் பணியாற்றினார். இவர் 1993ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வீரகேசரியின் கல்முனை நிருபராக செயற்பட்டு வருகின்றார்.

இவர் தினபதியில் நிருபராகப் பணியாற்றிய காலத்தில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தமிழ் ஆண்டு 05 பாடப்புத்தகத்தில் முஹம்மது நபி (ஸல்) அவர்களைக் குறிக்கும் படமொன்றை 1987ம் ஆண்டு ஜனவரியிலும் அதே ஆண்டு ஜுன் மாதத்திலும் இரண்டு முறை பிரசுரித்து முஸ்லிம் சமய உணர்வுகளைப் புண்படுத்தியது. இது சம்பந்தமான செய்திகளை தினபதியில் எழுதி கொழும்பிலுள்ள முஸ்லிம் இயக்கங்கள் போராட்டம் நடத்தவும், முஸ்லிம் எம்பிக்கள் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பவும் வழி வகுத்தார்.

இது சம்பந்தமாக தினபதியின் ஆசிரியர் எஸ்.டீ. சிவநாயகம் 1987 ஜுன் 15, 20ம் திகதிகளில் காரசாரமான முறையில் ஆசிரியர் தலையங்கங்களை எழுதி பிரச்சினையைப் பெரிது படுத்தியதன் விளைவாக மேற்படி படத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் புத்தகங்களும் தடைசெய்யப்பட்டுடன் முஸ்லிம் சமுதாயத்திடம் மன்னிப்பும் கேட்கப்பட்டது. இவ்வாறான சமய, தேசிய, சமூகப் பிரச்சினைகளைத் தனது பேனா முனை மூலம் தட்டிக்கேட்ட ஜுனைடீனின் மற்றுமொரு பணி இங்கு குறிப்பிடத்தக்கது.

1974ம் ஆண்டு காலகட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் இரவு 8.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை ஒலிபரப்பாகும் முஸ்லிம் நிகழ்ச்சிகளை ரமழான் மாதத்தில் மட்டும் இரவு 7.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை ஒலிபரப்ப வேண்டும் என 1974ம் ஆண்டு கல்முனை நாசர் சமூக சேவை இயக்கத்தின் ஊடாக நேயர் கடிதம் மூலம் இவர் வழங்கிய ஆலோசனைகளை அங்கிருந்த முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் வீ.ஏ. கபூர் ஏற்றுக்கொண்டு இவரது ஆலோசனைக்கு வானொலியிலே பாராட்டுத் தெரிவித்ததுடன் இந்நிகழ்ச்சியை இன்று வரை ஒலிபரப்பு வதற்கும் காலாய் அமைந்தது. இது தவிர இவரது செய்தியொன்றினைக் கண்ணுற்ற முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் இவரது எழுத்து வன்மையைக் கௌரவித்து மக்கள் வங்கியில் லிகிதர் நியமனம் ஒன்றையும் பெற்றுக்கொடுத்தார். 1981ம் ஆண்டு வங்கித் தொழிலைப் பெற்ற இவர் இரண்டு தசாப்தங்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எம்.ஏ.ஸீ. நஜீமைவைக் கரம்பற்றிய இவர் செல்லும் சமூகப் பாணியும் எழுத்துப் பாணியும் மேலோங்குமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இராசையா சிறீவேல்ராஜா**

**இல. 37, வட்டவிதானை வீதி,**
**கல்முனை - 02.**


| | | |
|---|---|---|
| **புனைபெயர்** | :- | கல்முனை ஸ்ரீ |
| **பிறந்த திகதி** | :- | 1958.02.20 |
| **இடம்** | :- | மட்டக்களப்பு |
| **தொலைபேசி** | :- | 067-20585 |
| **பெக்ஸ்** | :- | 067-29765 |
| **தொழில்** | :- | வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர். |
| **செய்தித்துறை பங்களிப்பு** | :- | 10 வருடத்திற்கு மேலாக ''திவயின'' சிங்கள தினசரியின் கல்முனை நிருபராக கடமையாற்றி |

வரும் இவர் எம்.டி.வி. நிறுவனத்தின் 'சிரச', 'சக்தி' செய்தியாளரும் ஆவார். தினக்குரல் செய்தித்தாள் ஆரம்பித்த காலத்திலிருந்தே கல்முனை நிருபராக செயல்படுவதுடன் ''கல்முனை ஸ்ரீ'' எனும் பெயரில் கட்டுரைகள் பல வற்றையும் எழுதி அனேகரது பாராட்டுதலைப் பெற்றுள்ளார். சிங்கள பத்திரிகையில் வரும் முக்கிய கட்டுரைகளை தமிழுக்கு மொழியாக்கம் செய்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஒரு பத்திரிகையாளர் இவர் என்றால் அது மிகையாகாது.

இவருக்கு அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தினால் 20.06.1999ம் ஆண்டு ''நடுநிலை பத்திரிகையாளர்'' என மர்ஹூம் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களால் கௌரவித்து, பாராட்டி, பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. 2001ம் ஆண்டு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தினாலும் கௌரவித்து பொன்னாடை போர்த்தி பாராட்டப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் அவரது பத்திரிகை துறை பிரவேசம் பற்றி கூறுகையில், ''நான் பத்திரிகைத் துறைக்குள் புகுந்தமை இதற்காக நான் இரண்டு ஊடகவியலாளர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். அவர்களுள் ஒருவர் ஏ.எல். ஜுனைதீன் (கல்முனை வீரகேசரி நிருபர்) என்னை பத்திரிகைத் துறைக்கு, விஷேடமாக சிங்கள பத்திரிகை துறையின்பால் கவனத்தை ஈர்க்க வைத்தவர். மற்றவர் ஏ.எல்.எம். சலீம் (தினக்குரல் பத்திரிகையின் அம்பாறை மாவட்ட செய்தியாளர்). இவர் என்னை தமிழ் பத்திரிகைத் துறைக்கு அறிமுகம் செய்தவர். இவர்களை நான் என்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யூ.கே.சம்சுதீன்,**
**பத்திரிகையாளர்,**
**கல்முனைக்குடி.**

இற்றைக்கு நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையான தற்போதைய அல் - அஸ்கர் வித்தியாலயத்தில் அந்த மாபெரும் தலைவர் முகம்மது ஹுசைன் முகம்மது அஸ்ரபும் நானும் ஆரம்பக் கல்வியை கற்றோம். காலம் உருண்டோடியது. ஆரம்பக் கல்வியை கற்ற நாங்கள் உயர் கல்வியை பெறுவதற்காக கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலைக்குச் சென்றோம்.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் அந்த மறைந்த மாபெரும் தலைவர் அவர்கள் பாடசாலையின் புறக்கிருத்திய வேலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பாடசாலையின் முதலுதவிப்படை, சாரணியம் ஆகியவற்றில் தலைமைப் பதவிகளை வகித்தார்.

கல்முனை உவெஸலி உயர்தரப்பாடசாலையின் வரலாற்றில் பாடசாலை பாராளுமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒனறே ஆகும். கலை எழுச்சிக் கட்சியின் சார்பில் மறைந்த மாபெரும் தலைவரின் தலைமையில் தேர்தலில் போட்டியிடடு மாணவர் ஐககிய முன்னணியைத் தோற்கடித்து பாடசாலைப் பாராளுமன்றத்தை அமைத்தோம். கலை எழுச்சிக் கட்சியின் சார்பில் அந்த பாராளுமன்றத்தில் பிரதமராக மறைந்த எனது மதிப்புக்குரிய தலைவர் அஸ்ர.்ப் அவர்கள் இருந்த போது அவரது அமைச்சரவையில் நான் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தேன். அந்நிகழ்வு இன்னும் என் நினைவில் பசுமை நிறைந்த நினைவுகளாய் நிழலாடிக் கொண்டே இருக்கின்றது.

**யூ.கே. சம்சுதீன்**
**புத்திரிகையாளரும்,**
**முன்னாள் பிரதேச சபை ஊறுப்பினரும்,**
**கல்முனைக்குடி ஜும்ஆ பள்ளிவாசல் தலைவரும்,**
**கல்முனைக் குடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏ. எம். அலிக்கான்

**400பீ, மாவடி வீதி,**
**சாய்ந்தமருது**
**தொலைபேசி : 067- 20220**

கல்முனை சாஹிறா தேசிய பாடசாலையின் வரலாறு எழுதப்படுகின்றபோது முன்னாள் கிராம சபை உறுப்பினரான ஐ. அலியாரின் பெயரும் எழுதப்படவேண்டும். இக்கல்லூரியை ஆரம்பிப்பதற்காக இவர் ஆற்றியிருக்கும் பணிகளும், பங்களிப்பும் அளப்பெரியதாகும். அவ்வாறு பொதுச் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உழைத்த ஒருவருக்கு மகனாகப் பிறந்தவர்தான் அலியார் முகம்மது அலிக்கானாகும்.


சாய்ந்தமருதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், அல்- ஜலால் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், கல்முனை சாஹிறா தேசிய பாடசாலை, சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி, பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி) ஆகியவற்றில் உயர் கல்வியையும் கற்றவராவார். இலக்கியத்துறைக்கு கவிதையின் மூலமே பலர் காலடி எடுத்து வைத்துள்ளனர். அதைப் போலவே 1973ம் ஆண்டு ''தொழிலால் வெல்வோம்'' என்ற கவிதை மூலமாக அறிமுகமான இவர், நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார். சிறுகதை, கட்டுரை, விமர்சனம் மற்றும் வானொலிப் பேச்சு ஆகியவற்றிலும் ஈடுபட்டு வருகின்றார். அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டிகள் நான்கில் பரிசில்களை வென்றுள்ளார்.

செய்தித் துறையிலும் தனது திறமையை காட்டி வரும் இவர் லேக்கவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையில் கல்முனை மத்திய விசேட நிருபராக பணி புரிந்து வருகின்றார். குறுகிய காலத்திற்குள் கூடிய செய்திகளை மிக விரைவாகவும், விவேகமாகவும் எழுதிப் பலரது பாராட்டையும் பெற்றவராவார். அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர்கள் சங்கத்தினால் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்பிரதேசத்திலே உள்ள பொது ஸ்தாபனங்களில் இடம் பெறுகின்ற ஊழல், மோசடி மற்றும் கபளீரங்களையெல்லாம் வெளிக்கொணர்ந்து பல்வேறு மாற்றங்களையும், புரட்சியையும் ஏற்படுத்தியவர். 1998ம் ஆண்டு நடந்து முடிந்த க.பொ.த. உயர்தர பரீட்சையில் இடம் பெற்ற மோசடி தொடர்பாக 13 செய்திகளை எழுதி மாணவர்களினதும், பெற்றோர்களினதும் பாராட்டைப் பெற்றவர். கடற்றொழிலாளர்களின் உடமைகள் வெளிநாட்டவர்களால் திருடப்படுவது தொடர்பாக முதன் முதலில் செய்தி எழுதியவர் இவர்.

சமூக சேவையில் மிக்க ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் இவர் ''சிற்பிகள்'' இலக்கிய வட்டத்தின் தலைவராகவும், கல்முனை எழுத்தாளர் சங்கம், கல்முனை கலை, இலக்கிய, கலாசார பேரவை ஆகியவற்றின் செயலாளராகவும், கல்முனை புத்தி ஜீவிகள் அமையத்தின் போசகராகவும், தென்கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தொடர்பு சாதனத்துறைச் செயலாளராகவும், கெஸினான் விளையாட்டுக் கழகத்தின் முகாமையாளராகவும், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எம். ஐ. சம்சுதீன்

**100, வைத்தியசாலை வீதி,**
**சாய்ந்தமருது - 10.**
**தொ. இல: 067- 20216, 29132**

சாய்ந்தமருது பிரதேசத்தின் வரலாறு எழுதப்படுகின்ற போது தையற்கலையில் முதன்மை படைத்த ஒருவராக மர்ஹூம் எம். ஐ. எம். இஸ்மாயிலின் பெயரும் எழுதப்பட படவேண்டும். சாய்ந்தமருது பிரதேசத்தில் ஆரம்பகாலத்தில் தையற்கலையில் புகழ் படைத்து பொதுமக்களின் பாராட்டையும் பெற்றிருந்தார். அத்துடன் பல பொதுச் சேவையிலும், ஈடுபாடுடையவராகவும் திகழ்ந்த ஒருவருக்கு சிரஷ்டே புதல்வனாக பிறந்தவர்தான், ஜனாப். முகம்மது இஸ்மாயில் சம்சுதீன்.

சாய்ந்தமருதை பிறப்பிடமாகக் கொண்ட இவர் அல்- ஜலால் வித்தியாலயத்தில் தனது ஆரம்ப கல்வியையும், கல்முனை சாகிறா தேசிய பாடசாலை, சாம்மாந்துறை தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றிலும், கல்வி கற்றவர். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னனியின் சாய்ந்தமருது கிளைப் பொதுச்செயலாளராகவும், 1978 களிலிருந்து, செயலாற்றி வருவதுடன் கால்பந்து, கிரிக்கட், போன்ற பல விளையாட்டுத்துறைகளிலும், முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்.

1982ம் ஆண்டிலிருந்து ‘லேக்ஹவுஸ்’ நிறுவனத்தின் ‘தினகரன்’ பத்திரிகையில், கல்முனை நிருபராகப் பணி புரிந்து செய்தித்துறையில் பல திறமைகளைக் காட்டியுள்ளதுடன் 1985ம் ஆண்டு கல்முனை பொதுநூலகத்திறப்பு விழாவிற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் வெளிநாட்டமைச்சர், மர்ஹூம் அல்ஹாஜ். ஏ. சி. எஸ். ஹமிட் அவர்கள் நூலகத் திறப்பு விழாவின் போது ஆற்றிய உரையினை தினகரன் முன்பக்க முதல் செய்தியாகப் பிரசுரிக்க வைத்து, அமைச்சரின் நன்மதிப்பினையும், பாராட்டையும் பெற்றதுடன், பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றவர். பத்திரிகைத்துறையில் சாதனைகள் பல புரிந்துள்ளார், முன்னாள், இந்நாள் தகவல்தொடர்பு சாதன அமைச்சர்களின் பாராட்டையும், நற்சான்றிதழ்களையும் பெற்றுள்ளதுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் புனர்வாழ்வு, புனரமைப்பு, துறைமுகங்கள் கப்பல்துறை, அமைச்சருமான மர்ஹூம் அல்ஹாஜ். எம். எச். எம். அஷ்ர.்.ப் அவர்களின் பல்வேறு செய்திகளையும் ஆக்கங்களையும் புகைப்படங்களையும் பத்திரிகையில் பிரசுரித்ததுடன் அன்னாரின் நன் மதிப்பையும், சான்றிதழ்களையும், பாராட்டையும் பெற்றுள்ளதுடன், அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தினாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பதோடு இவர் ஒரு சிறந்த புகைப் படப்பிடிப்பாளருமாவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1994ம் ஆண்டிலிருந்து இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திலும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும், இணைந்து பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி சம்பந்தமான செய்திகளை வெளிவரச் செய்ததன் மூலம், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்களினதும் பாரட்டையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மருதமுனை சம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தின் ஆண்டு - 5 மாணவர்கள் தரையிலிருந்து பரீட்சை எழுதியதை படமெடுத்து தினகரன் பத்திரிகையின் முன்பக்க செய்தியாகப் பிரசுரித்து அதன் மூலம் அப்பாடசாலை மாணவர்களுக்கு கதிரை, மேசைகள் கல்வியமைச்சினால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் அதிபரின் பாரட்டையும் பெற்றுள்ளார்.

கல்முனை நகர சபை பிரதேசத்திலுள்ள பொது ஸ்தாபனங்களில் இடம் பெறுகின்ற ஊழல், மோசடிகளை இனங்கண்டு மற்றும் கபளீக்கரங்களையெல்லாம் வெளிக்கொணர்ந்து பல்வேறு மாற்றங்களையும் ஏற்படுத்தியவர். சமுகசேவையில் மிக்க ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் இவர் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றிவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முழுப்பெயர் : சாலித்தம்பி றஊப்**
**(சக்தியின் சக்தி)**

**முகவரி : புதுப்பள்ளியடி,**
**அக்கரைப்பற்று - 05.**

بسم الله الرحمن الرحيم

அக்கரைப்பற்று - 06 புதுப்பள்ளியடியைச் சேர்ந்த சாலித்தம்பி - சுபைதா உம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரான ஜானாப் றஊப் அவர்கள் 1975.03.02 ல் இம் மண்ணில் பிறந்தார். இவர் தனது இளம் பருவத்திலேயே மிகவும் துடிதுடிப்புடையவராகவும், எழுத்தற்றல், பேச்சுத் திறன், இனிமையான குரல் வளமுள்ளவராகவும் விளங்கினார்

1981ம் ஆண்டு இவர் தனது ஆரம்பக் கல்வியை கமு/ அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையிலும் அதனைத் தொடர்ந்து உயர் கல்வியை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) கற்றார்.

இவர் தனது பள்ளிப் பருவத்தில் கலை இலக்கியத்துறைகளில் மிகவும் ஆர்வத்துடனும், பிரியத்துடனும் பங்குபற்றி பல்வேறு சிறப்பு விருகளையும் பெற்றுள்ளார். பாடசாலைக் காலத்தில் விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் கலை, கலாசார விழாக்களையும் தொகுத்து வழங்கியதுடன் தனது பிரதேசத்தில் பரீட்சார்த்த ஒலி, ஒளி அலைவரிசைகளையும் ஏற்படுத்தி ஒலி, ஒளி துறைகளில் சிறந்து விளங்கினார்.

தனது கலை ஆர்வத்தின் காரணமாக தேசிய ரீதியில் காலடி எடுத்து வைக்கும் முகமாக 1996 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து அதில் தேசிய, வர்த்தக, முஸ்லிம் சேவை, பலாலி - யாழ்சேவை என்பனவற்றில் பகுதி நேர அறிவிப்பாளராகக் கடமையாற்றினார்.

ஒலிபரப்புத் துறையில் முழுமையாக ஈடுபட்டதன் காரணமாக நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் வானொலி நேயர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டவராக திகழ்கின்றார்.

தனது கலைப்பயணத்தில் தனக்கென ஒரு தனி இடத்தினைப் பதிப்பதற்காக கட்டுப்பாடுகளுக்கு அப்பால் சென்று சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்ற நோக்கில் 1998 இல் தனியார் துறை வானொலியான சூரியன் FM (பண்பலைவரிசை) இல் தன்னை இணைத்துக் கொண்டு தனது கலைப்பயணத்தில் சுதந்திரமாகப் பறந்து சூரியன் FM ல் நேற்றயக் காற்று மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை பிரமாதமாகப் படைத்து தனக்கும் சூரியனுக்கும் தேசிய ரீதியில் பெருமை தேடித்தந்தவராவார்.

தனது பரினாம வளர்ச்சியில் மற்றுமொரு கட்டமாக சக்தி FM இல் இணைந்து சிறந்த செய்தி வாசிப்பாளராகவும் வணக்கம் தாயகம் இதயராகம் முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் தயாரித்தளித்து தமிழ் பேசும் நேயர்களை சக்தியுடன் இணைத்த பெருமையும் இவரையே சாரும். **இன்று சக்தி என்றால் றஊப் றஊப் என்றால் சக்தி என்னும் அளவுக்கு சக்தியின் சக்தியாக** உயர்ந்து நிற்கின்றார். அவர் தனது முயற்சியினை முன்னெடுத்துச் சென்று வெற்றி பெற வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எஸ் ரபீக் (அறிவிப்பாளர்)**
**பள்ளிக்குடியிருப்பு**
**அக்கரைப்பற்று.**

1970.10.20 இல் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் பிறந்தவர் எஸ். ரபீக் அவர்கள் தனது ஆரம்பகல்வியை பள்ளிக்குடியிருப்பு பாயிஷா மகாவித்தியாலத்திலும் இடைநிலை இரண்டாம் நிலை கல்வியினை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்தியக்கல்லூரி (தேசியப்பாடசாலை)யிலும் பயின்று 1995/96 ஆண்டு கல்வியாண்டில் பஸ்துன்ரட்ட ஆங்கிலக்கல்விக்கல்லூரிக்கு ஆங்கில ஆசிரியர் கற்கை நெறியினை பயில்வதற்காக தெரிவு செய்யப்பட்டார்.

இளமையிலிருந்தே ஓர் அறிவிப்பாளராக வரவேண்டும் என்ற பேரவா இவர் மனதில் தோன்றியது. இதனால் அறிவிப்புத்துறையில் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்திக்கொள்ளும் நோக்குடன் உள்ளூரில் நடைபெற்ற சிறிய சிறிய விழாக்களிலும் வைபவங்களிலும் அறிவிப்புச்செய்வதில் ஈடுபட்டு வந்தார் அத்துடன் தனக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அறிவிப்புப்பயிற்சி பெறுவதே பொழுது போக்காகக் கொண்டிருந்தார். பொதுவாக எதிர்காலத்தில் நான் சிறந்த அறிவிப்பாளராக வரவேண்டும் என்பதற்குறிய ஏற்பாடுகளையும் பயிற்சிகளையும் இளமையில் இருந்தே திட்டமிட்டு மேற்கொண்டு வந்தார்.

கா.பொ.தா. உயர்தரத்தில் கல்விகற்றுக்கொண்டிருந்த போது பாடசாலை காலை ஆராதனைக்கூட்டத்தில் மாணவர் செய்தி வாசிப்பாளாராக தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர் இளமையிலேயே சகமாணவர்களினதும், ஆசிரியர்களினதும் மிகுந்த பாராட்டையும் பெற்றுக்கொண்டார். அதன் ஆர்வத்தால் 1989ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய அறிவிப்பாளர் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டார். இவ்வாறான நிகழ்வுகள் இவரது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உந்துதலாகவும் உறுதுணையாகவும் அமைந்தன.

1993ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை அறிவிப்பாளாராக நியமனம் பெற்றார். தற்போது ''தென்றல்'' என்று பெயர்மாற்றம் பெற்றுள்ள இலங்கை வானொலி வர்த்தகசேவையின் புகழ்பெற்ற அறிவிப்பாளர்களில் ஒருவராக திகழ்கின்றார். விளம்பர நிகழ்ச்சிகளை சிறப்புற தொகுத்துவழங்கும் இவர் அண்மைக்காலமாக வசந்தஉலா, வர்த்தகஉலா என்பவற்றை பல்வேறு ஊர்களிலும் நடாத்தி தென்றல் சேவைக்கு புகழினை ஈட்டிக்கொடுத்ததுடன் பல்லாயிரக் கணக்கான நேயர்களின் பாராட்டினையும் பெற்றவர்.

இலக்கியத்துறையில் அதீதஈடுபாடு கொண்ட இவர் பல்வேறு பத்திரிகைகளுக்கும் அனேக கவிதைகளையும் எழுதியுள்ளார். இவர் ஒரு தசாப்பத்தத்துக்கு முன்னர் ''அவளில்லாத குடியிருப்பு'' எனும் கவிதை நூலை எழுதி வெளியிட்டார். இதனூடாக பல்லாயிரம் இலக்கிய ரசிகர்களின் பாராட்டையும் பெற்றுக்கொண்டார். அறிவிப்புத்துறையில் புகழ் பெறவேண்டும் என்றே முழுமூச்சுடன் செயல்படும் இவர் இத்துறையில் உயர்வு பெற எமது மன்றம் வாழ்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர்**
**அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்கள்,**
**தலைமைச் செயலகத்திலிருந்து விடுக்கும் வினயமான**
**வேண்டுகோளும்,**
**நினைவுச் செய்தியும்.**

**முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளே!**

**பொதுமக்களே!!**

**கட்சியின் அபிமானிகளே!!!**

**கட்சி அங்கத்தவர்களே!!!!**

**கட்சி உயர்பீட உறுப்பினர்களே!!!!!**

**கட்சியின் அமைப்பாளர்களே!!!!!!!**

கட்சியின் தேசியத் தலைவராக இருந்து இறையடி சேர்ந்து விட்டாலும் எங்களின் உள்ளங்களிலே என்றும் நீங்காத நினைவாக இருக்கும் மாமனிதரும் அரசியல் ஞானியுமான மர்ஹூம் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களின் ஒரு வருட பூர்த்தி நினைவுதினம் எதிர்வரும் 16ம் திகதியாகும்.

அன்றைய தினத்தில்
ஆர்ப்பாட்டம், ஆடம்பரம் எதுவுமின்றி நிகழ்வுகளை கொண்டாட்டங்களாக ஆக்கிக் கொள்ளாமல் அனைவரும் அவரை நினைவுகூர்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

இதன் நிமித்தம்-
கட்சியின் பிரமுகர்களும், போராளிகளும், அமைப்பாளர்களும் ஒன்றிணைந்து அகில இலங்கை ரீதியாக, கிராமம் கிராமமாக பள்ளிவாசல்களில் குர்ஆன் ஓதி அவர் சாந்திக்காக தமாம் செய்யுங்கள்.

ஏழைகளுக்கு அன்னதானம் அளியுங்கள்.
ஏழைச் சிறுவர்களுக்கும் அகதிகளுக்கும், உணவும் உடுமானமும் கொடுத்துதவுங்கள் முடியுமானவர்கள் நோன்பிருங்கள்.

முகவரியில்லாதிருந்த எமது சமூகத்திற்கு முகவரி தேடித்தந்த அந்த நல்ல மனிதரை உயிருள்ள வரை நேசியுங்கள்.

அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தியுங்கள்.
இதனை நான் உங்களிடம் வினயமான வேண்டுகோளாக்க விரும்புகின்றேன்.

- நன்றி -

**அல்ஹாஜ் றஊப் ஹக்கீம்,**
**முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# QUEEN'S COMPLEX

- KING JEWELLERS
- HOME NEEDS GROCERIES




**Main Street,**
**Sainthamaruthu - 09.**
*Dial: 067-29210*
*Tele/Fax: 067-29265*
*Resi: 067-22690*

# SUBAIR RICE MILL

**220, Main Street, Periya Neelavanai, Maruthamunai**

"தலைவரின் நினைவுகள் என்றும்
எம் உள்ளத்தில் நிலைத்து நிற்கட்டும்"

எம்மிடம் துப்பரவாக்கப்பட்ட சம்பா அரிசி மற்றும் அரிசி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

## சுபையிர் அரிசி ஆலை

**220, பிரதான வீதி,**
**பெரிய நீலாவணை,**
**மருதமுனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முழுப்பெயர் :- பீர் முஹம்மது முகைதீன் அப்துல் காதர்.**
**முகவரி :- 184, மஸ்ஜிதுல் அக்பர் வீதி,**
**மருதமுனை- 01**

بسم الله الرحمن الرحيم


| | | |
|---|---|---|
| **பிறந்த திகதியும் இடமும்** | :- | 1957-12-27 அநுராதபுரம் |
| **தொழில்** | :- | பண்டகசாலை உதவியாளர் (சதொச) |
| **செய்தித்துறைக்கான பங்களிப்பு** | :- | 1992 தொடக்கம் இன்று வரை |
| **கடமையாற்றும் ஊடகங்கள்** | :- | தினமணி, நவமணி, தினகரன் |
| **இணைந்த திகதி** | :- | தினமணி - 1997 ஜனவரி 01<br>நவமணி - 1999 ஜுன் 15<br>தினகரன் - 2000 ஜுன் 19 |
| **மேலதிக குறிப்பு** | :- | 1985 காலப்பகுதியில் இலக்கியத்துறையில் ஆர்வங்கொண்டு கவிதை, கட்டுரை, துணுக்குகள் என்பவற்றை பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் வானொலிக்கும் எழுதி வந்துள்ளார். |

அதை தொடர்ந்து பத்திரிகையாளராக வர வேண்டுமென்ற ஆர்வம் காரணமாக சிறு சிறு சம்பவங்களை தகவல்களாக பத்திரிகைகளுக்கு எழுதியும் வந்துள்ளார்.

1996 காலப்பகுதியில் பத்திரிகை வெளியான போது தொடர்ச்சியாக செய்திகளை எழுதினார். நிறையச் செய்திகளை எழுதுவதற்கு நவமணி பிரதம ஆசிரியர் அல்-ஹாஜ் எம்.பி.எம். அஸ்ஹர் களமமைத்துக் கொடுத்ததற்காக அவருக்கு என்றும் இவர் நன்றியுடையவராக இருக்கிறார்.

மறைந்த மாமேதை மர்ஹூம் எம்.எம்.எம் அஷ்ரஃப் அவர்களின் சிபாரிசின் பேரில் மருதமுனை தினகரன் நிருபருக்கான நியமனம் கிடைத்தது. இந் நியமனத்தை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கு புணர்வாழ்வு புணரமைப்பு அமைச்சின் முன்னாள் கிழக்கு மாகாண இணைப்பதிகாரி அல்ஹாஜ் எஸ்.எம் அப்துல்லா அவர்களும், அம்பாரை மாவட்ட கரையோரப் பிரதேச செய்தியாளர் சங்கத் தலைவரும், பத்திரிகையாளருமான மீரா.எஸ். இஸ்லதீன் BA அவர்களும் ஒத்துழைப்பு வழங்கினார்கள் இவர்களுக்கும் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் இவர் எதிர்காலத்தில் சிறந்த முழு நேரப் பத்திரிகையாளனாக இருந்து சமூக சேவையாற்ற முயற்சிப்பது பாராட்டிற்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எஸ் . சிறாஜுதீன் (ஆசிரியர்)**
**லாபிர் வித்தியாலய வீதி,**
**நற்பிட்டிமுனை,**
**கல்முனை.**

மகாவலி கங்கை சங்கமமாகும் தோப்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்திரிகையாளர் எஸ். சிறாஜுதீன் கல்முனை நகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனையில் திருமணம் செய்துள்ளார். தோப்பூர் அல் ஹம்றா மகாவித்தியாலயம், மூதூர் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு எழுதுவதை இளமையில் இருந்தே பொழுதுபோக்காகக் கொண்டவர். தோப்பூர் அல்-ஹம்றா வெளியீடான 'வாடாமலர்', மூதூர் மத்திய கல்லூரி வெளியீடான 'சுரபி' கையெழுத்துப் பத்திரிகைகளின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

1985இல் எழில் கொஞ்சும் மலையகத்தில் ஆசிரியராகக், கடமையேற்றதோடு இலக்கிய உலகுக்குள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். தினகரன் கல்வி உலகம் பகுதியில் வெளியான ''மனித வாழ்வுக்குக் கல்வி'' (கட்டுரை), ''கல்வியே மேன்மை தரும்'' என்ற கவிதை இவரது கன்னிப் படைப்பாகும்.

வானொலியில் கிராம சஞ்சிகை, இளைஞர் இதயம், இளைஞர் மன்றம் போன்றவற்றிலும் தனது இலக்கியப் பிரசவங்களை அனுப்பி ஒலிபரப்பப்பட்டதன் மூலம், வானொலியிலும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

1994இல் நடைபெற்ற தேர்தல் விஞ்ஞாபன யோசனை அகில இலங்கை ரீதியிலான தமிழ் மொழி மூலமான போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தை பெற்று ரூபா 10,000 பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார். 1997இல் அகில இலங்கை ரீதியில் கல்வி அமைச்சு நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்றார். இன்னும் தொகுதி, மாவட்டம், மாகாண ரீதியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் தட்டிக்கொண்டார். இவர் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள், கவிதைகள், கதைகள், வெகுசனத்தொடர்பு சாதனங்களில் பிரசுரமாகியும் ஒலிபரப்பாகியும் உள்ளன.

16.12.1999இல் நற்பிட்டிமுனை தினகரன் நிருபராக பதவியேற்ற இவர் மூத்த எழுத்தாளர்களுடன் இணைந்து, ஆலோசனைகளைப் பெற்று செயற்பட்டதனால் அம்பாரை மாவட்டத்தில் வாசகர்கள் மத்தியில் தனக்கென ஓரிடத்தை ஈட்டிக் கொண்டிருக்கிறார். இவரது எழுத்து பத்திரிகைக்கு ஆற்றும் பங்களிப்புக்காக 2000ஆம் ஆண்டு நற்பிட்டிமுனை அல் -அமீன் இளைஞர் கழகம் பொன்னாடை போர்த்தி, பொற்கிழியும் வழங்கி 'மருதூர் எஸ். சிராஜுதீன்' எனும் பட்டத்தையும் வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கல்முனை பிரதேச இளைஞர் கழக ஆலோசகராகவும், அம்பாரை மாவட்ட கரையோரச் செய்தியாளர் சங்க செயலாளராகவும், கல்முனை வை.எம்.சீ.ஏ. கிளையின் வெகுஜனத் தொடர்பு பொறுப்பாளராகவும் பதவி வகிக்கும் இவர் நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினை தீர்ந்து சமாதானப் புறா பறக்க வேண்டுமென்ற இதய வேட்கையையும் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எம்.ஐ. முஹம்மது ஆரிப்**
169 C, ஜாயா வீதி,
மருதமுனை.


சாந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.ஐ. முஹம்மது ஆரிப் அவர்கள் இலங்கையின் தலைசிறந்த பத்திரிகையாளர்களுள் ஒருவராவார். தமது இளமைக் காலத்திலிருந்து பத்திரிகைத் துறையிலும் இலக்கியத் துறையிலும் அதீத ஈடுபாடு கொண்டவர்.

இலங்கையின் பிரதான சிங்கள தேசிய பத்திரிகைகளான 'தினமின', 'லங்காதீப' ஆகியவற்றின் நிருபராகவும் , இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான கல்முனைப் பிராந்திய (சிங்கள) நிருபராகவும் கடமையாற்றி வருகிறார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்முனை சிங்கள மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியிலும் பயின்றுள்ளார். சிங்கள மொழியில் மிகவும் சிறந்த கட்டுரைகளையும் சிங்கள மன்னர்களின் வரலாற்றுச் சரித்திரங்களையும் வெளியிடுவதில் மிகவும் ஆர்வம் கொண்டவர். இவர் மருதமுனையைச் சேர்ந்த மர்ஹூம் செய்னுலாப்தீன் அதிபரின் கனிஷ்ட புதல்வியான பயிற்றப்பட்ட ஆசிரியை சித்தி நஜீபா அவர்களைத் திருமணம் செய்துள்ளார்.

தற்போது நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் கல்முனை டிப்போவில் சாலைப் பரிசோதகராகக் கடமையாற்றி வருவதுடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அங்கத்தவரும், ஸ்ரீ லங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர் சங்க கல்முனை டிப்போ செயலாளரும், மருதமுனை 5ஆம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளருமாவதோடு சிறந்த சமூக சேவையாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஏ. எஸ். எம். முஜாஹித்,**
**08, V.H. வீதி,**
**நற்பிட்டிமுனை,**
**கல்முனை.**
**T.P. 067-21780**


நற்பிட்டிமுனை பழைய விதானையார் வீதியில் வதியும் இவர் அப்துல் சத்தார் - ஆஷியா தம்பதியினரின் ஏக புத்திரராவார்.

1972.02.14ம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை கமு/கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரியில் ஆரம்பித்து க.பொ.த (உயர்தரம்) வரை பயின்று அக்கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவராக இருந்து வருகின்றார்.

1995ம் ஆண்டில் பொது எழுதுநர் சேவையில் இலிகிதராக இணைந்து, திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகத்தில் ஆரம்பப்பணியாற்றிய இவர், தற்போது நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் சமூர்த்திப்பிரிவு தலைமை எழுதுநராக பணி புரிந்து வருகின்றார்.

செய்திகளை சேகரிப்பதில் ஆர்வம் கொண்ட இவர் தினசரியாக வெளிவரும் 'தினக்கதிர்' பத்திரிகையில் 2000.06.01ம் திகதி தொடக்கமும், வாராந்தம் வெளிவரும் 'இடி' பத்திரிகையில் 2001.03.01ம் திகதி தொடக்கமும் நற்பிட்டிமுனை நிருபராக பணியாற்றி வருகின்றார். அத்தோடு அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தின் உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

பாடசாலை காலம் முதல் சமூக சேயையில் ஈடுபாடு காட்டிய இவர் தற்போது நற்பிட்டிமுனை ஜும்மா பள்ளிவாயல் அல்-மத்ரசதுல் நூரியாவின் ஆலோசகராகவும், கல்முனை சமாதான அமைப்பின் நற்பிட்டிமுனை - சேனைக்குடியிருப்பு ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், அகில இலங்கை முஸ்லலிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை நற்பிட்டிமுனை தினக்கதிர்வாசகர் வட்ட தலைவராகவும் இருந்து பொதுப்பணியாற்றி வருகின்றார்.

ஆங்கில கற்கைநெறி டிப்ளோமா, விஷேட கணினிப் பயிற்சிநெறி, தேசிய கணக்கியல் தொழில் நுட்பவியலாளர் கற்கை நெறி ஆகிய கற்கை நெறிகளைப் பயின்று சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## M. முஹம்மத் ஜெஸ்மின் JP

220, பிரதான வீதி ,
கல்முனை.


இவர் கல்முனை - 7 முத்தலிப் - பாத்திமா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக 1974.02.25ல் பிறந்தவர். கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவராவார். பாடசாலைக் காலத்தில் உதைப்பந்தாட்டம், பெட்மின்டன், மெய்வல்லுனர் போட்டிகளில் பிரகாசித்தவர். மாவட்ட ரீதியிலும் சம்பியனாகிய இவர் சிரேஷ்ட சாரணியராகவும் கடேற் வீரராகவும் இருந்துள்ளார்.

முதன்மை ஊக்கமும் சேவை மனப்பான்மையும் கொண்ட இவர், சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் நெஷனல் விளையாட்டுக் கழகத்தினை உருவாக்கினார். இக்கழகம்தான் பின்னர் பெயர் மாற்றம் பெற்று ஹொலிபீல்ட் ஆக உருவாகி இன்று தேசிய ரீதியில் முத்திரை பதித்துள்ளது. இதனோடு ஒட்டியதாக இலங்கை கிரிக்கட் அவதானிப்போர் சங்கமும் இயங்கி வருகின்றது. இரண்டினதும் தேசியத் தலைவரும் இவரே.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகங்களில் விளையாட்டுத் துறை சார்ந்த அனேக செய்திகளை வழங்கி வருவதுடன் இலங்கை வானொலியில் விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான அனேக தகவல்களை தொலைபேசி மூலம் வழங்கிவருகின்றார். இவர் வெளியிடும் விளையாட்டுச் செய்திகள் குறிப்பாக கிரிக்கட் பற்றிய விடயங்கள் அரிய பல தகவல்களையும் கொண்டிருப்பது இவரது தேடல்களின் கனதியைக் காட்டி நிற்கின்றது.

எடுத்த காரியம் எதுவானாலும் அதனை முடித்துக் காட்டுவதில் வல்லவரான இவர் பெரும் சமூக சேவையாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நளீம் எம். பதூர்த்தீன்

**230, பொது நூலக வீதி,**
**மருதமுனை - 03**

மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட மு.ந. முகம்மது பதூர்தீன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல் - ஹம்றா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை (உயிரியல் விஞ்ஞானம்) மருதமுனை அல் - மனார் தேசிய பாடசாலையிலும் பயின்றார். பள்ளிப்பருவம் முதல் இலக்கியத் துறை, பத்திரிகைத் துறை, எழுத்துத் துறை, சமூகசேவைப் பணி முதலியவற்றில் அதீத ஈடுபாடு காட்டி வருகின்றார்.

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் சிரேஷ்ட எழுதுனராக கடமையாற்றும் இவர் ''தினக்கதிர்'' பத்திரிகையின் மருதமுனை நிருபராகக் கடமையாற்றுவதோடு 1998 முதல் தினகன் வாரமஞ்சரியில் ''21ஆம் நூற்றாண்டின் கண்'' எனக் கணிப்பிடப்படும் கணனி தொடர்பான கட்டுரைகளை தொடராக எழுதி நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பாராட்டுகளைப் பெற்றதோடு மருதமுனை நழீம் எம். பதூர்தீன் என்ற பெயரில் இளம் எழுத்தாளர் வரிசையிலும் இடம்பிடித்துள்ளார்.

இன்றைய நவீன தொழில்நுட்ப உலகின் தேவையறிந்து கல்முனைப் பிரதேச மாணவர்களின் நன்மைகருதி மாணவர்களுக்குக் கணனிக் கல்வி புகட்டி குறிப்பாக மருதமுனை, பெரிய நீலாவணை அதனை அன்டியுள்ள பிரதேச பாடசாலைகளில் இன்று கணனி இயக்கும் திறன் பெற்ற மாணவர்களை உருவாக்கிய பெருமையோடு நின்றுவிடாது, இவர்களையும் இக்கணனி உலகோடு இணைத்துவிடும் இவரது பணி இன்றுவரை தொடர்கிறது. இவர் கணனித்துறையில் Dip - in -Computer Service, Dip - in -Computer Information Technology, Dip- in- Programing, Dip- in - Desktop Publishing, Auto CAD, N.C.C.A., Dip- in- Hardware Engineering ஆகியவற்றைக் கற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மருதமுனை அல் - ஹம்றா வித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயளாளராகவும், பழைய மாணவர் சங்க உதவிச் செயலாளராகவும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நலன்புரிச் சங்க பொருளாளராகவும், கல்முனை வலயக் கல்வி அலுவலக நலன்புரிச் சங்க செயலாளராகவும், வடக்கு கிழக்கு மாகாண எழுதுனர் சேவையும் அதனை ஒத்த சேவைகளுக்குமான சங்கத்தின் கணக்காய்வாளராகவும், இச்சங்கத்தின் அம்பாறை மாவட்டச் செயலாளராகவும், மருதமுனை அபிவிருத்திச் சங்கம், வெரித்தாஸ் வானொலி தமிழ்பணி நேயர் மன்றத்தின் இலங்கை அங்கத்தவராகவும் சேவையாற்றுவதோடு மருதமுனை றோயல் கிரிகட் கழகத்தின் வெகுசனத் தொடர்பு உத்தியோகத்தராகவும், வெஸ்ட் இளைஞர் கழகத்தின் வெகுசனத் தொடர்பு அலுவலராகவும், லீடர் அஷ்ரப் பவுண்டேசனின் வெகுசனத் தொடர்பு செயலாளராகவும் பணிப்பாளராகவும் மருதமுனை வெஸ்ட் பாலர் பாடசாலை, வெஸ்ட் ரைனி டொட்ஸ் ஆகியவற்றின் பணிப்பாளராகவும் கடமையாற்றுவதோடு குட்லக் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க ஆலோசகராகவும், கல்முனைப் பிராந்திய தினக்கதிர் வாசகர் வட்டாரத் தலைவராகவும், குட்லக் சர்வதேச அமைப்பின் இணைப்பாளராகவும் இயங்கி சமூகசேவையாற்றி வருவதோடு அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்க அங்கத்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவரின் சமூகப்பணி, பத்திரிகை, மற்றும் எழுத்துத்துறைக்கு ஆற்றிவரும் சிறந்த பணி ஆகியவற்றை ப் பாராட்டி 02.06.2001ல் திகதி பெஸ்ட் இளைஞர் கழகத்தின் பாராட்டு விழாவின்போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூத்த துனைத்தலைவருமான அல் ஹாஜ் யூ.எல்.எம். ஹனீபா (மருதூர்க்கனி) அவர்களால் இவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மருதமுனை முகம்மது நழீம் உம்மு ஸல்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரான இவர் மருதமுனையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் அல்ஹாஜ் ஐ.எல். இப்றாஹீம் ஹாஜியானி செய்தூன் பீபீ தம்பதியினரின் ஏக புதல்வியான பயிற்றப்பட்ட ஆசிரியை மிஹ்றூனா அவர்களைத் திருமணம் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1985 ஆம் ஆண்டு அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த மாமனிதர் அஷ்ரஃப் அவர்களை தைரியமூட்டி மீண்டும் கட்சிப்பணியில் ஈடுபடச் செய்த எம்.ஐ.எம். இஸ்மாயில், எம்.ரி. ஹசன்அலி ஆகியவர்களில் ஒருவரை ஈன்றெடுத்த மண்.

1986 ஆம் ஆண்டு கட்சியின் வரலாற்றில் முதலாவது பகிரங்கக் கருத்தரங்கை நடாத்துவதற்கான களம் அமைத்த மண்.

1989 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் சந்தித்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலின் போது வரலாறு காணாத ஜனத்திரளுடன் வெற்றிக்கொடி நாட்டிய முதலாவது எழுச்சி மாநாட்டை தாங்கிய மண்.

**இந்தப் புனித மண்ணின் மைந்தர்கள், முஸ்லிம் காங்கிரஸ் மூத்த போராளிகள் அனைவரும் எமது மறைந்த மாமனிதர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மறுமை ஈடேற்றத்துக்காகக் கண்ணீர் சிந்திப் பிரார்த்திக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cheap Palace



**சீப் பலஸ்**


**Main Street,**
**Maruthamunai, Kalmuani.**
**Tel: 067-29078, 29463**

**Branch:**
**126, Akkaraipattu Road,**
**New Bazaar,**
**Kalmuani.**
**Tel: 067-29939**

APPROVED AGENTS FOR ; Kelani Tyres and Ceat Tyres. Dealers of Imported Tyeres . Asia & Lumala Bicycles. fishing Nets and Yarns. General Merchants in Cement, Handloom Materials Etc.



# REEZA ELECTRICAL



**Dealers:** Electrical Cables, Accessories, T.V. Receiver, Antenna Booster, Makita Planer, Makita Drill, Makita Parts, Light Fittings, Sanitary Wares, PVC Pipes & Fittings, Water Pumps & Spare Parts, Electronic Spare Parts etc.

114/1, Main Street,
Kalmunai.
Tel: 067-20293



# AL - IHZAN MOTORS

*Al-Haj. A. B. THajoor*
*Managing Director*

**உங்களுக்குத் தேவையான**
**சகல விதமான**
**வாகனங்களுக்குமுரிய மின்சார**
**உதிரிப்பாகங்களுக்கு**

**இஹ்சான் மோட்டர்'ஸ்**
பிரதான வீதி.
அக்கரைப்பற்று – 01.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சாலித்தம்பி ஜமால்தீன்** (ஆசிரியர்)
158, **அல் பாத்திமியா வீதி,**
**அக்கரைப்பற்று - 01.** (KT/ 13)
T.P.**: 067-78829, 78545**

அக்கரைப்பற்று புதுப்பள்ளியடியைச் சேர்ந்த முஹம்மது இப்றாஹீம் சாலித்தம்பி - யூனூஸ் லெப்பை சுபைதா உம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வராகிய இவர் 1963.10.08ஆம் திகதி அக்கரைப்பற்றில் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை அக்/ அல்-முனவ்வறா வித்தியாலயத்திலும் இடைநிலை, இரண்டாம் நிலைக் கல்வியை முறையே அக்/ முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை), யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரி, கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

1992இல் ஆசிரியர் தொழிலில் இணைந்து கொண்ட இவர் அக்/ முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) கணித ஆசிரியராக கடமையாற்றுகின்றார். சமூக சேவை இயக்கங்கள் பலவற்றில் அங்கத்தவராக இருப்பதுடன் கருங்கொடித்தீவு - 06 கிராமோதைய சபையின் முன்னாள் தலைவராகவும் இருந்தார். தற்போது கல்முனை நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

செய்தித் துறையில் ஆர்வம் கொண்ட இவர் சக்தி வானொலிக்கு 2000.02.05ஆம் திகதி முதல் அக்கரைப்பற்று செய்தியாளராகக் கடமையாற்றிவந்த இவர் அக்கரைப்பற்று 01ஐச் சேர்ந்த முஹம்மது சரிபுத் தம்பி முபிதா ஆசிரியையை கடந்த வருடம் நவம்பர் 15 இல் திருமணம் செய்து ஒரு குழந்தைக்குத் தந்தையாகியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# A. முகமட் ஜௌபர்
## பொத்துவில் - 15

கிழக்கு மாகாணத்திலிருந்து கடந்த 5 வருட காலமாக பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கான செய்தியாளராக, கடமையாற்றி வரும் இவர் விசேடமாக லண்டன் B.B.C, ரொய்டர், அமெரிக்க செய்தி நிறுவனமான அசோசியேட் பிரஸ் (ஏ.பீ), இந்தியாவை தலைமையகமாகக் கொண்ட யு.என்.ஐ. ஆகியவற்றின் செய்தியாளராவர்.

உள்ளூர் செய்தி நிறுவனங்களான சக்தி ரீ.வீ., எம்.ரீ.வீ., ஐ.ரீ.என் என்பவற்றினதும் சண்டே டைம்ஸ், டெய்லி மிரர், தினக்குரல், தினக்கதிர், நவமணி, லங்காதீப ஆகிய பத்திரிகைகளினதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஆசிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் உட்பட பல்வேறு நிறுவனங்களுக்கும் கிழக்கில் நடைபெறும் அரசியல், யுத்தம், எல்லைப்புறங்களில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட இப்பிரதேச மக்களின் பல்வேறுபட்ட செய்திகளையும் தகவல்களையும் உடனுக்குடன் வழங்கி வருகின்றார். விஷேடமாக, அம்பாரை மாவட்டத்தின் எல்லைக்கிராமமான கோணகலையில் இடம்பெற்ற பொதுமக்கள் படுகொலை, திருக்கோவிலில் கடந்த 10 வருடங்களாக அகதிகளாக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அவல நிலை, வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் ஒரு இலட்சம் அகதிகளின் அன்றாடப் பிரச்சினை போன்ற செய்திகளை லண்டன் B.B.C, தொலைக்காட்சி என்பவற்றுக்கு வழங்கியதன் மூலம் உலகலாவிய ரீதியில் இவற்றை எடுத்துக்காட்டியும் உள்ளார். இச்சேவையை பாராட்டி B.B.C உலக விவகாரங்களுக்குப் பொறுப்பான செய்தியாளர் திரு. டேவிட் சொக்கொமன்ட் அவர்கள் நன்றியும், பாராட்டும் தெரிவித்து இவருக்கு விஷேட கடிதம் அனுப்பியதும் குறிப்பிடத்தக்கது.

அம்பாரை மாவட்டத்தில் கடந்த 10 வருட காலத்தில் விவசாயிகள் தமது நெல் உற்பத்தியை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளை 'சன்டே டைம்ஸ்' பத்திரிகையில் முழுபக்கத்திலான அறிக்கையொன்றினை வெளிக்காட்டி இருந்ததுடன் விவசாயிகளின் இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு பிறத்தலுக்கு இவர் வழிவகுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க தொன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்று மும்மூர்த்திகளென கற்றோரால் மதிக்கப்பட்ட இவர்கள் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களுக்கு கல்வி புகட்டிய ஆசான்கள்

# குருத்துவத்தை ஆராதிக்கும் (த்த) நற்குணசீலன் அஷ்ரப் அவர்கள்

- ஜனாபா. சித்தி அஹமட் தாஹிறா,

குருத்துவம் என்பது மிகவலிமை வாய்ந்தது. ஒரு மாணவனது வாழ்வில் ''கொங்கிறீட் அடித்தளம் போன்றது. மாணவனின் வாழ்வானது அமையும் குருவின் ஆசிர்வாதமும் சிரத்தையுமே என்பது அறியப்பட்ட ஒரு பெரிய உண்மை. அந்த வகையில் கல்முனையின் கல்வி வரலாற்றில் ஆண் பெண் மாணவர்களதும், ஏன் அஷ்ர.்.பினதும் கல்வி வரலாற்றில் குருத்துவம் மறக்கவோ, மறைக்கவோ முடியாத அளவு பங்களிப்பும், அர்ப்பணிப்பும், ஆசிர்வாதமும் கொண்டது. இதனை மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்கள் என்றும் நன்றியுடன் எவ்விடத்திலும் எடுத்துக்கூறி நினைவு கூறுபவராகக் காணப்பட்டார்.

அமைச்சர் அஷ்ர.்.ப் தனது ஆரம்பக் கல்வியை கல்முனைக்குடி அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை என்னும் தற்போதைய அல்அஷ்ஹர் வித்தியாலயத்தில் சுயபாஷாவில் கற்கத் தொடங்கியவர். அப்போது அப்பாடசாலையின் அதிபராய்க் கடமையாற்றியவர் மர்ஹூம் புலவர்மணி ஆ.மு. ஷரீபுத்தீன் அவர்கள். ஆரம்பப் பிரிவின் ஆசிரியராகக் கடமையாற்றியவர் இளையதம்பி வாத்தியார் என அழைக்கப்படும் மர்ஹூம் யூ.எல்.எம். காசீம் ஆசிரியர் அவர்கள் இஸ்லாம் அரபு மொழிப் போதனாசிரியராகக் கடயைாற்றியவர் மூத்ததம்பி ஆலிம் என அழைக்கப்படும் மர்ஹூம் எஸ்.எம்.ஏ. முஹம்மதிஸ்மாயில் ஆலிம் அவர்கள். இவர்களில் அஷ்ர.்.பின் இரத்த உறவினைச் சேர்ந்த மூத்ததம்பி ஆலிமும், திருமண உறவினைச் சேர்ந்த இளையதம்பி வாத்தியாரும். பிள்ளையை இனங் கண்டதனால் பிள்ளையின் விருத்தியில் கண்ணுங் கருத்துங் கொண்ட புலவர்மணியும் ஒன்றிணைந்து உருவாக்கிய ஒரு மாணவப் பொக்கிஷம்தான் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் எனும் அணையாத ஆற்றல் பேரொளி, அஷ்ர.்.ப் எனும் கனிஷ்ட கீழ்ப்பிரிவு மாணவன்தான் கல்முனைக்குடி ஆண்கள் பாடசாலையில் கற்றுக் கொண்டிருப்பவன். இரண்டாம் வகுப்பில் இளைய தம்பி வாத்தியாரின் வகுப்பில் ஒருநாள் செய்யக்கொடுத்த அனைத்துக் கணக்குகளிலும் 20% மட்டுமே பாஸ், மற்றைய 80% மும் பெயிலே. உடனே வாத்தியார் கூப்பிட்டு அடியோ அடி! அடித்துவிட்டு கொப்பியைக் கையில் கொடுத்து அஷ்ர.்.ப் நீ பெயிலாகக் கூடாதவன் நாளை நீ எனது எந்த உதவியும் இல்லாமல் அனைத்துக் கணக்குகளையும் சரியாகச் செய்து கொண்டு வரவேண்டும் எனக் கொடுத்தனுப்பப்பட்டவர். அடுத்த நாள் ஆசிரியரதோ, வீட்டினரதோ எவ்வித உதவியுமில்லாமல் அஷ்ர.்.ப் அத்தனை கணக்குகளையும் சரியாகச் செய்து கொண்டு வந்து பெயிலாகக் கூடாதவன் எனும் ஆசிரிய ஆசிர்வாதத்தை மெய்ப்பிக்கிறார். தான் எதிலும் பாஸாக முடியுமானவனே எனும் தத்துணிவினை தனக்கு முதன்முதலில் ஊட்டியவர் தனது ஆசிரியர் இளைய தம்பி வாத்தியார்தான் எனத் தனது கல்வி வாழ்வு சம்பந்தமாகக் கூறும் கூட்டங்களில் எல்லாம் நன்றியுடன் நினைவு கூறுவதுடன் ஆசிரியரின் மறுமை வாழ்வுக்காக பிரார்த்திப்பவராகவே தனது வாழ்நாளை முடித்துக் கொண்டவர் அமைச்சர் அஷ்ரப் அவர்கள்.

தீன் எனும் விடயத்தில் அஷ்ர.்.ப் எனும் மனிதன் என்றுமே சிரத்தையற்றிருந்தில்லை. அவர் மாணவனாய் இருந்தபோதும் சரி ஒரு சட்டத்தரணியாக மிளிர்ந்தபோதும் சரி ஒரு அமைச்சராய், குட்டி அரசராய் அள்ளிக் கொடுத்தபோதும் சரி அவர் அல்லாஹ்வின் அடியாராகவே தன்னை ஆக்கிக் கொண்டிருந்தார். அதற்குத் தனக்கு அடிநாதமாய் இருப்பது தனது ஆரம்ப இஸ்லாம் அரபு மொழி ஆசிரியர் மூத்ததம்பி ஆலிமும் அவரின் இஸ்லாமிய நெறிப்போதனையுமே என எப்பொழுதும் நன்றியுடன் நினைவு கூர்ந்து என்றும் பிரார்த்திப்பார் அமைச்சர் அஷ்ர.்.ப்.

ஆரம்பப் பிரிவின் உயர்வகுப்பானது ஐந்தாம் வகுப்பு. இவ்வகுப்பில் கல்வி கற்கும் அஷ்ரபிடம் ஒரு நீண்ட பேச்சினை எழுதிக் கொடுத்து இதனை நீ பேசியே ஆகவேண்டும் எனப்பணித்து அஷ்ரபில் உறங்கிக் கிடந்த பேச்சு எனும் பெரியதொரு ஆற்றலினை முன்கொணர்ந்து குடத்துவிளக்கைக் கோபுரத்தில் ஏற்றிவைத்தவர், என்றும் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததுபோல் சரிபுத்தீன் சேர் அஷ்ரபைக் கண்டு பிடித்தார் என்றும் அஷ்ரபால் மனம் நிறைந்த நன்றியுடன் நினைவு கூறப்படும் மாமனிதர். புலவர் மணி சரிபுத்தீனாவார்.

அந்தக் காலத்தில் மும்மூர்த்திகள் எனக் கற்றோர் சமூகத்தால் வர்ணிக்கப்படுபவர்கள் துருக்கித் தொப்பி அணிந்த இந்த மூன்று முதுசங்களுமாகும். இந்த மூன்று ஆசிரியப் பெருந்தகைகளினதும் விளை பொருள்தான் எமது இதயங்களிலெல்லாம் நிறைந்து ஏழைகளின் வாழ்வில் பல மாறுதல்களைச் செய்த மனம் நிறைந்த மாமனிதர் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்கள்

ஒரு மனிதன் முழுமை பொருந்திய ஒரு மனிதனாக இருப்பதற்கு அவன் தனது இருவழிப் பரம்பரையைப் பற்றியும் ஏழு தலைமுறைகளையாவது அறிந்திருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் ஏவல் இந்த ஏவலைச் சிரமேற்கொண்டு - அத்தகவல்களை பெறுவதற்காகவும் இ.்.லாஸின் தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்காகவும் மூத்ததம்பி ஆலிமுடன் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் செலவழித்த காலங்கள் மிக அதிகானமானதும் பெறுமதியானதுமாகும். இதனை நினைவு கூர்ந்து நன்றி செலுத்துவதற்காகவும்தான் பெயில் பண்ணக்கூடாதவன் என அடித்துக் கூறி ஆசிர்வதித்து தன்னுள் உறங்கிக் கிடந்த ஆற்றலை தட்டியெழுப்பி தன்னை வாழ்வுப் பயணத்தில் ஒவ்வொரு படியிலும் உயர்த்திவிட்டுக் கொண்டே செல்லும் இளைய தம்பி வாத்தியாரையும் அல் அஸ்-ஹர் வித்தியாலயத்தையும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்து அவர்களுக்காக மனமுருகி அல்லாஹ்விடம் பிரார்த்தித்த குருத்துவப் பணிவினை பெரும்பாலோரிடமும் காண்பது மிக அரிதிலும் அரிதாகும். இவ்வாசிரியர்களிடமும் இவர்கள் போன்றவர்களிடம் எத்தனையோ மாணவர்கள் கற்றிருப்பர், உயர்ந்திருப்பர் ஆனால் அவர்களெல்லாம் இவ்வாறு நினைந்துருகி பிரார்த்தித்ததனைக் காண முடிவதில்லை.

ஜனாபா சித்தி அஹமட் தாஹிறா,
(Mrs SAT. Jamaldeen)
ம.்.முத்* மகளிர் கல்லூரி, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AL-HAJ A.MUZZAMMIL

**546A, 1ST CROSS STREET**
**SAINTHAMARUTHU -16**

| | | |
|---|---|---|
| **Full Name** | : | Al-Haj. Aliyar Muzzammil |
| **NIC No.** | : | 423231939 V |
| **Date of Birth** | : | 18th November 1942 |
| **Civil Status** | : | Married - 1969 3 Kids |
| **Link** | : | Tele & Fax - 067-29558, Tele - 067 - 29896, 20278 Celtel - 072 - 67624 |
| **Address Office** | : | Assistant Director of Education for Sinhala Language<br>Zonal Education Office, Kalmunai. Tele - 067 - 29168.<br>Senior Tutor, Additional Language Improvement Course (ALIC).<br>Regional Centre, Km/Al-Hilal Vid., Sainthamaruthu. Tele - 067- 22874<br>Instructor, Department of Official Languages - Basha Mandraya,<br>341/7, Kotte Road, Rajagiriya (LTP/10/07/2001 of 23.05.2001 |
| **Trade Centre** | : | Photo Rio, 120A, Main Street, Kalmunai. Tele - 067-29895, 20278 |
| **Correspondence** | : | "Divaina"- Upali News Papers Ltd., Colombo-13.<br>Link - 01-345242, Fax - 01-344253<br>"Diyadama" (52) 174/4, Stanly Tilakaratna Mawatha, Nugegoda.<br>Tele - 829519 Fax - 829660, 869340 |
| **Studied** | : | An/Horowpothana Ruwanvelly Central College 1948 - 1954<br>Km/Zahira College, Kalmunai 1961 - 1967<br>Farm School Sammanthurai (Agriculture) 1968 - 1969<br>Teachers' Training College, Katukurunda, Kalutara 1971 - 1972<br>University of Colombo 1997 |
| **Qualification** | : | G.C.E. (O/L) 1963<br>Agriculture Teachers' Training 1969<br>Trained Teacher Sinhala Medium 1973<br>Diploma in Journalism 1998 |
| **Record of Service** | : | F.O. AMC,RO Batticaloa 1965.01.19 - 1966.09.30.<br>Assistant Teacher - Sinhala 1966.10.01 - 1980.12.31.<br>Instructor, Official Languages Dept.,<br>for Sinhala Language 1974 - to date.<br>SLPS - 1 1981.01.01 - to date.<br>Assistant Director of Education<br>for Sinhala Language 1991.03.21 - to date.<br>Tutor - ALIC - Ampara 1997.07.01-2000.06.31.<br>Senior Tutor - ALIC - Kalmunai 2000.06.01 - to date. |
| **Social Service** | : | Founder Secretary - Public Library, Sainthamaruthu 1969.<br>Ex. Director - EETCCS Ltd., 294, Galle Road, Colombo-03 1980 - 1986.<br>Secretary - Rehabilitation Society, Sainthamaruthu 1987 - to date.<br>Secretary - Nintavur Paravan Nadu Farmers' Organization 1998 - to date.<br>Ex. Kalmunai District Secretary - SLI Guru Sangamaya 1967 - 1977.<br>Trusty & Maraikayar - Jummah Mosque, Sainthamaruthu 1994 - to date.<br>President - Al-Ameen, TCCS., Sainthamaruthu - 16 1996 - to date.<br>Chairman - Gramodaya Mandalaya, Sainthamaruthu - 16 1986 - 1990. |
| **Literary Activities** | : | Published a book titled "Bsuva Ammanaya" 1990 (from the original-<br>Ola book Writen by Ahamadu Kutty Pulawar - 1864).<br>"Thaiolka Jeewithaya Sarala Yethum" (Sinhala Speaking Book 1997).<br>In Printing - "Podiyarum Oudahamum" |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இப்றாலெவ்வை ஜலீல்.

**2, அம்பாறை வீதி**
**(தென்கிழக்கு பல்கலைக்கழக எதிர்)**
**சம்மாந்துறை.**

**01. புனைப் பெயர்** :- ஊரோடி - சதுறை

**02. பிறந்த திகதியும், இடமும்** :- 1974.08.08. - சம்மாந்துறை

**03. தொலைபேசி** :- 067 - 60106, 067 - 60601

**04. வகிக்கும் பதவி** :- உதவி மாவட்ட ஆணையாளர் - சென்ஜோன் அம்பியுலன்ஸ் படைப்பிரிவு, மாவட்ட சாரணிய தலைவர்.

**05. செய்தித் துறைக்கான பங்களிப்பு** :- இவரை செய்தி ஊடகத் துறைக்கு ஈடுபடுத்தியவர்கள் வரிசையில் எம்.ஐ.எம். முஸ்தபா, ஏ.எல்.எம். சலீம், மீரா எஸ். இஸ்ஸடீன் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களின் உந்துதல்களினால் மட்டக்களப்பு பிரதேச பத்திரிகையான 'தினக்கதிர்', தினசரியில் இணைந்தார். அதன் மூலமாக ஊடகவியல் உலகில் ஒருவரானார்.

வழமையான செய்தி சேகரிக்கும் பணியை விட வித்தியாசமான ஒன்றை புரிய முன்வரல் வேண்டும் எனவும் நல்ல பல ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிய ஆசான் மீரா எஸ். இஸ்ஸடீன் அவர்களின் கருத்தின்படி ஆய்வியல் துறைக்குள்ளும் நுளைந்தார். தினக்கதிர் வார இதழில் ''ஊர்வலம்'' எனும் பிரிவினை பிரதம ஆசிரியர் எஸ்.எம்.ஜி இவருக்காக ஒதுக்கி கொடுத்துள்ளார்.

மேலும், ஆசான் மீராவின் ஆலோசனையின் பிரகாரம் ''இடி'' தேசிய வார இதழிலும் அடி எடுத்து வைத்து பின்தங்கிய பிரதேசங்களின் அவசியத் தேவைப்பாடுகள், கலாசாரச் சீரழிவுகள், நிகழ்கால அரசியல் ரவுண்டப்கள், ஊழல், மோசடிகள் இன்னும் பல விடயங்களினை ''ஊரோடி - சதுறை'' எனும் புனை பெயரில் எழுதிவருகின்றார்.

இலங்கையில் உயிர்வாழும் முஸ்லிம்களின் தேசிய வார இதழான ''நவமணியிலும்'' ஆசான் மீராவின் சிபாரிசின் பேரிலும் பிரதம ஆசிரியர் அஸ்ஹர் ஹாஜியாரின் உதவியுடனும் எழுதி வரும் இவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அங்கத்தவருமாவார். புதிதாக வெளியாகும் ''**தேடல் வெளிச்சம்**'' எனும் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

**06. பெற்ற விருதுகள்** :- இலங்கை சாரணிய சங்கத்தின் **அதிஉத்தம ஜனாதிபதி விருது** இலங்கை சர்வோதய சங்கத்தின் **சுவர்ண பத்ம விருது,** தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அம்பாறை மாவட்ட ரீதியில் சிறந்த சேவை திறனுள்ள **இளைஞர் விருது,** தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அகில இலங்கை ரீதியில் அதியுயர் சிரேஷ்ட சேவை புரிந்த இளைஞனுக்கான **தேசிய விருது.**

**07. பெற்ற பட்டங்கள்** :- ஸ்ரீ லங்கா யுனைட்டட் கராட்டி ஒக்கனைஸேஸன் அமைப்பினால் நடாத்தப்பட்ட கறுப்புப்பட்டி வீரர்களுக்கான சுற்றுப் போட்டியில் ''**சம்பியன்**'' பட்டம். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் ''**சிறந்த இளைஞன்**'' பட்டம் வழங்கியமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முழுப் பெயர் : முகைதீன் அப்துல் காதர் ஹரீஷா**

**முகவரி : 184, மஸ்ஜிதுல் அக்பர் வீதி,**
**மருதமுனை - 03**

| | | |
|---|---|---|
| புனை பெயர் | : | மருதமுனை ஹரிஷா (கலைப்பிரிகை) |
| பிறந்த திகதியும் இடமும் | : | 1980.09.06 - மருதமுனை |
| செய்தித்துறைக்கான பங்களிப்பு | : | 1999 இலிருந்து |
| கடமையாற்றும் ஊடகங்கள் | : | விருட்சம்<br>தினக்கதிர்<br>இடி |
| தொழில் | : | நூலக உதவியாளர் (மாற்றீட்டு நியமனம்) |
| விஷேட குறிப்புகள் | : | |

சிறு வயதிலிருந்தே எழுத்துத்துறையில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு நிறையவே இருந்தது. அதிலும் குறிப்பாக ஒரு பெண் பத்திரிகையாளராக வரவேண்டுமென்ற ஆசை அதிகம். இதற்கு இவர் தந்தையின் எழுத்துப்பணி கைகொடுத்தது.

முதன்முதலாக ஒரு கவிதை மூலமே இவர் எழுத்துத் துறைக்குள் நுழைந்தார். அதன் பின் சமூகத்தில் காணப்படும் குறைநிறைகளைச் சிறு சிறு கட்டுரைகளாக எழுதினார். இதற்கு தினகரன், வீரகேசரி, நவமணி, தினக்கதிர், இடி போன்ற பத்திரிகைகள் களம் அமைத்துக் கொடுத்தன.

இதுவரை பல்வேறுபட்ட வித்தியாசமான ஆக்கங்களை எழுதக் குவித்துக் கொண்டிருக்கும் இவருக்கு விருட்சம் பத்திரிகையின் செய்தியாளர் நியமனம் 1999.09.10ஆம் திகதி கிடைத்தது. மிக இளம் வயதில் இந்த நியமனம் கிடைத்ததையிட்டு இவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

அதனைத் தொடர்ந்து தினக்கதிர், இடி போன்ற பத்திரிகைகளில் செய்தியாளராக (உத்தியோகபற்றற்ற) கடமையாற்றி தனது எழுத்துப் பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

சிறுகதை, கவிதை போன்றவற்றிலும் ஆர்வம் உள்ள இவருக்கு செய்தியாளர் என்ற வகையில் பல்வேறு சவால்களுக்கும் விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டதுண்டு.

இருந்தாலும் இவரது இந்தப்பணிக்கு ஒத்துழைப்பும், நல்லறிவுரைகளையும் வழங்கி வரும் இவரது தந்தையையும், மூத்த பத்திரிகையாளர்களையும், பத்திரிகை ஆசிரியர்களையும், பத்திரிகை உலக நண்பர்களையும் இவர் மகிழ்ச்சியுடன் நன்றி கூறுகின்றார்.

இவர் பத்திரிகைத் துறையில் இன்னும் முன்னேறி, ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருந்து கொண்டு சேவையாற்ற வேண்டும் என்பதே இவரது அவாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்காய் போராடுகின்றவனே

- மர்ஹூம் அல் ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் -

நான் சாய்ந்து விட்டால், நீ அழக்கூடாது
அல்லாஹ்வின் நாட்டமின்றி
என்னை யாரும் இலக்காக்க முடியாது!
நான் வீழ்ந்து விட்டால்
உன் இதயம் வெடித்து விடும்
என்பதுவும் எனக்குத் தெரியும்!
என்றாலும்
உன் கடமையிலிருந்து நீ ஒதுங்கி விடக்கூடாது!

இந்த நாட்டில் இனிய இறை நாமங்களை
துதிப்பதற்கும்
இறுதி நபி இமயத்தை ஸலவாத்தால்
போற்றுவதற்கும்
சாட்சியம் இத்தீவில் நம் சமுதாயம் மாத்திரமே
போட்டுடைத்து அக்குடத்தை பொடியாக்கி
விட்டிடாதே!

நாற்பதாண்டுகளாய் நாதியற்று நாமிருந்தோம்
புற்பூண்டின் தனித்துவமும் இல்லாமல்
காய்ந்திருந்தோம்!

இன்றோ கேட்காத செவிகளையும்
கேட்க வைத்தோம்
பார்க்காத கண்களையும் பார்ப்பதற்கு
வழி சமைத்தோம்
பேசாமலிருந்த பேரினக் கூசாக்கள்
பேசும் காலம் பிறந்ததுவும் நம்மாலே!
கூசாமல் இன்னும் கூட்டிக் கொடுக்கின்ற
நாசகாரிகள் நசுங்குவதும் நம்மாலே!

பேசுவதாலும் வெறுமனே
பிதற்றுவதாலும் மாத்திரம்
பிரச்சினைகள் தீராது! இருந்தும் கூட
எங்களுக்கும் பிரச்சினைகள்
இருக்கின்ற சங்கதியை
இந்த உலகம் முழுவதற்கும் இயம்பிவிட்டோம்?
இனியென்ன?
பேசிக் கதைத்து பிரச்சினைகள் தீர்கின்ற
பாதைகளைத் தேடிடுவோம்
முடியாதென்றால்
அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும்
சாட்சியங்களை அழிக்க நிற்கும்
சண்டாளருடன் மோதிடுவோம்!

அவர்கள் ஒரு நாள்
வெகுவிரைவில்
இந்த நாட்டை இனிதாய் செய்திடுவர்
மரண ஓசைகளை மரணிக்கச் செய்திடுவர்!

ரத்த ஆறுகளை
அன்பினால் வற்றச் செய்திடுவர்
அவர்கள் வெகுவிரைவில்
பேரினவாதப் பேய்களின்
பிடரிகளைப் பிடித்து உடைத்திடுவர்
அவர்கள் வெகுவிரைவில் -
'இது எங்கள் நாடு எங்கள் யாவருக்குமே
இது எங்கள் நாடு எங்கள் யாவருக்குமே'
என்று முழங்கிடுவர்!

அந்தச் சிம்மக் குரல்கள்
இந்த உலகம் முழுவதையும் சென்றடையும்!
சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் பறங்கியர்கள்
எங்கள் எல்லோரினதும் இறைவன் ஒருவனே
என்று தக்பீரும் முழங்கிடுவர்!

புத்த பெருமானின் புனிதமான வாழ்வு முறை
கீதையின் போதனை -
இயேசுவின் இராஜாங்கம்
எல்லாவற்றிலும் இனியவை தேடியே
அல்லாஹ்வின் பாதையில் அருள்தேடி நிற்கின்ற
புதியதொரு உலகம் மிகவிரைவில்
பிறந்து விடத் துடிக்கிறது!

அவர்கள் ஒரு நாள் மிகவிரைவில்
மனித நேயமெனும் புதிய வதையினால்
மரணமெனும் புயற்காற்றை வென்றிடுவர்
அவர்கள் ஒரு நாள் வெகுவிரைவில்
சமத்துவ சமூகத்தைச் சரிக்கட்டித் தந்திடுவர்
அவர்கள் ஒருநாள் வெகுவிரைவில்
சந்தோசம் என்பதற்கு
இலக்கணமும் சொல்லிடுவர்
அவர்கள் ஒரு நாள் வெகுவிரைவில்
முஸ்லிம்கள் நாமென்ற
பெருமையை நிலை நாட்டி
இஸ்லாமியக் கொடியிங்கே பறந்திடவும் வழி
செய்வர்!

நன்றி : 'நான் எனும் நீ'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்குவதில் பல்லாயிரக் கணக்கான
மக்களின் நன்மதிப்பை வென்ற நிறுவனம்

# மௌலானா சன்ஸ்

சவூதி, குவைத், டுபாய், ஓமான், லெபனான் ஆகிய நாடுகளில் ஆண்,
பெண் இருபாலாருக்கும் உடனடி வேலை வாய்ப்புகள்.


# MOULANA SONS



**மௌலானா சன்ஸ்,**
640 1/1, ஆனந்தாக் கல்லூரி முன்பாக,
மருதானை வீதி,
மருதானை,
கொழும்பு - 10
தொ.இல. : 01 - 675719

இரண்டு வாரத்திற்குள் பயணம்
புதிய சப் ஏஜென்டுகளுக்கு
விசேட சலுகை

## தலைவா! உங்களை நாம் என்றும் நினைவு கூறுகின்றோம்



அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள்.
காரைதீவு சண்முக வித்தியாலயம்.
காரைதீவு.

# COMPRO




*Type Setting*
*Letter Typing*
*Desitation*
*Tutes*
*Book Publication*
*Front Page Design*
*Stancil Cutting*
*Laser & Colour printing*
*Scanning*
*etc...*

அனைத்து வித கணனி வேலைகளையும் செய்து கொள்ளவதற்கு அக்கரைப்பற்றில் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே நிறுவனம் **கொம்ப்றோ**

MAIN STREET, AKKARAIPATTU.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்கள் இப்படியும் கூறினார்கள்



G. நிமால்
சொர்ணம்
கல்முனை.


தலைவருக்கு ஒரு நினைவு மலர் வெளியிடுவது மகிழ்சியைத் தருகிறது. இவர் நமது பகுதிகளில் செய்த சேவைகளுக்கும் தமிழ், முஸ்லிம் என்ற பேதம் பாராமல் எல்லா மக்களையும் அணைத்துச் சென்ற தன்மையும் மறக்க முடியதவை இவர் தொடர்பாக நீங்கள் எடுக்கும் முயற்சிக்கு நிச்சயமாக எனது பங்களிப்பு கிடைக்கும்.

G. நிமால்



**கல்முனை நகரில் பிரதான வீதியில் தண்ணீரைப் பிரித்தால் கடைசியாக வரும் சொல்லையும் தலைநகரின் பெயரையும் சேர்த்து தனது விற்பனை நிலையத்திற்கு பெயர் சூட்டியுள்ள முஸ்லிம் வியாபார நிலையமொன்றின் உரிமையாளர் கூறியவை இவை;**

**"அவர் மௌத்தாப் பெய்த்தார் இதெல்லாம் விட்டுப்பொட்டு சும்மா இருங்க, நான் ரேடியோவில விளம்பரம் செஞ்சும், இப்ப என்ட எடத்துக்கு சாமான் வேண்ட சனம் வருகிதுமில்ல"**



**தலைவா!**
**உன்னைத் தொட்டிலாய்**
**சுமந்த பூமாதா**
**கண்ணீர் சிந்துகிறாள்**
**ஆகாயத் தாமரையில்**
**உன் றூஹு பிரிந்தற்காய்**



என். ரீ. அக்ரம்
**கணனி பக்க வடிவமைப்பாளர்,**
**கொம்ப்றோ ,**
**அக்கரைப்பற்று.**


**SAJEETHA HOTEL**




நாவுக்கு சுவையான சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும் நாடவேண்டியது

# சாஜிதா ஹோட்டல்

சகல விதமான சிற்றுண்டிகளையும் முன் கூட்டியே ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**கடற்கரை வீதி,**
**கோணவத்தை - 08,**
**அட்டாளைச்சேனை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையில் பஜாஜ் மோட்டார்
## சைக்கிள் விற்பனையில் முன்னோடி




4 ஸ்ரோக் (112CC) சக்தியான என்ஜின்
லீட்டருக்கு 65 கி.மீ. தூர ஓட்டம்

விஷேட விலை
103,500/=




4 ஸ்ரோக் (100CC) RACE தொழில் நுட்பத்தில் உருவான புதிய சக்தியான என்ஜின்
லீட்டருக்கு 87 கி.மீ. தூர ஓட்டம்

விஷேட விலை
69,950/=




4ஸ்ரோக் (100CC) RACE தொழில் நுட்பத்தில் உருவான புதிய சக்தியான என்ஜின்
லீட்டருக்கு 87 கி.மீ. தூர ஓட்டம்

விஷேட விலை
59,950/=

சகல விதமான உதிரிப்பாகங்களுக்கும்
எம்மை நாடுங்கள்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் ஏக விற்பனை முகவர்:

**BRILLIANT MOTORS**

304, Main Street,
Akkaraipattu.
T.P: 067- 77450
Fax: 067-77588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org